2

# நீங்காத நினைவுகள்

டாக்டர் ந.சுப்புரெட்டியார்



நீங்காத நினைவுகள் - II

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின்கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்

# என்தேவையை நீஅறிவாய்

வேண்டத் தக்க தறிவோய்நீ
    வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
    வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
    யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
    அதுவும் உன்றன் விருப்பன்றே[1]

—மாணிக்கவாசகர்

1. திருவா. குழைத்த-6.

# நீங்காத நினைவுகள்

(ஆசிரியரின் 83-ஆம் அகவை நினைவாக)

## (இரண்டாம் பகுதி)


பேராசிரியர்

டாக்டர் N. சுப்புரெட்டியார்

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.எச்.டி



விற்பனையுரிமை :

பால்நிலா பதிப்பகம்

43/11, மீர்பக்ஷி அலி தெரு,

இராயபேட்டை, சென்னை - 600 014.

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நீங்காத நினைவுகள் (இரண்டாம் பகுதி) |
| ஆசிரியர் | : | டாக்டர் N. சுப்புரெட்டியார் |
| பொருள் | : | பெரியோர்களைப் பற்றிய நினைவுகள் |
| © உரிமை | : | டாக்டர் N. சுப்புரெட்டியார் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மார்ச், 1999 |
| பக்கங்கள் | : | xii + 174 + viii = 194 |
| தாள் வகை | : | வெள்ளை, கிரவுன் 11 கி.கி |
| ஓவியம் | : | குமார் |
| அச்சுப் புள்ளி | : | 11.5 புள்ளி எழுத்து |
| ஒளி அச்சு | : | ஹைடெக் கிராஃபிக்ஸ் |
| அச்சிட்டோர் | : | இளங்கோ பிரிண்டர்ஸ் |
| வெளியீடு | : | VENKATAM PUBLICATIONS<br>AD-13 (Plot 3354)<br>Anna Nagar, CHENNAI - 600040 |

**விலை : ரூ. 37.00**

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

-திருநாவுக்கரசர்

அறிவியல் வல்லுநர்

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

பேராசிரியர் பெ.த. மனோகரன்

அவர்கட்கு

# அன்புப் படையல்

அறிவியல் அறிஞர்; நேர்மைசால் செம்மல்;
அளவிலாப் பெருமை சேர் அண்ணல்;
உறுபுகழ்ச் சென்னைப் பல்கலைக் கழகம்
உயர்வுறப் புத்திலக் கியத்தின்
துறைதனைக் கண்ட தனித்துணை வேந்தர்;
தூயநன் நெறிபடர் தோன்றல்;
நிறையுடை அறிஞர் மனோகரன் தனக்குஎன்
நேயமார் படையல் இப்பனுவல்!

**இராம. வீரப்பன்**

9, திருமலை சாலை
சென்னை-600 017
தொ.பே. 8266866

7.1.1999

# அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் என். சுப்புரெட்டியார் அவர்கள் பெற்றுள்ள அறிவார்ந்த தமிழ்வளமும், அவர் ஆற்றிவரும் அளப்பரிய தமிழ்த் தொண்டும் நாடும், ஏடும் புகழ் பெற்றவை. ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள்ளேயே வட்டம் போடும் "கிணற்றுத் தவளை" அல்லர் அவர். இமயச் சாதனைகளைக் குறிவைத்து சாதகப் பறவையைப் போல் விரிவானம் ஊடுருவிப் பறந்து கொண்டிருப்பவர் - பாடுபட்டுவருபவர்...

இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல், தத்துவம், சமயம் - குறிப்பாக அறிவியல் - போன்ற பல துறைகளிலும் அவரது பணிகளும், படைப்புகளும் மலர்ந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக ஆராய்ச்சி அறிவுடன் ஆன்மிக, சமய இலக்கியத் துறைக்கு அவர் ஆற்றிவரும் அரும்பணிகள் வரலாற்றின் முத்திரை பெற்றவை.

இதுவரை பலதுறைகளில் 114 நூல்கள் எழுதியுள்ள பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் இந்த நூலைப் படைத்துள்ளார்கள்.

இருபது பெருமக்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிக் குறிப்புகளைச் சுவைபட எழுதியுள்ளார்கள். ஒரு முதல் அமைச்சர், ஒரு கல்வி அமைச்சர், மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பல்கலைக்கழகத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், நீதிஅரசர், கல்விநிறுவனங்களின் பொறுப்பாளர்கள், பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், ஒரு மாணாக்கர் என்று சமுதாயத்தின் பலகூறுகளை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகளைத் தொகுத்துள்ளார்கள்.

மேலும் இந்த நூலில் ஒரு புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். பொதுவாக பல பெருமக்களின் சிறப்புக்களை, பெருமைகளை எடுத்துச் சொல்லும் நூலாக அமைந்துள்ளது; என்றாலும், நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தனது வாழ்க்கை வரலாற்றையும் ஊடுபாவைப் போல இணைத்திருப்பது ஒரு அருமையான நெசவுத் திறனாக அமைந்துள்ளது.

துறையூர் உயர்நிலைப்பள்ளி துவங்கி முடிவில் திருவேங்கடம் பல்கலைக்கழகம் வரை - பின் 15 மாதங்கள் தமிழ்க் கலைக்களஞ்சிய தலைமைப் பதிப்பாளராகப் பணியாற்றியது உட்பட - பல்வேறு கல்வித் தளங்களில் அவரது ஆக்கமும், ஊக்கமும் செயற்பாடுகளும் நீக்கமற நிறைந்து பரிமளித்திருக்கின்றன.

இக்காலகட்டங்களில் அவரோடு தோழமை பூண்டவர்கள், அவர் தொண்டுக்குத் துணைபுரிந்தவர்கள், ஏன், தொல்லை கொடுத்தவர்கள் உட்பட, பலரின் குணச்சித்திரங்கள் இந்நூலில் அகச்சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் அமைதியான ஒரு அறிவுப் பெட்டகம்... இலக்கியக் கருவூலம்... சிந்தனைச் சுரங்கம் என்ற சிறப்புகளுக்கு உரியவர் என்றாலும், இந்த நூலின் மூலம் மனிதர்களை எப்படி உணரவேண்டும், அவர்களை எப்படி ஆராயவேண்டும் என்ற மனிதநேய தத்துவத்தை உணர்த்தும் ஆய்வாளராகவும் விளங்குகிறார்கள்...

மனிதனின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிற போதும், சில குறைகளைத் தெரிவிக்கின்ற போதும் எப்படிச் சொல்லவேண்டும், அதிலே அடக்கமும், அன்பும், நயமும் எப்படி இணைந்து வரவேண்டும் என்பதற்கு அருமையான தமிழ்நடையில் இலக்கணம் படைத்துள்ளது இந்த நூல்.

இருளும், ஒளியும் கலந்த உலகம் போல நல்லதும் கெட்டதும் கலந்தவன்தான் மனிதன் என்ற எச்சரிக்கையோடு தாம் உறவாடிய

சான்றோர்களின் அருங்குணங்களை ஆழமாகத் தீட்டி, ஆகாத் தன்மைகளையும் மிக நாகரிகமாகப் புலப்படுத்தியுள்ளார்கள். அவரது இருவகை விமர்சனங்களிலும் அவரது மென்மையும், மனிதநேயமும், நட்பும், நன்றி உணர்வும் ஆதாரசுருதியாக விளங்குவதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தம்மை மிகவும் பாதித்தவர்களைக் கூடப் "பாதகர்கள்" என்று கூறத் துணியாத அவரது "தருமநெறி" தகைமை மிக்கது.

மேலும் இந்த நூலில் தமிழகத்தின் சுமார் 50 ஆண்டுகாலக் கல்வி வளர்ச்சியையும், அதற்கு வாய்ப்பளித்த சில களங்களையும் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தெளிவாகத் தொட்டுக் காட்டியுள்ளார்கள். திருவேங்கடம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, ஒருவகையில் அவரது தனிப்பட்ட சாதனையாகும். அதன் பரிணாமம் பற்றியும் பக்குவமாகக் கூறியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் கல்வித்துறையில் வாழ்ந்த பலவகை மனிதர்களைப் பற்றியும், அங்கே நிலவிய பல்வேறுபட்ட சூழ்நிலைகளைப் பற்றியும் சுவைசொட்டும் தமிழ்நடையில் இந்நூலில் அவர் நிரந்தரமாகப் பதிவு செய்துவிட்டார்.

பண்பட்ட மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இந்த நூலில் விளக்குகிறார். பண்பாளர்கள் எப்படி இலக்கியம் படைப்பார்கள் என்பதையும் இந்த நூல் விளக்குகிறது.

பேராசிரியர் சுப்புரெட்டியாரின் ஏனைய தமிழ்ப்பணிகள் போன்றே, இவை நிலையான பதிவுகள், அழியாத இலக்கியப் பெட்டகங்கள்!

**இராம வீரப்பன்**

# நூல்முகம்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்,
 நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்,
 செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்,
 உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன் பாதம்
 அடைக்கலமே![1]

- கவிமணி

காலவெள்ளத்தில் தோன்றியும் மறைந்தும் வரும் மனிதர் கூட்டங்களில் யானும் ஒருவன், மூன்றாண்டுப் பருவத்தில் தந்தையை இழந்து என் அன்னையால் பராமரிக்கப் பெற்றவன். திண்ணைப்பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு வரையில் இறையருளால் எனக்கு வாய்த்த நல்லாசிரியர்களால் உருவாக்கப் பெற்றவன். சிற்றினம் சேராமல் இறையருளால் காக்கப் பெற்றவ்ன். நல்ல நண்பர்கள் வாய்க்கப் பெற்றவன்.

என் நீண்டவாழ்வில் (அகவை 83) எத்தனையோ பெரியார்களுடன் பழகியவன். ஏற்கெனவே முப்பது பெரியார்களுடன் பழகியதால் நேரிட்ட நினைவுகளை "மலரும் நினைவுகள்" (1989) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளேன். இப்போது "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் இருபது பெரியார்களுடன் பழகியதால் ஏற்பட்ட நினைவுகள் பதிவு செய்யப்பெற்று நூலாக வடிவம் பெறுகின்றன. இப்பெரியார்களில் நிலக்கிழார் ஒருவர்; தன வணிகர்கள் இருவர்; பேராசிரியர்கள் மூவர்;

1. மலரும்மாலையும் - 1

பள்ளித் தாளாளர் இருவர்; அமைச்சர் இருவர்; வழக்குரைஞர்கள் இருவர்; ஆசிரியர் ஒருவர்; தமிழாசிரியர் ஒருவர்; மாணாக்கர் ஒருவர்; உச்சநீதிமன்ற நீதிஅரசர் ஒருவர்; துணைவேந்தர் நால்வர்.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய முன்னாள் அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறு; என் பேறும் கூட. இவர் பெருமையைப் பேசுவது கொல்லத் தெருவில் ஊசிவிற்ற கதையாகும். சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டையாண்ட நல்லமைச்சர்கள் சிலருள் இவர் முன்னணியில் நிற்பவர். பொது அறிவு மிக்கவர். இவருக்கு என் நன்றி.

இந்தநூல் அச்சாகுங்கால் பார்வைப் படிகளை மூலப்படியுடன் ஒப்புநோக்கியும் பார்வைப்படிகளில் எழுந்த பிழைகளைக் களைந்தும் உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப. சியாமளாவுக்கு என் அன்பு கலந்த நன்றி.

இந்நூலை புகழ்பெற்ற அறிவியலறிஞரும் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமாகிய, பேராசிரியர் பெ.த. மனோகரன் அவர்கட்கு அன்புப் படையல் செய்து அவர்பால் யான்கொண்ட அன்பையும் மரியாதையும் புலப்படுத்திக் கொள்கின்றேன். இவர்தம் நேர்மையான பணியால் முன்னாள் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலுவை ஒப்ப புகழ் எய்துவர் என்பது என் கணிப்பு. அப்பெருமைப் பேறுபெற இறையருள் துணைநிற்க அவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இவ்வரிய நூல் வெளிவருவதற்கு தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் ரூ. 8000/= நிதிஉதவி புரிந்த தமிழக அரசுக்கும் இதனை சிறந்த முறையில் வெளிவர ஒல்லும் வகையெலாம் உதவிபுரிந்த பால்நிலா பதிப்பகத்தாருக்கும் என் உளம்கனிந்த நன்றி.

என்னையும் ஒரு கருவியாகக் கொண்டு இருபது பெரியார்களுடன் யான்கொண்ட தொடர்புகளை நினைவிற்குக்

கொணர்ந்து அவை இலக்கியமாவதற்கு திருவருள் புரிந்த தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்து வளர்தலம் ஓங்கும் கந்தவேளை - சண்முகத்துய்ய மணி, உண்முகச் சைவமணி, சண்முகத் தெய்வமணியை - வாழ்த்தி வணங்குகிறேன். இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்குத் துணையாக இருந்த திருவருளையும் சிந்திக்கின்றேன்.

**புல்லும் பசுவிற்காம்; பூண்டும் மருந்திற்காம்;**
**கல்லும் திருக்கோயில் கட்டுதற்காம்;**
**ஏழை - எளியேன் எதற்காவேன்? செந்திநகர்**
**வாழும் வடிவேல வா![2]**

**-கவிமணி**

அடியேன்
**ந. சுப்புரெட்டியார்**

சென்னை-40
வைகுண்ட ஏகாதசி

2 மலரும் மாலையும் - முருகன் புகழ் மாலை-1

# உள்ளுறை


அன்புப் படையல் v

அணிந்துரை vi

நூல்முகம் ix

11. திரு. K.V.AL.M. இராமநாதன் செட்டியார் 185

12. திரு. C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் 192

13. நன்மாணாக்கர் மீனாட்சி சுந்தரம் 208

14. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் 219

15. துணை வேந்தர் G.N. ரெட்டி 233

16. பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி 252

17. துணைவேந்தர் டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி 278

18. பாண்டி முதல்வர்
    திரு. வை. வேங்கடசுப்பா ரெட்டியார் 321

19. ஜஸ்டிஸ் பா.ச. கைலாசம் 330

20. "வைணவச் செம்மல்"
    திரு. நா. வேணுகோபால் நாயக்கர் 343

# 11

# திரு. K.V.AL.M. இராமநாதன் செட்டியார்

குலங்கெடுத்துக் கோள்நீக்க
வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை
இடப்பா லானை
மலங்கெடுத்து மடதீர்த்தம்
ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ்
சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல
தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்ற
தாழ்ந்தோர்க்கெல்லாம்
நலங்கெடுக்கும் நம்பியை
நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற்
றுய்ந்த வாறே[1]

என்று நள்ளாற்றுச் செந்தமிழ்மாலையின் ஆறாவது திருப்பாடலுடன் இந்தப் பெருமகனாரிடம் அடியேன் கொண்ட தொடர்பு நீங்காத நினைவுகளாகத் தொடங்குகின்றது. இவர் உள்ளம் கனிந்த சிவநேசச்

1 அப்பர் தேவாரம் நள்ளாற்றுப் பதிகம் 6.20:6

செல்வராதலால் நெஞ்சுக்கு உகப்பாகும் நாவுக்கரசர் பெருமானின் திருப்பாடலுடன் இவர் தொடர்பு தொடங்கப் பெறுகின்றது.

இவர் வள்ளல் இராம. அழகப்பரின் ஒன்று விட்ட சகோதரர் (Cousin). காரைக்குடிக்கு அருகிலுள்ள கோட்டையூரைச் சேர்ந்த பெருமகன். அழகப்ப அறத்தின் நிரந்தர உறுப்பினர். தொடக்கத்தில் சில ஆண்டுகள் அந்த அறத்தின் செயலராகவும் பள்ளி கல்லூரிகளின் தாளாளராகவும் (Correspondent) பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றவர். இயல்பாகவே சத்துவ குணம் மிக்கவர்; எவரிடமும் இனிமையாகப் பேசுபவர். அதிர்ந்து பேசுவதை நிர்வாகத்தின் கீழ்ப்பணியாற்றுவோர் கண்டதில்லை என்று சொல்லுவதுண்டு. அக்காலத்தில் எவரும் "ஐயா" என்றே இவரைக் குறிப்பிடுவர். தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம்கூட இவரை "ஐயா" என்று குறிப்பிடுவதுடன் ஒருபடி மேலே சென்று "எல்லோருக்கும் ஐயாவாக இருப்பவர்" என்று கூறுவதையும், அவர்தம் சில நூல்களில் குறிப்பிட்டெழுதுவதையும் அக்காலத்தில் உள்ளோர் அனைவரும் அறிவர். வள்ளல் அழகப்பரே எல்லாக் கூட்டங்களிலும் இவரைக் குறிப்பிட்டு விளிக்கும்போது "My dear godly cousin" என்றே குறிப்பிடுவார். இங்ஙனம் "எல்லோருக்கும் ஐயாவாக இருந்த பெரியார்" என் மனத்தில் நீங்காத நினைவுகளாக இடம் பெறுகின்றார். (1950-60)

**நினைவு - 1 :** அவரவர் செய்யும் வினை அவரவரையே சாரும் என்பது இறைவன் விதித்த விதித்திட்டம். இதனால்தான் நுகர் வினையை (பிராரப்தத்தை) ஆருயிர் துய்க்கும்போது இறைவன் அதில் தலையிட்டுத் "தெய்விக முறைமை"க் கெடுப்பதில்லை.

**சரணமாகும் தனதாள்**
**அடைந்தார்க் கெல்லாம்**
**மரணமானால் வைகுந்தம்**
**கொடுக்கும் பிரான்[2]**
(தாள்-திருவடி)

2 திருவாய். 9.10:5

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கால் இதனை அறியலாம். எம்பெருமானைச் சரணம் அடைந்தவர்க்கு இறைவன் உடனே வீடுபேறு அளித்து விடுவதில்லை. நுகர்வினையை இவ்வுடல் அநுபவித்துத் தீரும் வரைக் காத்திருத்தல் வேண்டும் என்பது இதன் கருத்து.

ஆனால் ஒரு நிர்வாகத்தில் ஒருவருக்கு மேல்நிலையி லிருப்பவர்கள் - ஏன்? கீழ்நிலையில் இருப்பவர்களும் கூடத்தான் - செய்யும் வினை உடன் பணியாற்றுவோரையும் பாதிக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மை புலனாகாமல் போகாது. வள்ளல் அழகப்பர் இருந்தபோது பள்ளி கல்லூரி விஷயங்களில் அவரே முடிவு எடுப்பார். மேலாளர் அதனைத் தாளாளருக்கு நாசூக்காகத் தெரிவித்து அவரைக் கலப்பதுபோல் பேசி பிறகு அவரிடம் கையெழுத்து வாங்குவதே முறை. மாறாக, தாளாளரை மதியாமல் கடிதங்களில் கையெழுத்து மட்டிலும் வாங்கினால் தன்மானமுள்ள வருக்கு எப்படித் தாளாளர் பதவியிலிருப்பதற்கு மனம் ஒப்பும்? மேலாளர் தம்மிடம் நடந்து கொள்ளும் முறையும் பிறவும் தமக்கு ஒத்துவராததால் வள்ளல் அழகப்பர் இருக்கும்போதே K.V.AL.M.இராமநாதன் செட்டியார் தாளாளர் பதவியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். அழகப்பர் அறம் நிதி நெருக்கடியி லிருந்தபோது தம் சொந்தப் பணத்தை இலட்சக் கணக்கில் உதவி வந்தார். தம்மைத் தாளாளர் பதவியிலிருந்து விடுவித்துக் கொண்டதும் இத்தகைய நிதி உதவிகளையும் நிறுத்திக் கொள்வதுதானே இயல்பு? இதனால் தாம் அழகப்பர் அறத்தின்மீது வைத்திருந்த பற்றும் குறைந்தது. ஆனால் இந்த நிலையை வெளிக் காட்டிக் கொள்ளாது எப்பொழுதும் போலவே இயங்கி வந்தது. இவர்தம் சிறந்த பண்பாட்டுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. மனிதநேயம் இவர்தம் பிறவிக் குணமாக இருந்து வந்தது.

**நினைவு - 2 :** பதவி உயர்வுப் போட்டியில் "ஓர் அவதூறு செய்தியைக்" கிளப்பி என் போட்டிக்குத் தடைக்கல் எழுப்பப்

பெற்றது. முடிவு எடுக்கப் பெறாமல் பலமாதங்கள் தம்பித்தது. கம்பன் அடிப்பொடி இதனை நன்கு அறிவார். இந்நிலையில் அறிவியல் - சமூக இயல் சிந்தனை என் மனத்தில் எழுகின்றது. "தகுதியானவை பிழைத்து வாழும்" என்பது டார்வின் என்ற அறிவியலறிஞர் கண்டவிதி. இந்த விதியை வைத்துக் கொண்டு உயிர்ப் பிராணிகளின் வாழ்க்கைச் சரிதத்தை விளக்குவர் அந்த அறிவியலறிஞர். இவையெல்லாம் இயற்பியல் சூழ்நிலைக்குப் (Physical environment) பொருந்தும். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த மனிதனுக்கும் பொருந்தும். ஆறறிவு படைத்த மனிதன் படிப்படியாக வளர்ந்து நாகரிக ஏணியில் உயர்ந்த நிலையை அடைந்த பிறகும் இந்த விதி வேறொரு வகையில் செயற்படுகின்றது; விரும்பத் தகாத முறையிலும் செயற்படுகின்றது. இந்நிலையில் அறிஞர்கள் தோன்றி நீதிநூல்களை வகுத்து நல்லனவற்றைக் கடைப்பிடிக்கவும் அல்லனவற்றைப் புறக்கணிக்கவும் வழி செய்துள்ளனர். கடவுள், சமயம், நம்பிக்கைகள், பிறப்பு - இறப்புபற்றிய கொள்கைகள், இவ்வுலகம், உம்பர் உலகம், இறை உலகம் - என்பவை பற்றியெல்லாம் நிறைய நூல்களை எழுதி மன்பதை உய்வதற்கு வழி செய்துள்ளனர். ஆயின், இவையெல்லாம் பெரும்பாலோருக்குப் பொருந்துவதில்லை. ஒருவன் பாய்க்குள் புகுந்தால் மற்றொருவன் கோலத்திற்குள் புகுகின்றான். இத்தகையவர்களை நன்னெறியில் உய்க்க வேண்டுமாயின் அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

மனிதன் கண்ட தத்துவங்களெல்லாம் "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக" என்று சொல்லும் கொள்கை அளவில்தான் தலைநிமிர்ந்து செயற்படுகின்றது. இந்தக் கொள்கையும் விநோதமாகச் செயற்படுகின்றது. வல்லரசுகள் மெல்லரசுகள் முதலியவை யெல்லாம் கூட இந்தக் கொள்கையின் பரிணாம விநோதங்கள்தாம். இந்த உயர்ந்த சிந்தனையை விட்டுக் குறுகிய வாழ்க்கை வட்டத்திற்கு வருவோம். சாதாரண பணிவகையில் கூட விதிகள் வகுக்கப்பெற்று அவை நடைமுறைப் படுத்தப் பெறுகின்றன. இந்நிலையிலும் போட்டி, பொறாமை, வயிற்றிலடித்தல், சீட்டு கிழித்தல், தண்டனை முறைகள் எல்லாம் தாமாக எழுகின்றன;

பெற்றது. முடிவு எடுக்கப் பெறாமல் பலமாதங்கள் தம்பித்தது. கம்பன் அடிப்பொடி இதனை நன்கு அறிவார். இந்நிலையில் அறிவியல் - சமூக இயல் சிந்தனை என் மனத்தில் எழுகின்றது. "தகுதியானவை பிழைத்து வாழும்" என்பது டார்வின் என்ற அறிவியலறிஞர் கண்டவிதி. இந்த விதியை வைத்துக் கொண்டு உயிர்ப் பிராணிகளின் வாழ்க்கைச் சரிதத்தை விளக்குவர் அந்த அறிவியலறிஞர். இவையெல்லாம் இயற்பியல் சூழ்நிலைக்குப் (Physical environment) பொருந்தும். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த மனிதனுக்கும் பொருந்தும். ஆறறிவு படைத்த மனிதன் படிப்படியாக வளர்ந்து நாகரிக ஏணியில் உயர்ந்த நிலையை அடைந்த பிறகும் இந்த விதி வேறொரு வகையில் செயற்படுகின்றது; விரும்பத் தகாத முறையிலும் செயற்படுகின்றது. இந்நிலையில் அறிஞர்கள் தோன்றி நீதிநூல்களை வகுத்து நல்லனவற்றைக் கடைப்பிடிக்கவும் அல்லனவற்றைப் புறக்கணிக்கவும் வழி செய்துள்ளனர். கடவுள், சமயம், நம்பிக்கைகள், பிறப்பு - இறப்புபற்றிய கொள்கைகள், இவ்வுலகம், உம்பர் உலகம், இறை உலகம் - என்பவை பற்றியெல்லாம் நிறைய நூல்களை எழுதி மன்பதை உய்வதற்கு வழி செய்துள்ளனர். ஆயின், இவையெல்லாம் பெரும்பாலோருக்குப் பொருந்துவதில்லை. ஒருவன் பாய்க்குள் புகுந்தால் மற்றொருவன் கோலத்திற்குள் புகுகின்றான். இத்தகையவர்களை நன்னெறியில் உய்க்க வேண்டுமாயின் அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்.

மனிதன் கண்ட தத்துவங்களெல்லாம் "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக" என்று சொல்லும் கொள்கை அளவில்தான் தலைநிமிர்ந்து செயற்படுகின்றது. இந்தக் கொள்கையும் விநோதமாகச் செயற்படுகின்றது. வல்லரசுகள் மெல்லரசுகள் முதலியவை யெல்லாம் கூட இந்தக் கொள்கையின் பரிணாம விநோதங்கள்தாம். இந்த உயர்ந்த சிந்தனையை விட்டுக் குறுகிய வாழ்க்கை வட்டத்திற்கு வருவோம். சாதாரண பணிவகையில் கூட விதிகள் வகுக்கப்பெற்று அவை நடைமுறைப் படுத்தப் பெறுகின்றன. இந்நிலையிலும் போட்டி, பொறாமை, வயிற்றிலடித்தல், சீட்டு கிழித்தல், தண்டனை முறைகள் எல்லாம் தாமாக எழுகின்றன;

உள்ளிருந்து பின்னணியாக இயங்கும் மனிதன் இவை தாமாக எழுவனபோல் காட்டுகின்றான்; இவற்றை வைத்துக்கொண்டு இந்திர ஜாலங்கள் எல்லாம் புரிந்து வருகின்றான்.

கம்பன் அடிப்பொடி (சா.க) என்னைப் பார்த்து ஒருநாள், "ரெட்டியார். கவலைப்படாதீர்கள். ஆண்டவன் இருக்கின்றான். தாளாளருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பதால் நான் உள்நுழைந்து செயற்பட விரும்பவில்லை. அப்படிச் செய்தால் எதிர்விளைவுகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஒன்று செய்யுங்கள். K.V.AL.M. இராமநாதன் செட்டியார் (முன்னாள் தாளாளர்) இன்னும் இருபது நாட்களில் குடும்பத்துடன் மலேசியா போகின்றார்கள். கப்பலில் போகிறதாகச் சொன்னார்கள். முதலில் அவரைப் பார்த்து நடந்தவற்றை விவரமாக எடுத்துரையுங்கள். நானும் அவருக்குத் தங்கள் வருகையைப்பற்றியும் தொ.பே. மூலம் தெரிவித்து விடுகின்றேன். இதனால் நல்விளைவு நேரிடும் என்பது என் நம்பிக்கை" என்று கூறினார்.

ஒரு வாரம் கழித்துக் கோட்டையூர் சென்று "பூதியாக" அவதூறு செய்தியைக் கிளப்பி என் பதவி உயர்வுக்குத் தடைக்கல் எழுப்பப் பெற்றிருப்பதை விவரமாக எடுத்துரைத்தேன். அப்போது அவர் நல்ல நாள் பார்த்து பயணத்தை மேற்கொண்டு பொது விடுதியில் தங்கியிருந்தார். நான் அவரைப் பார்த்தது பொது விடுதியில்தான். "மணியன் (அழகப்பர் அறத்தின் மேலாளர்) வேலைதான் இது" என்று கண்டுகொண்டார். மணியன் நடவடிக்கை பிடிக்காமல் தாம் தாளாளர் பதவியை விட்டொழித்ததாகவும் கூறினார். "கவலைப்படாதீர்கள், ரெட்டியார், ஆண்டவன் இருக்கின்றான். அவன் வழி காட்டுவான்" என்று சொல்லி விடைகொடுத்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் K.V.AL.M. இராமநாதன் செட்டியார் முக்கியமான பலரைப் பார்த்துத் தாம் மலேசியா போவதாகப் பயணம் சொல்லிக் கொண்டிருந்தார். C.V.CT.V வேங்கடாசலம் செட்டியாரைப் பார்த்து பயணம் சொல்லிக் கொண்ட

போது, "ரெட்டியார் பதவி உயர்வு "இழுபறியாகக்" கிடக்கின்றது. தடைக்கல் எழுப்பப்பெற்ற செய்திகளை எல்லாம் அறிந்து கொண்டேன். வள்ளல் அழகப்பர் நல்ல நல்லவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து நியமனம் செய்திருக்கின்றார். உங்கள் காலத்தில் அவர்கட்குத் தொல்லை கொடுத்து மனம் நோகச் செய்யாதீர்கள். உடனே ரெட்டியாருக்குப் பதவி உயர்வு ஆணை அனுப்புங்கள். ஆணையின் நகலை வானூர்தி அஞ்சல் வழி எனக்கு அனுப்புங்கள். நான் மலேசியா சென்றதும் முதலில் இந்த ஆணையின் நகலைப் ப்ார்க்கவேண்டும். அப்படியில்லையானால் இதே காரணத்தைக் கூறி நிர்வாக சுமையிலிருந்து விலகிக் கொள்ள நேரிடும்" என்று கூறியதாக எனக்குத் தெரிந்தது. இறையருள் இப்படியெல்லாம் செயற்படுவதை எண்ணும்போது மயிர்க் கூச்செறிகின்றது. "ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே" என்ற அப்பர் வாக்கை நினைத்துக் கொண்டேன்.

நினைவு - 3 : 1958-இல் கோலாலம்பூர் (மலேசியா) பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு விளம்பரம் ஒன்று வந்தது. நான் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். மிகச் சிறந்த முறையில் விண்ணப்பம் வானூர்தி அஞ்சல் தாளில் (Air Mail Paper) அச்சிட்டு (அச்சிட்ட சான்றிதழ்கள், நன்னடத்தை சான்றிதழ்கள், எழுதி வெளியிட்ட நூல்கள்பற்றி இதழ்களில் வந்த மதிப்புரைகள் முதலியவற்றுடன்) அனுப்பிவைத்தேன் (ஆறு படிகள்) K.V.AL.M. இராமநாதன் செட்டியார் அவர்கள் அப்போது கோலாலம்பூரில் இருந்தார்கள். அவர்கள் எனக்கு அனுப்பிய தகவலின்படி கிடைக்கும் போலிருந்தது. எனக்கு, என் மனைவி, என் தாயார், இரு குழந்தைகள், இருவர்கட்குப் பயண அனுமதிச் சீட்டு (கடவுச் சீட்டு - Passport)கள் கூட வாங்கி வைத்திருந்தேன்.

இதன் குழுப்பட்டி (Panel) இலண்டனில் தயாரிக்கப்பட்டது என்றும், அந்தப் பட்டியில் என் பெயர் முதலில் இருக்கிறதென்றும், 99% கிடைக்கும் என்றும் K.V.AL.M. இராமநாதன் செட்டியார்

# 12

# திரு. C.V. CT.V. வேங்கடாசலம் செட்டியார்

**அறிவுஅற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகாது அரண்[1]**

என்பது வள்ளுவம், மானிடர்களாகப் பிறந்தவர்கள் அனைவருக்கும் இறைவனால் நல்கப் பெற்றது அறிவு. எல்லோருக்கும் இஃது ஒரே அளவில் இருப்பதில்லை. கற்றவர்களையும் கல்லாதவர்களையும் கூர்ந்து நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகும். தார்ன்டைக் (Thorndike) என்ற மேனாட்டுக் கல்வி வல்லுநர் இந்த அறிவுபற்றி ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் இறைவனால் நல்கப் பெற்ற ஒருவருடைய அறிவு,

$$G = S_1 + S_2 + S_3 + S_4 \ldots\ldots\ldots S_n$$

என்ற சமன்பாட்டில் அமைந்திருப்பதாகக் கருதுவார். இதில் G என்பது பொது அறிவைக் குறிக்கும் காரணிகை (Factor). இஃது ஆளுக்கு ஆள் தரத்தில், அளவில், வேறுபட்டிருப்பது. $S_1$ , $S_2$ , $S_3$ .... என்பன ஒருவருடைய கணிதத் திறமை, இலக்கியத் திறமை, பொறியியல் திறமை, இசைத் திறமை, ஓவியத் திறமை முதலியவற்றைக் குறிக்கும். G பயிற்சியால் மிகுவதில்லை. $S_1$ , $S_2$ , $S_3$ .... என்பவை பயிற்சியால் பெருகி வளரும், Gயின் தன்மைக்கேற்ப, $S_1$ , $S_2$ , $S_3$ .... பெருகும்; அளவும் மாறுபடும். ஒருவரிடம் G அதிகமாக அமைந்திருந்தால் $S_1$ , $S_2$ .... முதலியவையும் பெருகி

1 குறள். - 421

வளரும். G அதிகமாக இருப்பவர் பொறியியலில் பயிற்சி பெற்றால் அவர் பெரிய பொறியியல் வல்லுநராக வளரும் வாய்ப்பினைப் பெறுவர். Gயின் அளவு குறைவாக இருப்பின் அவர் ஒரு தொழில் முதல்வர் (Foreman) அளவுதான் வளரமுடியும். பொது வாழ்க்கையில் கல்லாதவர்களும் கற்றவர்களும் பல்வேறு துறைகளில் தாம் ஆற்றும் பணிகளில் அவரவர்தம் திறமை வேறுபாடுகளைக் காண்கின்றோம்.

✪ ✪ ✪

வள்ளல் அழகப்பர் உயிரோடு இருந்தபொழுதே திரு. K.V.AL.M. இராமநாதன் செட்டியார் அழகப்பர் அறத்தின் செயலாளர் பொறுப்பையும், பள்ளி கல்லூரிகளின் தாளாளர் பொறுப்பையும் கழற்றிக் கொண்டார். அந்த இடத்தில் அறத்தின் உறுப்பினராக இருந்த திரு. C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் நியமிக்கப் பெற்றார். இவர் செட்டிநாட்டு அரசர் சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் மாப்பிள்ளை. உயர்நிலைப் பள்ளி, கல்லூரிப் படிப்பு அதிகம் இல்லாவிடினும் நிர்வாகத்தில் தலைசிறந்தவர் என்ற புகழ் இவருக்கு உண்டு. அக்காலத்தில் அறிவுக் கூர்மையுடையவர் என்று எல்லோராலும் பாராட்டப்பெற்றவர். பல ஆண்டுகள் இந்தியன் வங்கி இயக்குநராகவும் இராமநாதபுரம் மாவட்ட வாரியத் தலைவராகவும் (District Board President) பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றவர். அலுவலக நடைமுறைகளையும் அங்குப் பணியாற்றும் பல்வேறு நிலை ஊழியர்களின் பணிமுறைகளையும் நன்கு தெளிந்தவர். அழகப்பர் அறத்தின் செயல் பொறுப்பையும் பள்ளி, கல்லூரித் தாளாளர் பொறுப்பையும் மிகச் சிறந்த முறையில் நிர்வகித்து வந்தார் என்பதை அக்காலத்தில் பணியாற்றிய நான் நன்கு அறிவேன்.

**நினைவு - 1 :** பொறுப்பேற்றவுடன் முதல் வேலையாக நிர்வாகத்தில் உள்ள முதல் ஓட்டையை அடைத்தார். அழகப்பர் அறத்தின்கீழ் அழகப்பர் மாண்டிச்சோரி பள்ளி, அழகப்பர் தொடக்கநிலைப் பள்ளி, அழகப்பர் முன்னேற்பாட்டுப் பள்ளி, அழகப்பர் மாதிரி உயர்நிலைப் பள்ளி என்ற நான்கு பள்ளிகளும்;

அழகப்பர் கலைக் கல்லூரி, அழகப்பர் உடற்பயிற்சிக் கல்லூரி, அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அழகப்பர் பொறியியற் கல்லூரி, அழகப்பர் பாலிடெக்னிக் என்ற ஐந்து கல்லூரிகளும், கல்லூரிகட்குப் பல உணவு விடுதிகளும் இருந்தன. ஒவ்வொரு நிறுவனத் தலைவர்களும் அவரவர் பொறுப்பிலுள்ள வங்கிக் கணக்குகளில் ஒவ்வொரு கணக்கிலும் (1) பாங்கி இருப்பு (2) கையிருப்புத் தொகைகளைக் குறிப்பிட்டு வெள்ளிதோறும் பணம் பற்றிய அறிக்கைகளைத் தாளாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற சுற்றறிக்கையை அனுப்பினார். இதனால் பலருக்கு எலும்பிலேயே சுரம் கண்டது. கலைக் கல்லூரி முதல்வர் ஏ.என்.தம்பி "எங்கள்மீது ஐயப்படுவதுபோல் தோன்றுகிறதே! உங்கள் சுற்றறிக்கை" என்றாராம். அதற்குத் திரு. செட்டியார், "நான் யார்மீதும் ஐயப்படவில்லை. ஒரு முறையை நடைமுறைப் படுத்துகிறேன்" என்றாராம். தொடர்ந்து, "பல்லாயிரக்கணக்கான தொகை வங்கியில் செலுத்தப்படாமல், கையிருப்பில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். உணவு விடுதி மேலாளர் ஒருவர் ரூபாய் பன்னிரண்டாயிரத்தைத் தம் மகள் திருமணத்திற்குப் பயன்படுத்தியிருப்பதாகவும் அறிகிறேன். முதல்வர் என்ற முறையில் தங்கட்குப் பொறுப்பு உண்டு. ஆனால் இவற்றை எல்லாம் சரிபார்க்க நேரம் இராது. சுற்றறிக்கையில் கண்ட முறையைக் கடைப்பிடித்தால் தவறுதல்கள் நடைபெற வாய்ப்பு இராது" என்றும் கூறினாராம். இந்த முறை சிறந்தது. தவறு இருப்பின் தணிக்கையில் தவறு செய்பவர் அகப்பட்டுக் கொள்வர்.

இது தவிர வசூல் தொகையில் செலவு கூடாது. தேவையான ரூ. 1000/= அல்லது ரூ. 2000/= நிரந்தர முன்பணமாக வைத்துக் கொண்டு செலவு செய்யலாம். அந்தந்த மாதம் செலவு செய்த தொகைக்கு காசோலை மூலம் பணம் எடுத்துக்கொண்டால் நிரந்தர முன்பணம் அப்படியே இருக்கும். செலவுகட்கு உறுதிச் சீட்டுகள் (Vouchers) வைத்துக் கொள்ளும் முறையும் இருக்கவேண்டும். இம்முறையைக் கடைப்பிடித்தால் பணவிஷயத்தில் எந்தவித தவறுதல்களும் நேரிடாமல் இருக்க வாய்ப்பு இருக்கும். இஃது துறையூரில் என் நிர்வாகத்தில் கடைப்பிடித்த முறையாகும்.

நினைவு - 2 : வள்ளல் அழகப்பர் சிவப்பேறு அடைந்ததும் (ஏப்பிரல் 1957) கல்லூரி நிதிநிலை சீர்கேடடைந்தது. ஆசிரியர்கட்கும், இதர ஊழியர்கட்கும் மாத ஊதியம் தரும் நிலையை அது தொட்டது. உடனே எல்லாக் கல்லூரி தளவாடங்கள், அறிவியல் ஆய்வுவகச் சாமான்கள், பொறியியல் கல்லூரித் தளவாடங்கள், பொறியியல் கல்லூரியைச் சார்ந்த இயந்திரச் சாதனங்கள் முதலியவற்றை யு.கோ. வங்கியில் பத்து இலட்சத்திற்கு அடகு வைத்துத் தற்காலிகமாக நிலையைச் சமாளித்தார். "உழைத்து மாதக் கடைசியில்தானே ஊதியத்தை எதிர்பார்க்கின்றனர் ஆசிரியர்கள்? ஊதியத்தையே நம்பி வாழ்கின்றவர்களின் குடும்பம் எப்படி நடைபெறும்? மன அமைதியற்றுப் போனால் எப்படி அவர்கள் திறமையாகப் பணியாற்ற இயலும்?" என்றெல்லாம் சிந்தித்து இந்த முடிவு எடுத்தார். கம்பெனிகட்குத் தரவேண்டிய பாக்கியைச் சற்றுத் தள்ளிப் போடலாம் என்று கருதினார். இத்தகைய பொருளாதார சாணக்கியம் இவரைத் தவிர எவர் மனத்தில் உதிக்கும்? கூட்டத்தில் பேசும்போது "நான் நடைமுறைப் பொருளாதார வல்லுநன்" (I am a practical expert in economics) என்று சொல்லிக் கேட்போரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்.

இவருடைய பொருளாதார நிபுணத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக இன்னொரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகின்றது. 1960 ஆகஸ்டு முதல் திருப்பதியில் பணியேற்றாலும் 1966 மே மாதம் வரையில் என் குடும்பம் காரைக்குடியில்தான் இருந்து வந்தது. இதனால் ஆண்டிற்கு மூன்று முறை விடுமுறை காலத்தில் காரைக்குடியில் தங்கியிருப்பது வழக்கமாக இருந்தது. இக்காலத்தில் (1965-திசம்பர் என்பதாக நினைவு) அழகப்பர் பொறியில் கல்லூரியில் ஒரு பெரிய கண்காட்சி (Exhibition) நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனைக் கண்டு களிக்க - என் மக்களுக்கு காண்பிக்க-இரு குமாரர்களுடன் பொருட்காட்சிக்குச் சென்றிருந்தேன்.

அப்போது தாளாளர் செட்டியாரும் தில்லி, சென்னையி லிருந்து வந்த சில முக்கிய அதிகாரிகளுடன் கண்காட்சியைச் சுற்றிவந்து கொண்டிருந்தார். நான் அவரை ஓரிரு நிமிடங்கள்

சந்தித்து அவருடன் உரையாடினேன். "ஐயா, நான் இருந்தபோது அழகப்பர் அறத்தின் நிதிநிலை சரியாக இல்லை. ஐந்தாண்டுகட்குப் பின் இப்போது நிதிநிலை எவ்வாறு உள்ளது?" என்று வினவினேன். அவரும், "டாக்டர். ரெட்டியார், நீங்கள் இருந்தபோது அறம் மாதத்திற்கு 75 ஆயிரம் வட்டிகட்ட வேண்டியிருந்தது. இப்போது அறத்திற்கு 75 ஆயிரம் வட்டி வருகின்றது" என்று இரத்தினச் சுருக்கமாகச் செப்பியது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. ஒரு பொருளாதார நிபுணர் / கணிதப் பேராசிரியர்போல் விளக்கிய திறன் வேறு எவரிடம் காணமுடியும்? இத்தகைய தனித்தன்மை வாய்ந்தவர் தாளாளர் செட்டியார் அவர்கள்.

**நினைவு - 3 :** திரு. C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் தம் நிர்வாகத்தில் பணிபுரிபவர்களின் திறமை, நடத்தை, செயல்திறன், முதலியவற்றை விரைவில் அளந்தறிந்து கொள்வதில் சமர்த்தர். எப்படியோ என் திறமை யோக்கியதை முதலியவற்றை மதிப்பீடு செய்து அறிந்து கொண்டு விட்டார். அக்காலத்தில் வள்ளல் அழகப்பர் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் நான் ஒருவனே எழுத்துலகில் பணியாற்றிப் புகழோங்கி நின்றவன் என்பதை அறிந்து கொண்டு விட்டார். திரு. இராய.சொ., திரு. சா.கணேசன் (கம்பன் அடிப்பொடி) திரு. சொ. முருகப்பா இவர்களுடன் நெருங்கிப் பழகியதையும் தினமணிச்சுடர் (ஞாயிறு மலர்), தமிழ் நாடு (ஞாயிறு மலர்) சில சமயம் அமுதசுரபி, கலைமகள். இவற்றில் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்ததையும், **தமிழ்ப் பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை** (வள்ளல் அழகப்பருக்கு அன்புப் படையல்), **கல்வி உளவியல்** போன்ற பணியாற்றும் துறைக்குப் பயன்படக்கூடிய நூல்களையும் கண்டு என்னை நன்கு அறிந்து கொண்டு விட்டார். "**காலமும் கவிஞர்களும்**" என்ற கட்டுரை நூலையும் வெளியிட்டு இவருக்கு அன்புப் படையாக்கியிருந்தேன். "இவன் சிறந்த உழைப்பாளி; தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன்" என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார். இதனால் என்மீது தனிப்பட்ட முறையில் பாசமும், நேசமும், மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தமை பல நிகழ்ச்சிகளால் அறிந்து கொள்ள முடிந்தது.

சந்தித்து அவருடன் உரையாடினேன். "ஐயா, நான் இருந்தபோது அழகப்பர் அறத்தின் நிதிநிலை சரியாக இல்லை. ஐந்தாண்டுகட்குப் பின் இப்போது நிதிநிலை எவ்வாறு உள்ளது?" என்று வினவினேன். அவரும், "டாக்டர். ரெட்டியார், நீங்கள் இருந்தபோது அறம் மாதத்திற்கு 75 ஆயிரம் வட்டிகட்ட வேண்டியிருந்தது. இப்போது அறத்திற்கு 75 ஆயிரம் வட்டி வருகின்றது" என்று இரத்தினச் சுருக்கமாகச் செப்பியது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. ஒரு பொருளாதார நிபுணர் / கணிதப் பேராசிரியர்போல் விளக்கிய திறன் வேறு எவரிடம் காணமுடியும்? இத்தகைய தனித்தன்மை வாய்ந்தவர் தாளாளர் செட்டியார் அவர்கள்.

நினைவு - 3 : திரு. C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார் தம் நிர்வாகத்தில் பணிபுரிபவர்களின் திறமை, நடத்தை, செயல்திறன், முதலியவற்றை விரைவில் அளந்தறிந்து கொள்வதில் சமர்த்தர். எப்படியோ என் திறமை யோக்கியதை முதலியவற்றை மதிப்பீடு செய்து அறிந்து கொண்டு விட்டார். அக்காலத்தில் வள்ளல் அழகப்பர் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் நான் ஒருவனே எழுத்துலகில் பணியாற்றிப் புகழோங்கி நின்றவன் என்பதை அறிந்து கொண்டு விட்டார். திரு. இராய.சொ., திரு. சா.கணேசன் (கம்பன் அடிப்பொடி) திரு. சொ. முருகப்பா இவர்களுடன் நெருங்கிப் பழகியதையும் தினமணிச்சுடர் (ஞாயிறு மலர்), தமிழ் நாடு (ஞாயிறு மலர்) சில சமயம் அமுதசுரபி, கலைமகள். இவற்றில் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்ததையும், **தமிழ்ப் பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை** (வள்ளல் அழகப்பருக்கு அன்புப் படையல்), **கல்வி உளவியல்** போன்ற பணியாற்றும் துறைக்குப் பயன்படக்கூடிய நூல்களையும் கண்டு என்னை நன்கு அறிந்து கொண்டு விட்டார். **"காலமும் கவிஞர்களும்"** என்ற கட்டுரை நூலையும் வெளியிட்டு இவருக்கு அன்புப் படையாக்கியிருந்தேன். "இவன் சிறந்த உழைப்பாளி; தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன்" என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார். இதனால் என்மீது தனிப்பட்ட முறையில் பாசமும், நேசமும், மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தமை பல நிகழ்ச்சிகளால் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு சமயம் கேரள முதலமைச்சர் நம்பூதிரி பாடு (பொதுவுடைமைக் கட்சி) காரைக்குடிக்கு வருகை புரிந்திருந்தார். அவருக்குக் கல்லூரி எல்லாவற்றையும் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார் தாளாளர் திரு. C.V.CT.V. வேங்கடாசலம் செட்டியார். திரு. சா.கணேசன் கட்சி வேற்றுமையின்றி எல்லாப் பெரியார்களுடன் நன்கு பழகுபவராதலாலும், அழகப்பர் அறத்தின் முக்கிய உறுப்பினராதலாலும் அவரும் நம்பூதிரிப்பாடுடன் வந்து கொண்டிருந்தார். வேறு முக்கியமான சிலரும் கும்பலாக வந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டம் பயிற்சிக் கல்லூரிக்கு வந்தபோது நேராகச் செட்டியாரவர்கள் முதலமைச்சர் நம்பூதிரிபாடை என் அறைக்கு இட்டு வந்து என்னை முதலமைச்சருக்கு அறிமுகம் செய்து வைத்தது எனக்கு வியப்பினை விளைவித்தது. "இவர்தான் தமிழ்ப் பேராசிரியர் திரு. ந. சுப்புரெட்டியார், சிறந்த தமிழறிஞர். பல இதழ்கட்குக் கட்டுரைகளை வழங்குபவர். பல துறைநூல்களின் ஆசிரியர். "தானுண்டு தன் வேலையுண்டு" என்றிருப்பவர், இப்போது அணுவைப்பற்றி நூல் எழுதிக் கொண்டிருப்பவர். இவரால் கல்லூரிக்கு நல்ல பெயர். மாணவர்களிடம் செல்வாக்கு மிக்கவர்" என்று அறிமுகம் செய்து வைத்தார்.

அதன் பிறகு நானும் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன். இச்சமயத்தில் சா.க. அவர்கள் தாளாளரிடம் "திரு. ரெட்டியாரின் "பதவி உயர்வு" இழுபறியாகக் கிடக்கின்றதே!" என்று சொல்ல, அவரும் "இதனை விரைவில் முடிக்க வேண்டும்" என்று பதில் உரைத்தார். தாளாளரும், திரு. சா.க. வும் கருத்து வேறுபாடுடையவர்கள். இதற்காகத் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொண்டால் காரியத்திற்குக் குந்தகம் விளைந்து விடுமோ என்று எச்சரிக்கையாக இருந்து "சந்தடிவாக்கில் கந்தகப்பொடி காற்பணம்" என்றாற்போல பட்டும் படாதவாறு சொல்லிவைத்தார். இறையருள் இருந்தமையால் காரியம் பழமாயிற்று. எல்லோரும் பின்னர் முதல்வர் அலுவலகத்திற்குச் சென்றோம். ஏனைய பேராசிரியர்களும் வந்து சேர்ந்தனர். எல்லோரையும் தாளாள்ர் கேரள முதல்வருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு, கூட்டம் வேறு நிறுவனத்தை நோக்கிச் சென்றது.

நினைவு - 4 : செட்டி நாட்டுப் பகுதியில், வேறு செல்வச் செழிப்புள்ளவர்கள் வாழும் பகுதிகளில் பல்வேறு மூடப் பழக்கங்கள் நிலவி வருவதைக் காணலாம். செட்டி நாட்டுப் பகுதியில் நிலவி வரும் பழக்கம் ஒன்று உண்டு. ஆண்களில் சிலர் நவரத்தின மோதிரங்களையும் பெண்களில் சிலர் நவரத்தின டாலர்களையும் அணிந்து வருவது வழக்கமாக இருந்தது. நவரத்தினங்களாவன: மாணிக்கம் (Ruby), பவளம் (Coral), வைரம் (Diamond), மரகதம்-பச்சை (Emerald), வைடூரியம் (Lapis lafzull), முத்து (Pearl), நீலக்கல் (Sapphire), கோமேதகம் (Sardoyx), புஷ்பராகம் (Topaz) என்பன. இவை ஒன்பதும் ஒன்பது கோள்கட்குக் குறியீடுகள். ஒவ்வொரு கோளுக்கும் இது இது என்ற கணக்கும் உண்டு. மோதிரத்தில் இவை கோயில்களில் கோள்கள் அமைந்திருப்பதைப்போல் அமையுமாறு கட்டப்பெற்றிருக்கும். இத்தகைய மோதிரத்தைத் தரித்துக் கொண்டிருப்பவர்கட்கு "கிரகதோஷம்" இராது என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்துவருகின்றது. இங்ஙனமே நவரத்தின டாலர் தரித்துக் கொண்டிருக்கும் மகளிருக்கும் "கிரக தோஷம்" இராது என்று நம்புகின்றனர்.

இதைப்போலவே பச்சை அல்லது நீலக்கல் ஒன்று இல்லத்தில் இருந்தால் "அதிர்ஷ்டம்" இருந்து கொண்டே இருக்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. "நாலும் தெரிந்த" திரு. சி.வி.சிடி.வி. வேங்கடாசலம் செட்டியாரிடமும் இந்த நம்பிக்கை இருந்து வந்தது. காரைக்குடியில் இருந்தபோது நான் வழக்கமாக மாலை நேரத்தில் அமரும் கடையொன்றில் M.S. இராசமாணிக்கம் செட்டியார் இதனைச் சொன்னார். "காரைக்குடியில் எமகாதகத் தரகர் ஒருவர் உண்டு. அவர் உங்கள் சி.வி.சிடி.வி.யையே மசிய வைத்து ஏமாற்றிவிட்டார்" என்றார். அந்தத் தரகரே என்னிடம் "MSR பாருங்கள். இன்று ஒரு பெரிய நபரை ஓர் அமுக்கு அமுக்கி விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கானாடு காத்தான் (செட்டிநாட்டின் பெயர்) என்றார். அவரிடம் 2½ அங்குல நீளம் 1½ அங்குலம் அகலம் ஓர் அங்குலம் கனம் உள்ள ஒருபச்சைக்கல் இருந்தது. இதனை அவர் சி.வி.சிடி.வி.யின் தலையில் கட்டவே

சென்றார். பொதுவாகத் தரகர்கள் சாதுர்யமாகப் பேசுபவர்கள். அவர்களுக்குள்ளும் இந்தத் தரகர் எமகாதகர். இங்கிதம் அறிந்து செட்டியாரைப் பேட்டி கண்டுவிட்டார். "ஐயா, ஒரு பச்சை எனக்குக் கிடைத்தது. அதனை வாங்கும்போதே உங்கள் நினைவுதான். அஃது உங்களிடம் இருந்தால் இராசி என்றுதான் கொண்டு வந்துள்ளேன்" என்று சொல்லியவண்ணம் பச்சை வண்ணத்தாளில் சுற்றி மேலும் ஒரு வெள்ளைத்தாளில் சுற்றி வைத்திருந்த "பச்சையை" மெதுவாக எடுத்து நீட்டினார். செட்டியாருக்கு இத்தகைய பொருள்மீது பற்றும், இதுபோன்ற பொருள் தம்மிடம் இருந்தால் இதன் இராசியால் தம் செல்வம், செல்வாக்கு எல்லாம் மேன்மேலும் பெருகும் என்ற அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதை நன்கு அறிந்தவர் தரகர்; சரியான கொம்பைத்தான் பிடித்தார்.

செட்டியார் அதனைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அவர்தம் முகபாவனையிலிருந்து அவருக்குப் பச்சைமீது பற்றும், பாசமும் வளர்கின்றன என்பதைச் சரியாகக் கணிக்கின்றார் தரகர். இதற்குள் தரகர் தம் மனத்திற்குள்ளே அதன் விலையைத் தீர்மானித்து விடுகின்றார். "சரியப்பா, சரக்கு எனக்குப் பிடித்திருக்கிறது. என்னவிலை?" என்று செட்டியார் கேட்க, "அதிகம் இல்லை முதலாளி, ஒரு பத்தாயிரம்தான்" என்று தரகர் சொல்ல, உடனே செட்டியார் உள்ளே சென்று பத்தாயிரமாக நூறு ரூபாய் நோட்டுகளைத் தந்து பச்சையைப் பெற்றுக் கொண்டார். பச்சையைப் பரிவுடன் பெற்றுக் கொண்ட செட்டியாரின் முகத்தில் பிரகாசத்தைக் கண்ட தரகர், "முதலாளி, இந்த அற்புத வஸ்துவை எவரிடமும் காட்டாதீர்கள். தண்டவாளப் பெட்டியின் அடியில் போட்டு வையுங்கள்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார். இரண்டு மூன்றாண்டுகள் கழித்து செட்டியார் மும்பை செல்லநேர்ந்தது. நினைவாகப் பச்சையை எடுத்து வைத்துக்கொண்டார். மும்பையில் ஓர் இரத்தின வியாபாரியிடம் காட்டி மதிப்பு போடும்படி சொல்ல, அந்த வியாபாரி "யார் இதைத் தந்தது? வெறும் கண்ணாடித்துண்டு. ஐந்து ரூபாய் கூட இதற்கு விலை இல்லை" என்று சொல்லிவிட்டார். "படுபாவி என்னையே ஏமாற்றி விட்டானே" என்று நினைத்துக் கொண்டார் செட்டியார்.

ஊர் திரும்பியதும் முதல் வேலையாகத் தரகரைச் சந்திக்க வேண்டும் என நினைத்து, "டிரைவர், காரை எடுத்துக் கொண்டு காரைக்குடி செல். அந்தத் தரகன் (பெயரைச் . சொல்லி) கல்லுக்கட்டியில்தான் சுற்றிக் கொண்டிருப்பான். எப்படியாவது அவனைக் கண்டு நான் சொன்னதாகக் கூட்டி வா" என்று ஆணையிட்டார். டிரைவருக்கு ஒன்றும் புரியவில்லை. செட்டியார் எப்படியோ ஏமாந்து விட்டார் என்று மட்டிலும் புரிந்தது. காரைக்குடி வந்து தரகரைக் கண்டுபிடித்து அவனைக் காரில் கூட்டிக் கொண்டு சென்றார் டிரைவர். வண்டியில் போகும் போதே தரகரின் மூளை செயற்படத் தொடங்கியது. டிரைவரை, "என்ன விஷயமாக என்னைக் கூட்டி வருமாறு சொன்னார் செட்டியார்?" என்று கேட்க அவர் "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கைவிரித்து விட்டார்.

விரைவில் கார் கானாடுகாத்தானை அடைந்தது. செட்டியாரைக் கண்ட தரகர் ஒரு கூழைக் கும்பிடு போட்டு நின்றார். "டேய் படுபாவி, என்னையே ஏமாற்றி விட்டாயே!" என்று கோபத்துடன் கேட்டார் செட்டியார், "என்ன முதலாளி, பச்சையை யாரிடமாவது காட்டினீர்களா?" என்று பதற்றத்துடன் கேட்க, அவரும் "மும்பையில் ஓர் இரத்தின வியாபாரியிடம் காட்டினேன், அவர் "ஓர் ஐந்து ரூபாய் கூட இதற்கு மதிப்பு இல்லை. இது வெறும் கண்ணாடி"' என்கின்றான் என்று சொல்ல, தரகர் "என்ன முதலாளி, நான்தான் இதனை யாரிடமும் காட்டாதீர்கள். இதை மதிக்க ஒருவருக்கும் தெரியாது என்றேனே. ஏன் முதலாளி காட்டினீர்கள்?" என்று செல்லமாகக் கொஞ்சி, "ஒன்றும் பேசாமல் பெட்டியின் அடியில் போடுங்கள்!" என்று கூறினார்.

தொடர்ந்து, "இது வந்தபின் உங்கள் செல்வாக்கையும் செல்வத்தையும் கவனித்தீர்களா? உங்கட்கு என்ன குறை? கல்லூரிகட்குத் தாளாளராக இருக்கின்றீர்கள். எட்டுத்திக்கும் உங்கள் புகழ் டால் அடிக்கின்றது. கொடைக்கானல் தொழில் காமதேனு போல் சுரந்து கொண்டிருக்கின்றது. இன்னும் பாருங்கள். நீங்கள் எவ்வளவோ உயர்வீர்கள்" என்று புகழ்ந்து பேசினார். "அப்படித்தான் அந்த முட்டாள் இதைக் கண்ணாடி என்று சொல்லிவிட்டாலும், இந்த

ஏழை இந்தப் பெரிய முதலாளியிடம் ஒரு பத்தாயிரம் சாப்பிடக் கூடாதா?" என்றும் சொல்ல, "சரி சரி, போப்பா; நன்றாக இரு" என்று சொல்லி விடைகொடுத்தார். பச்சைக் கண்ணாடியைப் "பச்சைக்கல்" என்று பச்சையாகப் பொய் சொல்லி ஏமாற்றி விட்டதைத் தெரிந்தும், அந்தப் "பச்சைக்கு" தண்டவாளப் பெட்டியின் அடியில் புகலிடம் தந்து வாளா இருந்து விட்டார். பச்சையின்மீதுள்ள நம்பிக்கை - மூடப்பழக்கம் - இன்னும் தளரவில்லை. "ஏ பச்சையம்மா, நீதான் இந்த ஏமாறும் பேர்வழிகளைக் காப்பாற்ற வேண்டும். பச்சையை விற்கும் தரகர்களையும் காப்பாற்றுவதும் நின்கடமைதான். அவர்கள் ஏழைகள் அல்லவா? நீயும் ஏழைபங்காளன்தானே!" இந்தச் செட்டியார் என்னிடம் மிக்க அன்புள்ளவர். பல நன்மைகளைச் செய்தவர். இன்று அவர் இல்லை.

**நினைவு - 5** : வள்ளல் டாக்டர் அழகப்பர் திருநாடு அலங்கரித்த பின்னர் அழகப்பர் அறத்தின் தலைவராக அக்காலத்தில் தமிழகத்தின் கல்வி - நிதி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் நியமிக்கப் பெற்றார். என் பதவி உயர்வு பற்றி இவரிடம் குறிப்பிட்டிருந்தேன். திரு. சி.வி.சிடி.வி. அவர்கட்கு இதுபற்றி நன்கு தெரியும். தவிர, என்பதவி உயர்வுக்குத் தடைக்கல்லாக எழுப்பிய அவதூறு செய்தியைப் பற்றியும் அவர்தம் புதிர்க் கதிர்ப் பார்வை (X - ray vision) நன்கு அறிந்திருந்தது. (இது பற்றி அடியேனுக்கு ஒன்றும் தெரியாது). அவதூறு செய்தியின் கர்த்தாக்கள் மூவர்; மூவரும் பார்ப்பனர். இது ஒரு முக்கோண விசைகள் போல் (Triangle of forces) செயற்பட்டது. இத்திட்டப்படி ஒன்று: என்னைச் சீட்டுக்கிழித்து வெளியில் அனுப்பிவிடுவது: இரண்டு: பதவி உயர்வு இல்லாமல் செய்து விடுவது. இறையருளால், பெரியோர்களின் துணையால் இந்தவிசைகள் "தீயினில் தூசாயிற்று." இது பின்னர் விவரிக்கப்பெறும்.

என் பதவி உயர்வு உறுதி என்பதைத் தாளாளர் பலமுறை தெரிவித்திருந்தார் நேரில் அடியேனைக் கானாடு காத்தானில்தமது இல்லத்தில் சந்திக்குமாறு ஆள் மூலம் சொல்லியனுப்பியிருந்தார். ஏதாவது "அசம்பாவிதம்" நடக்கக் கூடுமென்று சா.க. எச்சரித்ததால்

தயங்கினேன். கல்லூரியில் தாளாளர் அலுவலகத்தில் சந்திக்கத் தயாரானேன். இச் செய்தியை திரு. இராய.சொ. மூலமும் சொல்லி யனுப்பியிருந்தார். சா.க. எச்சரிக்கையை எடுத்துக்கூறி என் தயக்கத்தைத் தெரிவித்தேன். "ரெட்டியார் துணிவாகச் செல்லுங்கள். ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்றால் நான் முன்னின்று காப்பேன்" என்று கூறி கானாடு காத்தான் போகுமாறு பணித்தார். "அவர் என்னிடம் சொல்லியதைப் பார்த்தால் ஏதோ விஷயம் உங்களிடம் சொல்லப் போவதாகத் தெரிகின்றது" என்றும் சொன்னதால் துணிவு பிறந்தது.

நினைவு - 6 : கானாடுகாத்தான் சென்று தாளாளரிடம் பேசிய பிறகு அச்சந்திப்பு என் நன்மைக்காகவே என்பது தெரியவந்தது; மிகவருந்தினேன். ஒருநாள் காலை 7.30க்குச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு (ஒரு மணி நேரம் தாமதமாக வருவதற்கு இசைவு கோரி முதல்வருக்குச் செய்தியனுப்பிவிட்டு) கானாடு காத்தான் சென்று தாளாளர் இல்லத்தை அடைந்தேன். வீட்டிலுள்ள வேலையாள் செட்டியார் நீராடுவதாகத் தெரிவித்தான். நான் தாழ்வாரத்தில் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றேன். செட்டியார் நீராடி முடித்தபிறகு - வெளியில் வரும்போது - என்னைக் கீழ்ப்பார்வையால் கண்டு விட்டார். காணாதவர்போல் சென்று அரைமணி நேரத்தில் பூசையை முடித்துக்கொண்டு அமர்ந்து கொண்டு வேலையாளிடம், "பேராசிரியர் ரெட்டியார் வந்து கொண்டிருக்கின்றார்; உள்ளே வரச்சொல்" என்று சொல்லி யனுப்பினார். நானும் உள்ளே சென்று வணக்கம் தெரிவித்து நின்றேன். அமருமாறு பணித்தார்; அமர்ந்தேன். செட்டிவீட்டில் மேசை நாற்காலி முதலியவை இரா. நல்லவிரிப்பு போடப் பெற்றிருக்கும் உள்கட்டிலும் வெளிக்கட்டிலும். உள்கட்டில்தான் நாங்கள் உட்கார்ந்தோம். சமையல்காரனிடம் "இரண்டு தட்டுகள் கொணர்க" என்று சொல்ல, அவனும் இரண்டு தட்டுகள் கொணர்ந்து வைத்தான். நான் சிற்றுண்டியை முடித்துதான் வந்ததாகச் சொன்னேன். "பத்துக்கல் தொலைவு வந்தபிறகு அது வயிற்றில் இராது இங்கும் கொள்ளலாம்" என்றார்.

விருந்தோம்பலுக்குப் பேர்போனவர்கள் நகரத்தார்கள். தாளாளர் செட்டியாரவர்கள் சிற்றுண்டி விருந்தில் மிக நன்றாகக் கவனித்தார்கள். பேசிக்கொண்டே சிற்றுண்டி உண்டு, காஃபியையும் அருந்தினேன். பேச்சுவாக்கில் "ரெட்டியார், கல்லூரிவளாகத்தில் உங்கட்கு மூன்று விரோதிகள் உள்ளனர்" என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "இந்த அளவுக்குக் கூர்ந்து கவனித்து என்னைக் காக்கும் நிர்வாகத்தின்கீழ், அதுவும் தங்கள் சீரிய தலைமையின் கீழ்ப் பணியாற்றுவது என் தவப்பயன்" என்றேன். "தாங்கள் மாவட்ட வாரியத் தலைவராக இருந்தபோதும், இந்தியன் வங்கியின் இயக்குநராக இருந்தபோதும் தாங்கள் ஆங்காங்கு ஆற்றிய தொண்டைப்பற்றி நிறையக் கேள்வியுற்றிருக்கின்றேன்" என்று மேலும் கூறி "அத்தகைய உயர்பண்பை இப்போது தங்களிடம் நேரில் காண்கின்றேன்" என்றேன்.

''முக்கரணங்களாலும் பிறருக்குத் தீங்கு செய்யாத அடியேனுக்கு எப்படிப் பகைவர்கள் உண்டானாரோ அறியேன். இஃது என் ஊழால் வந்ததா?" என்று கூறினேன் வருத்தத்துடன். "மூவரில் உங்கள் தோழ ஆசிரியர்களில் ஒருவர் (பெயர் கூட குறிப்பிட்டார்); மற்றவர் மாதிரிப் பள்ளித் தலைமையாசிரியர் மகாகணபதி அய்யர்; மூன்றாமவர் மணியன். இந்த மூவரும்தான் "அவதூறு செய்தியின் தந்தையர்கள்" உங்கள் தோழ ஆசிரியர் மூலம் மாதிரிப்பள்ளித் தலைமையாசிரியர் → அவர் மனைவி → மணியன் மனைவி → மணியன் என்றவர்கள் மூலம் கடத்தப்பெற்று, என் காதிற்கு எட்டச் செய்து, நடவடிக்கை எடுக்குமாறு மணியன் தொந்தரவு செய்கின்றான்". என்றார். மேலும் "அப்பா மணியன், இது ரெட்டியார் மீது சுமத்தப்படும் அபாண்டப்பழி; இஃது இறைவனுக்கே அடுக்காது" என்று கூறியதாகவும் சொன்னார். தொடர்ந்து "எங்கள் செட்டியார்கள் மூலம் வேறொருவருக்குப் பேராசிரியர் பதவி தருமாறு பரிந்துரை வருகின்றது. அலெக்ஸாண்டர் ஞானமுத்து ஒரு கிறித்தவரை மனதில் வைத்துக்கொண்டு ஏதேதோ செய்கின்றார். நீங்கள் ஒருவர்தான் உங்கள் காலில் நின்று, உங்கள் பல்வேறு நற்பணிகளைக் கூறி என்னை நேரில் அணுகுகின்றீர்கள். இறைவனும் எனக்கு

மனிதர்களை அளவிடும் திறமையை அளித்திருக்கின்றான். உங்கள் முதல்வர் முதலியாரோ முதுகெலும்பு இல்லாத புழு. அஞ்சாமல் உங்கள் கடமையைச் செய்து வாருங்கள். தக்க சமயத்தில் பதவி உயர்வு உங்கட்கு வரும்" என்ற உற்சாகமூட்டினார்; "போய் வாருங்கள்; இவற்றைத் தெளிவுபடுத்தவே இராய.சொ. மூலமும் பிறர் வாயிலாகவும் சொல்லியனுப்பினேன்" என்று கூறி வழியனுப்பினார். ஒன்றுக்கும் பற்றாத அடியேன்மீது பாயும் இறைவனின் கருணை வெள்ளத்தை நினைந்த வண்ணம் கல்லூரிக்குப் பகல் பதினோரு மணிக்கு வந்து சேர்ந்தேன்![2]

நினைவு - 7 : என் பதவி உயர்வு நடைபெற்ற நிகழ்ச்சி இதில் விவரிக்கப் பெறுகின்றது.[3] இது நீங்காத நினைவாக வெளிவருகின்றது. எங்கள் முதல்வர் துரைக்கண்ணு முதலியாரின் மகள் திருமணம் விழுப்புரத்தில் நடைபெற்றது. அதையொட்டிக் காரைக்குடி சுப்பிரமணியபுரத்தில் எங்கள் கல்லூரி ஆசிரியர்கட்கும், சிப்பந்திகட்கும் ஒருவிருந்து அளித்தார் (பகல் 12 மணிக்கு). அதற்குத் தாளாளர் செட்டியாரும் அறக்கட்டளை அலுவலக மேலாளர் திரு. T.V.S. மணியனும் அழைக்கப்பெற்றிருந்தனர். விருந்து பகல் 12.30க்கு நிறைவு பெற்றது. முதல்வர் வீட்டிற்கு முன்னால் போடப்பெற்றிருந்த ஒரு கொட்டகையில் எல்லோரும் உட்கார்ந்திருந்தோம். அப்போது எல்லோரும் எதிர்பாராவகையில் ஒரு திடீர் நிகழ்ச்சி நடைபெற்றது.

---

2 "என் பதவி உயர்வில் ஏற்பட்ட தடைகள்" (நினைவுக் குமிழிகள் - பகுதி 3; குமிழி. 147) விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. அஃது இந்தக் கட்டுரைக்குப் பொருத்தமாக இராது. எனினும் திரு. C.V.CT.V.க்கும் தெரியாமல் "மணியனும் முதல்வரும்" செய்த சதி என்பதை அறிந்துகொண்டு விட்டதும் அதனை என் வாழ்வில் விக்கினங்களைப் போக்கும் விநாயகர் போல் செயல்பட்ட சா.க.வின் உதவியால் சதியை செயற்படாது தவிர்த்ததும் விளக்கப் பெற்றுள்ளன.

3 இக்காலத்தில் அழகப்பர் அறத்தின் தலைவராக இருந்தவர் தமிழகத்தின் கல்வி-நிதி அமைச்சரா இருந்த திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள். என் பதவி உயர்வில் தடைகள் எழுந்துள்ளன என்பதை மட்டிலும் குறிப்பாகச் சொல்லி வைத்திருந்தேன். அவரும் "அஞ்சாதீர்கள். சட்டப்படி நடைபெறும்" என்று உற்சாக மூட்டியிருந்தார்.

அனைவரும் அதிர்ந்து போயினர். நானும் வியந்து போனேன். தாளாளர் செட்டியார் மணியனை நோக்கி, "மணியன், ரெட்டியாரின் பதவி உயர்வு வீணாக இரண்டாண்டுகளாக இழுபறியாகிவிட்டது. K.V.AL.M. இராமநாதன் செட்டியார் இச்சமயம் மலேயாவுக்குக் குடும்பத்துடன் செல்லுகின்றார். கப்பலில் போவதாகச் சொன்னார். பயணம் சொல்லிக்கொள்ள என் இல்லத்திற்கு வந்தபோது "ரெட்டியாரின் பதவி உயர்வு இரண்டாண்டுகளாக இழுபறியாகக் கிடக்கின்றது. உடனே பதவி உயர்வுக்கு ஆணைபிறப்பித்து, அந்த ஆணையின் நகல் ஒன்றை AIR MAIL தபாலில் எனக்கு அனுப்ப வேண்டியது. கப்பலில் செல்லும் நான் என் இல்லத்தில் புகும்போது ரெட்டியாரின் பதவி உயர்வின் ஆணையின் நகல் என் மேசையின்மீது காத்திருக்க வேண்டும். அஃது இல்லாவிடில் நான் அறக்கட்டளையின் உறுப்பினர் பதவியை இதையே காரணம் காட்டி இராஜினாமா செய்து CABLE மூலம் அல்லது TELEX மூலம் தெரிவித்து விடுவேன்" என்று சொல்லிப்போனார்.

"அதனால் நீ இப்போது உடனே உன் கையாலேயே ஆணையைத் தட்டச்சு செய்து 4 படிகள் எடு. முதல் வேலையாக ஒரு நகலை மலேயாவுக்கு அனுப்பி விடு" என்று கூறியவர் என் பக்கம் திரும்பி, "மிஸ்டர் ரெட்டியார், பிற்பகல் எத்தனை மணிக்கு வகுப்புக்குப் போகின்றீர்?" என்று கேட்டார். நான் "பிற்பகல் 2.15க்கு" என்றேன். மீண்டும் மணியனை நோக்கி "இன்று முற்பகலில் சேர்ந்ததாக ஆணையைத் தட்டச்சு செய்து, அவர் வகுப்பிற்குப் போவதற்கு முன்னர் அவர் கைக்குக் கிடைக்கச் செய்க" என்று கூறி அருகிலிருந்த முதல்வரைப் பார்த்து, "முதலியார், இதற்கு முன்னுரிமை தந்து கவனிக்கவும்" என்று கேட்டுக் கொண்டார். இப்படி நாடகபாணியில் என் பதவி உயர்வு வந்தது. என் உள்ளத்தில் அந்தர்யாமாமியாக இருக்கும் ஏழுமலையப்பனே இவ்வாறு செய்வித்தான்" என்பது என் அதிராத நம்பிக்கை. நானும் அன்று 2.15 க்குப் பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

**நினைவு - 8 :** ஒரு சமயம் அலெக்ஸாண்டர் ஞானமுத்து நான் பயிற்சிக் கல்லூரிப் பணியைத் துறந்து எம்.ஏ. உள்ள கல்லூரிப்

பணியை ஏற்றால் விரைவில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம் என்று கூறியதை நினைவில் கொண்டு பல இடங்கட்கு முயன்றேன். அழகப்பர் கலைக்கல்லூரியில் தமிழ் எம்.ஏ. வந்ததும் வாரத்திற்கு 4 மணி கற்பிக்கும் வாய்ப்புக் கேட்டேன். (சென்னையில் இம்முறை இருப்பதைச் சுட்டிக்காட்டி. திரு. ஞானமுத்து மறுத்துவிட்டார். தாளாளரிடம் முறையிட்டும் அவர் படிப்பு சம்பந்தமான விஷயத்தில் தலையிட மறுத்துவிட்டார். வாய்ப்பு கிடைத்திருந்தால் காரைக்குடியிலேயே பிஎச்.டிக்குப் பதிவி செய்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கும். அடுத்து மதுரை தியாகராயர் கல்லூரிக்கு திரு. இராய.சொ. பரிந்துரையின்மீது முயன்றும் கிடைக்கவில்லை.. சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று முறை முயன்று தேர்ந்தெடுக்கப்பெற்றும் கிடைக்கவில்லை. (மூன்று முறையிலும் வெவ்வேறு காரணங்களால்). ஒருமுறை "தெலுங்கன்" என்று காதோடு காதாகப் பேசப்பட்டு மறுக்கப்பட்டதை அறிந்தேன். பின்னர் பழநியில் தொடங்கப்பெற்ற பண்பாட்டுக் கலைக்கல்லூரிக்கு முதல்வர் பணிக்கு முயன்று தேர்ந்தெடுக்கப் பெற்றும் கிடைக்காதநிலை. பெரியவர் M. பக்தவத்சலம் (தமிழக அறநிலையத்துறை அமைச்சர்) தம் சாதிக்காரர் அடுத்த ஆண்டு ஓய்வு பெறப்போகின்றார். அவருக்குத் தரவேண்டும் என்று நிறுத்தி வைத்ததால் கிடைக்கும் பேறு பெறவில்லை.

திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் பணி கிடைத்தது - எவர் பரிந்துரையும் இல்லாமல். இது எனக்குக் கிடைத்ததால் நான்தான் பொறுமையுடன் துறையை வளர்க்க முடியும் என்று கருதிதான், "ஏழுமலையான் தடுத்து ஆட்கொண்டான்" என்பதைப் பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது. திருப்பதி ஆணை பெற்றதும், இரண்டாண்டுகள் விடுமுறையும் தொடர்புரிமையும் (Lien) தருமாறு விண்ணப்பித்துத் தாளாளரையும் பார்த்துப் பேசினேன்.

அவரிடம் "நான் திருப்பதி போவது பி.எச்.டி பட்டம் பெறுவதற்காக; தமிழகத்தில், பல்கலைக்கழகத்தில் என்னை அப்பட்டத்திற்கு பதிவு செய்து கொள்ளவே மறுத்துவிட்டனர்; விதிகளை வைத்துக்கொண்டு விளையாடுகின்றனர். அஃது என்

தலைவிதியாகி இந்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். தயவு செய்து என் வேண்டுகோளை நல்கவேண்டும். ஜூலை 31 திங்கள் (1960) புறப்படுவதற்கேற்றவாறு என்னைப் பொறுப்பிலிருந்து கழற்றிவிடவேண்டும்'' என்று கேட்டேன். அவரும் என் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவ்வாறும் செய்தார்.

ஆனால் ஒன்று சொன்னார்: "நீங்கள் இங்கிருந்தால் 1966இல் முதலியார் விலகின பிறகு (ஓய்வு) அப்பதவியை உமக்கு உறுதியாகத் தருகின்றேன்" என்றார். நானும் "பிஎச்டி. பட்டம் பெற்றதும் திரும்பி விடுகின்றேன். ஒருகால் திரும்பும் சூழ்நிலை இல்லாது அங்கேயே தங்கிவிட்டால், ஓய்வு பெற்றதும் காரைக்குடி வந்து விடுகிறேன். வீடு இங்கு வாங்கியுள்ளேன். புதுநகர் (New Town) அருகில் இரண்டுமனையும் வாங்கியுள்ளேன். அப்போது ஓர் ஐந்தாண்டுகட்கு முதல்வர் பணி தாருங்கள். ஊதியம் இன்றி வள்ளல் நிறுவனத்தில் ஊழியம் புரிய உறுதி கூறுகின்றேன்" என்று கூறினேன். அவரும் மகிழ்ந்து "அவ்வாறே செய்யலாம்" என்று தெரிவித்தார்.[4] இறையருள் வேறுவிதமாக நடந்ததை யாரால் அறியமுடியும்?

> **ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்டு ஒன்றுஆகும்**
> **அன்றி அதுவரினும் வந்தெய்தும்; ஒன்றை**
> **நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;**
> **எனையாளும் ஈசன் செயல்**[5]

என்ற பாட்டியின் வாக்கோடு நீங்காத நினைவு நிறைவுபெறுகிறது. இவர் பிறந்தநாளும் இறந்த நாளும் அறியக்கூடவில்லை. அதனால் இறுதியில் குறிப்பிட வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

---

4. இது நடைபெற வாய்ப்பு இல்லை. பல்லாண்டுகட்கு முன்னர் நான் திருப்பதியில் இருந்தபோதே தாளாளர் செட்டியார் திருநாடு அலங்கரித்துவிட்டார். இப்போது பயிற்சிக் கல்லூரி அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைந்துவிட்டது. நானும் 1978 சனவரி 14 திங்கள் முதல் சென்னையில் குடியேறி விட்டேன். எண் எண்ணமும் தாளாளர் எண்ணமும் இறைவன் திட்டத்தில் சேரவில்லை.

5 நல்வழி - 27

# 13

# நன்மாணாக்கர் மீனாட்சி சுந்தரம்

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு[1]

நன்னூலாசிரியர் முதல்நிலை மாணாக்கரை அன்னம், பசு என்ற இரண்டுக்கும் ஒப்புமைப்படுத்திக் காட்டுவர்[2]. அன்னம் பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலை மாத்திரம் உட்கொண்டு நீரை நீக்கி விடும். அதுபோல முதல் நிலை மாணாக்கர் சாரத்தையும், சாரமல்லாதவற்றையும் வேறுபிரித்துச் சாரத்தை உட்கொண்டு அசாரத்தை விலக்கிவிடுவர். பசு மிக்க புல்லுள்ள இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிரம்பப் புசித்துப் பின்பு ஓரிடத்தில் இருந்து சிறிது சிறிதாக அதனை வாயில் வருவித்துக் கொண்டு மென்று தின்று செரிமானம் செய்யும். அது போலவே, தலைமாணாக்கர் மிக்க கல்வியுள்ள ஆசிரியனிடம் அக்கல்வியை உள்ளம் நிரம்பக் கேட்டு உட்கொண்டு பின்பு ஓரிடத்தில் இருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டுவந்து சிந்தித்துத் தெளிவு அடைவர்.

....... ....... .......

என் கல்வி வாழ்க்கையில் பல நன்மாணாக்கர்கட்குக் கற்பிக்கும் பேறு கிடைத்தது. அவர்களுள் காரைக்குடியில் யான்

---

1 குறள் - 397 (கல்வி)

2 நன்னூல் - நூற்பா. 39

கற்பித்த ஆசிரியர் பயிற்சி மாணாக்கர் ஒருவர் நீங்காத நினைவில் இடம் பெறுகின்றார். இவர் பெயர் மீனாட்சி சுந்தரம். மதுரை மாவட்டம் அருப்புக் கோட்டையைச் சேர்ந்தவர் 1956-57 இல் என்னிடம் பயன்றதாக நினைவு. இளங்கலைப் பட்டம் பெற்ற இவர் சென்னைத் தலைமைச் செயலகத்தில் பத்தாண்டுகட்குமேல் பணியாற்றி பகுதி அலுவலர் (Section Officer) பதவி தம் மனநிலைக்கு ஒவ்வாமையால் தம்மை அதனின்றும் விடுவித்துக் கொண்டு ஆசிரியர் பயிற்சிக்கு (B.T) வந்தவர். நிட்டைப் பயிற்சியுடையவர். தாம் அடிக்கடி இறைமைக் காட்சிகளைக் கண்டு அநுபவித்ததாகக் கூறுவார். குழந்தை மனம் உடையவர். வகுப்பில் நன்றாகக் கவனித்துக் குறிப்புகளை எழுதிக் கொள்வார். நூலகத்தில் அதிகமான கற்பிக்கும் முறைகளைப் பற்றிய நூல்களைப் படிப்பார்; மிகச் சிறந்த ஆசிரியராகத் திகழும் அரிய கூறுகளை இவரிடம் கண்டேன்.

நான் திருப்பதியில் பணியாற்றிய பொழுது (1960-77) நேரிட்ட நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகின்றது. ஒருசமயம் நெல்லூருக்கு ஓர் அலுவல் நிமித்தம் சென்றிருந்தேன். அது சூன் மாதம். ஆந்திர நண்பர் ஒரு பழ விருந்து அளித்தார். விருந்து சாமானியமானதுதான். ஆயினும் அது என் மனத்தில் நீங்காத நினைவாக நிலைபெற்றுள்ளது. இரண்டு வெள்ளித்தட்டுகளில் தட்டுக்கு ஒன்றாக இரண்டு மாங்கனிகளை வேலையாள் ஒருவன் எங்கள் முன்னிலையில் உள்ள மேசையின்மீது வைத்தான். நண்பர் பழத்தை எடுத்துக்கொண்டு. அதைத் தடவிக் கொண்டே நெருடினார். என்னை நோக்கித் "தினண்டி" (தின்னுங்கள்) என்றார். நான் கத்தி ஒன்று வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நண்பர் பழத்தின் அடிப்புறத்திலிருந்த காம்பை நீக்கித் தொளையிட்டுப் பழச்சாற்றை அப்படியே உறிஞ்சிப் பருகினார். பழச்சாற்றினைப் பருகின முறை என்னை வியக்க வைத்தது. பின்னர் எங்கள் முன் இருக்கும் பழம் இரச வர்க்கத்தைச் சேர்ந்தது என்றும், இந்த வகைப் பழத்தை இப்படித்தான் உண்ணவேண்டும் என்றும் விளக்கினார். பின்னர் நானும் அவ்விதமே பழத்தை நெருடி அதன் சாற்றை அவர் பருகின

முறையிலேயே உறிஞ்சிப் பருகினேன் அற்புதமான "பழ அநுபவம்" பெற்றேன். அப்போது டி.கே.சி. அவர்களின் நினைவு வந்தது. டி.கே.சி. ஒரு பாடலை பலமுறை படித்து - இல்லை பாடி - இறுதியில் மிகக் கம்பீரமாகப் பாடி கேட்போரைப் பாட்டநுபவத்தின் கொடுமுடிக்கு இட்டுச் செல்வதை நினைத்துக் கொண்டேன். மாம்பழச் சாறும் டி.கே.சி தரும் கவிதைச் சாறும் ஒன்றுபோல் இருந்து இன்னும் என்னை மனத்தால் சுவைக்க வைக்கின்றது. 1941-50 ஆண்டுகளில் நான் துறையூரில் பணியாற்றியபோது திருவீர. உலக ஊழியனார் நான் அமைத்த இலக்கியக் கூட்டங்களில் கம்பராமாயணப் பாடல்களில் கம்பராமாயணப் பாடல்களை இப்படித்தானே பாடிப் பார்வையாளர்கட்கு கவியமுதம் ஊட்டினார் என்பது நினைவிற்கு வருகின்றது. அங்ஙனமே 1943 டிசம்பரில் மயிலையில் பன்மொழிப்புலவர் வே.வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லத்தில் அகநானூறு களிற்றியானைப் பகுதியிலுள்ள ஐம்பது பாடல்களை முத்து சு. மாணிக்கவாசக முதலியார் இப்படித்தானே எனக்குக் கற்பித்தார் என்பதும் நினைவிற்கு வருகின்றது.

நான் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோது தமிழ் கற்பித்தலில் உயிராகிய பகுதி கவிதை பயிற்றுவதுதான் என்பதை வற்புறுத்திக் கூறுவதுண்டு[3]. கவிதை பயிற்றும் ஆசிரியர்கள் கவிதைகளை வாய்விட்டு இசையுடன் படிக்கும் பழக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்; பழக்கம் இல்லாதவர்கள் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இதனை நான் பயிற்சி பெறும் ஆசிரியர்களிடம் வற்புறுத்திக் கூறுவேன். **"மனக்கண்"** என்று ஒன்றிருப்பதுபோலவே **"மனக்காதும்"** (Mind's ear) நம்மிடம் அமைந்து கிடக்கின்றது. சொற்களுக்கு இரண்டு குணங்கள் உண்டு. ஒன்று, ஒலி: பாட்டின் ஒலிநயத்திற்குத் துணை செய்வது; மற்றொன்று,

3 இலக்கணம் கற்பித்தலும் மிக முக்கியமானதுதான். எடுத்துக்காட்டுகளைக் கொண்டு இலக்கண விதிகளைச் சுவையாக விளக்கவேண்டும். "உரைநடை" கற்பிக்கும்போது பல்வேறு வித வாக்கிய அமைப்புகளை எடுத்துக் கொண்டு கற்பிக்கவேண்டும் - இவற்றையும் பயிலும் ஆசிரியர்கட்கு விளக்குவதை உயிராய பணியாகக் கொண்டிருந்தேன்.

பொருள்: பொருள் நயத்திற்குத் துணையாக இருப்பது. அச்சிட்ட நூல்களில் காணப்பெறும் சொற்கள் அரை உயிரோடுதான் உள்ளன.[4] நாம் ஊட்டுகின்ற ஓசையின் மூலம்தான் எஞ்சிய அரை உயிரும் முற்றுப் பெறுகின்றது. ஆகவே, ஓசையை ஊட்டித்தான் பாடல்களைப் படிக்கவேண்டும். இடத்திற்கேற்றவாறு, சந்தர்ப்பத்தையொட்டி, இசையூட்டிப் படித்தால்தான் பாக்களில் அடக்கி வைக்கப் பெற்றுள்ள உணர்ச்சி வெள்ளம் பீறிட்டுக் கொண்டு வெளிவரும் சொற்களின் பொருளுடன் அவற்றின் தொனிப் பொருளும் கட்டவிழ்த்துக் கொண்டு புறப்படும். தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பேராசிரியர் "பா என்பது, சேட் புறத்திலிருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற் கேதுவாகிப் பரந்து பட்டுச் சொல்வதோர் ஓசை"[5] என்று குறிப்பிடுவார். இதனால் பா என்பது இசை மயமாக இருப்பதொன்று என்பது பெறப்படுகின்றதன்றோ?

மேல் நாட்டு நூல்களிலிருந்தும் நம் நாட்டு நூல்களிலிருந்தும் பல கருத்துகளைத் தெரிந்து கொண்டு கவிதைபயிற்றும் முறையைப் பற்றிப் பலவாறு சிந்திக்கும் வாய்ப்புகள் பெற நேர்ந்தது. இக்கருத்துகளை முதன்முதலாகக் காரைக்குடியில் பயிற்சிக்கல்லூரி மாணவர்கட்குக் கற்பித்தேன்; சிறிய வகுப்பாதலால் கலந்து யோசிக்கும் சந்தர்ப்பங்களும் இருந்தன.[6] பல நல்ல மாணாக்கர்கட்குக் கற்பிக்கும் பேறும் கிடைத்தது. பல நல்ல மாணாக்கர்கள் இருப்பினும் மீனாட்சி சுந்தரம் என்பவர் மட்டிலும் நீங்காத நினைவாக உள்ளார். அவர் இப்போது இல்லை. வைகுண்டவாசியாகி விட்டார்.

---

4 Words are but half alive when they appear in a printed page" - Prof. Garrod

5 தொல். பொருள் - செய்யுள் - நூற் - 1 (பேராசிரியம்)

6 இக்கருத்துகளை முறையாகத் தொகுத்து "கவிதை பயிற்றும் முறை" என்ற தனிநூலாகவும் வெளியிட்டுள்ளேன். "தமிழ் பயிற்றுமுறை" என்ற என் பெரிய நூலிலும் தெளிவாகவும், சுருக்கமாகவும் விளக்கப் பெற்றுள்ளன.

நினைவு - 1 : மாதிரிப் பள்ளியில் ஒருநாள் குமரகுருபரரின் மீனாட்சியம்மைக் குறத்திலுள்ள ஒரு பாடலை ஐந்தாம் படிவ மாணவர்கட்கு (இக்காலத்தில் 10-ஆம் வகுப்பு) நடத்தியதைப் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டேன். முதல்வர் ப. துரைக்கண்ணு முதலியார், பேராசிரியர் S. திருவேங்கடாச்சாரி ஆகிய இருவரையும் மற்றும் எல்லாத் தமிழ் வகுப்பு ஆசிரிய மாணவர்களையும் இப்பாடத்தைக் கவனிக்குமாறு ஏற்பாடு செய்தேன்.

பாடல் இது:

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்கு கல்லி எடுப்போம்.
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள் குறக் குடிக்கடுத்த
இயம்பிதுகாண் அம்மே.

பாடக்குறிப்பில் மீனாட்சிசுந்தரம் "கருந்துணர்ந்து கவிதை இன்பத்தை நுகருமாறு செய்தல்" என்பதைப் பாட நோக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

மாணாக்கர்களைப் பாடத்தின்மீது ஊக்குவிக்க வேண்டும் என்பது பயிற்சிக்கல்லூரியில் சொல்லப்பெற்ற விதி. இதனை ஆசிரியர்கள் பல்வேறு வகையில் கையாளலாம். பாடினவர்களின்

வரலாறு கூறுவதில் ஊக்குவித்தல் ஆகாது என்பது மற்றொரு விதி. இதைச் சொல்லுதல் தேர்வில் கேட்கப்பெறும் வினாவுக்கு விடைதருதல்போல் அமைவதேயன்றி ஊக்குவித்தல் ஆகாது. மீனாட்சி சுந்தரம் கையாண்ட முறை இது. "குறத்தி ஒருத்தி மதுரை மீனாட்சி அம்மைக்குக் குறி சொல்லுவதாகக் கற்பனை செய்து குமர குருபர அடிகள் பாடியது "மீனாட்சி அம்மை குறம்" என்னும் பிரபந்தம்" என்று நூலைப்பற்றிச் சுருக்கமாகக் கூறினார். அடுத்து, பாடலைப் புரிந்து கொள்வதற்கு முன்னுரையாகப் பாடலின் பின்னணியைக் கூறினார் : "பாட்டுடைத் தலைவி மீனாட்சி அம்மை சொக்கலிங்கப் பெருமான்மீது காதல் கொள்ளுகின்றாள்; கருத்திழக்கின்றாள்; தோள் மெலிகின்றது; வளை நெகிழ்கின்றது; மெய் பசக்கின்றது; முகமும் வாடுகின்றது. கருத்தில் நின்ற காதலனை அடைவது எப்பொழுது? என எண்ணி எண்ணி ஏங்குகின்றாள். இந்நிலையில் பொதியமலையில் வாழும் குறத்தி யொருத்தி மதுரையை நோக்கி வருகின்றாள். காதல் நோயால் மெலிந்து வாடி அமர்ந்திருக்கும் மீனாட்சி அம்மையைக் காண்கின்றாள். அம்மை தன் கரத்தை நீட்ட, குறத்தி குறி சொல்கின்றாள். முதலில் தன் குலப்பெருமையைக் கூறுகின்றாள்" இது மீனாட்சி சுந்தரம் மாணாக்கர் முன் பாடத்தை வளர்த்துக் காட்டத் தொடக்கவுரையாக அமைத்துக் கொண்ட பாடலின் பின்னணி.

பாடத்தை எப்படி வளர்ப்பது? என்பது பயிற்சிக் கல்லூரியில் கற்ற முறையைப் பயன்படுத்தினார். "குறத்தி கூறும் தன் குலப் பெருமையை இதோ கேளுங்கள்" என்று கூறிப் பாடலை இசையோடும், தாளத்தோடும் தெளிவாக ஒன்றிரண்டு முறை பாடினார். முதல் தடவை பாடும் போதே பாடலில் அடிதோறும் உள்ள "கல்வி", "தேறல்", "வாய்மடுத்தல்", "பாயல்", "கண்படுத்தல்", "கயற்கண்ணி" என்ற அருஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்கினார். கரும்பலகையிலும் எழுதிக் காட்டினார். இதனால் பாடலை இரண்டாம் முறை, மூன்றாம் முறை பாடும்போது குளோப் ஜாமுனை, அல்லது கல்கத்தா இரஸகுல்லாவை வாயில் இட்டு, பல்லி னால் சிறிது மென்று நாவினால் துழாவச் சுவைப்பதுபோன்ற ஒரு

நிலையை ஏற்படுத்தினார். மாணாக்கர்கள் முகத்தில் பாட்டின் சுவையை அவர்கள் அநுபவித்தது தெளிவாகப் புலனாயிற்று. அவர்களின் கண்களில் காணும் ஒளி உதட்டில் காணும் புன்முறுவல், உடம்பு முழுவதும் காணப்படும் கிளர்ச்சி இவற்றால் இவை தெளிவாகப் புலனாயின.

பிறகு பாடலை அரை அரை அடியாகப் பாடி மாணாக்கர்களைக் குழுவாகத் தம்மைத் தொடர்ந்து பாடுமாறு செய்தார். பின்னர் பரவலாக ஒரு சிலமாணாக்கர்களைத் தனித்தனியாகவும் பாடச் செய்தார். இதனால் பாடவளர்ச்சியில் மாணாக்கர்களின் பங்கு எவ்வளவு என்பதை அறுதியிட்டுக் காட்டினார்.

தொடர்ந்து குறத்தியின் இயற்கையோடொட்டிய வாழ்வு ஓவியம்போல் பாடலில் தீட்டப்பெற்றிருப்பதை மாணாக்கர்கள் உணர்ந்து அநுபவிக்குமாறு விளக்கமும் தந்தார். விருந்தோம்பிய பிறகுதான் குறத்தி உறங்கச் செல்கின்றாள் என்பதை மாணவர் உள்ளத்தில் நன்கு பதியச் செய்தார். தமிழகத்தில்தான் தலையாய விருந்தோம்பல் பண்பாகிய குறமகளிடம் காணப்பெறும். சிறப்பைப் பாராட்டிப் பேசினார். படிப்பறிவு இல்லாத குறத்தியாயினும் அவள் உண்டு உயிர்த்து உறங்குவது, இனம் பெருக்குவது வாழ்வென்று அமையாது கயற்கண்ணியம்மையைத் தொழுது வாழும் இறையன்பினை மேற்கொண்டமையையும் பாராட்டிப் பேசினார்.

பாட முடிவாக, மீண்டும் பாடலை இசையுடன் பாடி அடியிற்கண் வினாக்களை விடுத்துப் பாடத்தைத் தலைக்கட்டினார். 1. குறமகளின் தொழில்கள் யாவை? 2. அவர்கள் பருகும் பானங்களைக் கூறுக. 3. அவர்கள் எவற்றை உடுப்பர்? 4. அவர்கள் எவ்வாறு விருந்தோம்புவர்? 5. அவர்கள் எதன்மீது உறங்குவர்? 6. அவர்களுடைய இறைபழிபாடு எவ்வாறு கூறப் பெற்றுள்ளது?

சாதாரணமாகத் தமிழாசிரியர்களில் பெரும்பாலோர் கரும்பலகையைப் பயன்படுத்துவதில்லை. இலக்கணப் பாடத்தில் கூட "வாய்ப்பந்தல்" போட்டே காலத்தைப் போக்கி விடுவர். மீனாட்சி

**நினைவு - 3 :** அரையாண்டுத் தேர்வு (எழுத்து முறை) நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் தேர்வு மண்டபத்தின் மேற்பார்வையாளராக இருக்கும் வாய்ப்பு பெற்றிருந்தேன். சுற்றி வருங்கால் பலருடைய எழுத்துகளைப் பார்த்தேன். மீனாட்சி சுந்தரம் அருகிலும் நின்று கொண்டு சில நிமிட நேரம் அவர் எழுதும் விடையை நோக்கினேன். எழுத்து மணிமணியாக முத்து கோத்தாற்போல இருந்தது. நடையோ ஆங்கிலப் பேராசிரியர்களின் நடையையும் தோற்கடிக்கும் முறையில் இருந்தது. தேர்வு மண்டபத்தில் விரைவாக எழுதும்போதே மூன்று மணிநேர இறுதிவரையும் எழுதிய விடைகள் மிக அற்புதமாக அமைந்திருந்தன. முதல்வர் முதலியாரையும் திருவேங்கடாச் சாரியாரையும் இவருடைய ஐந்து விடையேடுகளையும் ஒருமுறை நோக்கிய பிறகு மதிப்பீடு செய்பவர்க்கு அனுப்பலாம் என்றேன். அவர்கள் அவற்றை மேலோட்டமாகவே நோக்கி வியந்து போயினர். இவருக்கு எழுத்துத் தேர்விலும் முதல் வகுப்பு கிடைப்பது உறுதியென்பதாக அறுதியிட்டனர்.

**நினைவு - 4 :** இறையருளால் அந்த ஆண்டு இவருக்கு எழுத்துத் தேர்விலும் செய்முறைத் தேர்விலும் முதல் வகுப்புகள் கிடைத்தன. காரைக்குடியில் நான் பணியாற்றிய பத்தாண்டுக் காலத்தில் (1950-60) இவர் ஒருவரே முதல் வகுப்பில் தேறியவராகக் காணப்பட்டார். எழுத்துத் தேர்வில் அக்காலத்தில் முதல் வகுப்பில் தேறினவர் இவர் ஒருவரே என்பது என் நினைவு. இவர் அருப்புக்கோட்டையில் தேவாங்கர் உயர்நிலைப்பள்ளியில் போய்ச் சேர்ந்தார். ஒருமுறை விரிவுப் பணித்துறை ஆதரவில் நான், திருவேங்கடாச்சாரி, முதல்வர் அருப்புக்கோட்டை உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றிருந்தபோது இவரைச் சந்தித்து மகிழ்ந்தோம். பயிற்சி பெற்றிருந்தபோது கண்ட தோற்றத்தைவிட இப்போது கம்பீரமாகக் காணப்பெற்றார். மாணாக்கர்களிடமும் ஆசிரியர்களிடமும் பெரும்புகழ் பெற்றிருக்கவேண்டும் என்று ஊகித்துக்கொண்டேன்.

**நினைவு - 5 :** இவர் நிட்டைப் பயிற்சியுடையவர் என்று முன்னரே குறிப்பிட்டேன். அருப்புக்கோட்டையில் இது மிகவும் தீவிரமடைந்தது போலும். 1966 முடிய என் குடும்பம் காரைக்குடியிலேயே இருந்து வந்தமையால் விடுமுறைக் காலங்களில் காரைக்குடியிலிருப்பேன். அவ்வப்போதெல்லாம் இவரைப்பற்றி விசாரிக்கத் தவறேன்; ஏழெட்டு ஆண்டுகள் இவர் அருப்புக்கோட்டையில் பணியாற்றினார் என்பது கேள்வியுற்றேன். நிட்டைப் பயிற்சி தீவிரமடைந்த நிலையில் இவர்தம் இறுதிக்காலம் கழிந்திருக்கவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்கள் ஊர்ப்பெருமக்கள் இவரைப் "பைத்தியம்" என்று அறுதியிட்டனராம். பக்தர்களையும் தியானசீலர்களையும் மக்கள் இப்படித்தான் அறுதியிடுவார்கள்.

உண்மையான பக்தர்கள் ஆண்டவன்மீது மால்கொண்டு ஒழிவார்கள்.

**மால்எழுந் தொழிந்தேன்**
**என்தன் மாலுக்கே (3 : 2)**

என்பர் குலசேகரப் பெருமாள். இன்னும் அவர்,

**"நாரணன் நரகாந்தகன் பித்தனே" (3)**

**"மாமணவாளன் தன் பித்தனே" (5)**

**"எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே" (6)**

**"பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" (7)**

**"பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" (8)**

என்றெல்லாம் கூறி தம்மைப்

**"தனிப்பெரும் பித்தனாய்க்" (10)**

கருதிப் பெருமைப்படுகின்றார்.

மீனாட்சி சுந்தரம் நல்ல ஆளுமையுடையவர். பார்ப்பதற்கு எடுப்பான வசீகரத் தோற்றம் உடையவர். திருமணம் ஆனவரா

3

என்பது அறியக்கூடவில்லை. பக்குவப்பட்ட ஆன்மா என்பதை "உண்டியே உடையே உகந்தோடும்", மண்டலத்திலுள்ளார் எப்படி அறிய முடியும்? நுகர்வினை (பிராரத்தம்) இருந்தவரை இறைவன் நியமித்தப் பணிகளை ஆற்றினார். ஓரிருதிங்கள் நோய்வாய்ப் பட்டிருந்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார் என்பதைக் கேள்வியுற்று வருந்தினேன். ஆனால் ஒருபாவமும் அறியாத இவர்தம் ஆன்மா வீட்டுலகில் இன்பமாக இருக்கும் என்பது என் கணிப்பு.

# 14

# பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்

"**சோழநாடு சோறுடைத்து**" என்பது எல்லோரும் அறிந்த முதுமொழி. நீர்வளம் மிக்க காவிரி பாய்வதால் எங்கும் மருதத்திணை சூழ்நிலையாதலால் தஞ்சை மாவட்டம் "**தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்**" என்ற சிறப்புப் பெற்று திகழ்கின்றது. வயிற்றுக்கு உணவு மட்டும் தருவதன்று தஞ்சை மாவட்டம். இயல், இசை, நாடகம், என்ற முத்தமிழும் திகழ்ந்து வரும் பகுதி தஞ்சைப் பகுதி. ந.மு. வேங்கடசாமி ,நாட்டார், வீர. உலக ஊழியனார், வேங்கடாசலம் பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் தோன்றி தமிழை வளர்த்த இடம் தஞ்சை மாவட்டம். முக்திக்கு வழிகாட்டும் பக்தியை வார்க்கும் திருக்கோயில்கள் மலிந்த மாவட்டம் இது. ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற 40 திவ்விய தேசங்களும், தேவாரப் பாடல் பெற்ற 190 சைவத் தலங்களும் சோழ நாட்டில் உள்ளவை. "**கோயில் நகரம்**" எனப் பெயர். பெற்றுத் திகழும் கும்பகோணம் தஞ்சை மாவட்டத்தில்தான்[1] உள்ளது.

கும்பகோணத்திற்கருகிலுள்ளது திருநாகேசுவரம் என்னும் புகழ்மிக்க சிவத்தலம். இத்தலத்தில் 14.1.1917இல் பிறந்தவர் பேராசிரியர் வெள்ளை வாரணனார். அடியேனைவிட நான்கு திங்கள் 17 நாள் இளையவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பில் தமிழ் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். பிறந்த தலத்தின் சிறப்பால் இவர் சிறந்த சிவநேசச் செல்வராகவும் திகழ்ந்ததில்

---

1 இன்னொரு கோயில் நகரமாகிய "காஞ்சி" தொண்டைநாட்டில் உள்ளது

வியப்பொன்றும் இல்லை. இவர் படிப்பு முடிந்த தொடக்கக் காலத்தில் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்க் கல்லூரியில் மிகு புகழ்பெற்ற திரு உமாமகேசுவரன் பிள்ளையின் அரவணைப்பில் ஓராண்டு தமிழாசிரியராகப் பணியேற்றியதாக நினைவு. அப்போது அடியேன் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் (1934 - 39) பயின்று கொண்டிருந்தேன். இக்காலத்தில் தமிழகப் பிரதமராக இருந்த நம் அருமை இராஜாஜி தமிழ் நாட்டுக் கல்வித் திட்டத்தில் இந்தி மொழியைக் கட்டாயமாகப் புகுத்த நினைத்தபோது திரு. வெள்ளை வாரணனார் "**காக்கை விடு தூது**" என்ற கவிதையின் மூலம் மறுப்பு தெரிவித்தது இன்னும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது.

1935 முதல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ்ப்பணியைத் தொடங்கி விட்டார். அடியேனும் பிஎஸ்சி. பட்டத்துடன் சைதையிலுள்ள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டு (1940-41) பயின்று எல்.டி. பட்டம் பெற்றுத் துறையூரில் புதிதாகத் தொடங்கப்பெற்ற நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் பொறுப்பேற்று ஆசிரியப் பணியைத் தொடங்கிவிட்டேன். துறையூரில் பணியாற்றியபோதும் (1941-50), பின்னர் காரைக்குடி அழகப்பர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோதும் இச்சான்றோரிடம் நல்ல தொடர்பு இருந்து வந்தது. திருப்பதி சென்ற பிறகு 1960-1977 காலத்தில் நெருங்கிய பழக்கமாயிற்று. திருப்பதியில் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளில் பங்குபெறச் செய்தேன். இவருடன் வாழ்வில் நேரிட்ட நிகழ்ச்சிகளை நீங்காத நினைவுகளாக இங்குப் பதிவு செய்து மகிழ்கின்றேன்.

**நினைவு - 1 :** காரைக்குடிக் கல்லூரிப் பணியில் அதிக ஓய்வு இருந்தது. பணி புதிதாகையால் அப்பணியைத் திறம்பட ஆற்றுவதற்குப் மொழி பயிற்றும் முறைகள் கல்வி உளவியல் பற்றிய ஆங்கில நூல்கள் பலவற்றைப் பயின்று கருத்துகளைத் தமிழில் அமைத்துக் கொள்ளவேண்டிய நிலை. முதல் ஆறு ஆண்டுகள் என் முழுநேரத்தையும் இப்பணியிலேயே செலவிட்டேன். அப்போதுதான் பயிலும் ஆசிரிய - மாணாக்கர்கள் மனநிறைவு அடையும் வண்ணம் போதிக்க முடியும். இதன் விளைவு

(1) **தமிழ் பயிற்றும் முறை** (2) **அறிவியல் பயிற்றும் முறை** (3) **கல்வி உளவியல்** என்ற மூன்று பெரியநூல்கள் வெளிவந்தன. அவை இன்றளவும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் புழக்கத்தில் இருந்து வருகின்றன; பயிலும் மாணாக்கர்கட்கும் மனநிறைவு தருவனவாக அமைந்துள்ளன. இக்காலத்தில்தான் "**கவிதையநுபவம்**" (1961) என்ற நூலும் உருவாயிற்று. தினமணிக்கதிர், தினமணிச்சுடர் "தமிழ் நாடு", "கலைமகள்" "குமரிமலர்" முதலிய பருவ வெளியீடுகளில் என்னுடைய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இக்காலத்திற்குப் பிறகு ஹெய்சன்பெர்க் எழுதிய Nuclear Physics என்ற ஆங்கில நூலை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டேன். அணுபற்றி அழகாக ஆராயவேண்டியிருந்தது. கல்லூரியில் இயற்பியல், வேதியியல் ஆகியவற்றை ஆழ்ந்து பயின்ற அறிவு இப்போது கை கொடுத்து உதவியது. மொழிபெயர்ப்பு நூலாகிய "**அணுக்கரு பௌதிகம்**" சென்னைப் பல்கலைக்கழகப் பரிசையும் (1958) பெற்றது. ஆக்கமுறையில் அணுவின் ஆற்றல்பயன்படும் முறைகளைப்பற்றி ஆராய என் மனம் அவாவியது. அவைபற்றிய நூல் ஒன்றும் உருவாகியது. சென்னை அமெரிக்க நூலகத்திலிருந்து பெற்ற நூல்கள் இதற்குப் பெருந்துணை புரிந்தன. தாருகவனத்து முனிவர்கள் செய்த அபிசாரயாகம்பற்றிய செய்தி அறிய வேண்டியிருந்தது. அதற்கு மூலம் தெரியவில்லை. திரு. க. வெள்ளை வாரணனாருக்கு எழுதினேன். அக்காலத்தில் அவர் ஓர் இலக்கியக் களஞ்சியமாக எனக்குப் பயன்பட்டார். அவர் கந்தபுராணத்திலுள்ளது என்று குறிப்பு முதலியவற்றுடன் விளக்கமாக எழுதினார். "தமிழ்க் களஞ்சியம்" போல் வேண்டும் போதெல்லாம் அவருடைய உதவியைப் பெற்றுவந்தேன்.

தாருகவனத்து முனிவர்கள் சிவபெருமானை அழிப்பதற்காகத் தாம் இயற்றிய அபிசாரயாகத்தினின்றும் கிளப்பிவிட்ட கொல்புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டார்; கொடிய நஞ்சு கக்கும் அரவங்களை ஆபரணங்களாக்கிக் கொண்டார். ஆலமுண்ட நீலகண்டன் சிங்கம் அம்பிகைக்கு வாகனமாயிற்று. அடுத்து அவர்கள் ஏவிய முயலகன் என்ற

அரக்கனைத் தம் காலின்கீழ் அடக்கிக் கொள்ளுகின்றார். இதுபோல ஹிரோஷிமா, நாகசாகி என்ற ஜப்பானிய நகரங்களை அழிக்கப் பயன்பட்ட அணுவாற்றல் மக்கள் வாழ்வின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையில் என் மனம் சென்றது. கந்தகம், பாஸ்வரம் போன்ற தீங்கு விளைவிக்கும் கொடிய வேதியியல் பொருள்கள் இலேகியம், களிம்பு போன்ற மருந்துப் பொருள்களாகும்போது, தம்முடைய தீயகுணங்களை இழந்து நற்பண்புகளைப் பெறுதல் போல அணுவாற்றல் ஐசோடோப்புகள் (Isotopes) என்ற கதிரியக்கப் பொருள்களாக மாறும்பொழுது அவை (1) உயிரியல் ஆய்வு (2) மருத்துவத் துறையில் பயன் (3) வேளாண்மைத் தொழிலில் பயன் (4) தொழில் துறையில் பயன் என்பவற்றில் பயன்படும் முறைகளையெல்லாம் அறிய முடிந்தது. அணுவாற்றல் மின்னாற்றலாக மாற்றப்படும் முறைகளையெல்லாம் அறிந்து கொண்டேன்.

அணுவின் கருவில் அடங்கியிருக்கும் ஆற்றல் இன்று பலமுறைகளில் பயன்படுகின்றது. அது நவமணிகளின் பேழையாக விளங்குவதையும் கண்டு கொண்டனர். அது கடவுட்டன்மை வாய்ந்த ஒரு பெட்டி எனவும் உணர்ந்து கொண்டு விட்டனர்.

**மூலபண்டாரம் வழங்குகின்**
**றான்வந்து முந்துமினே**[2]

**நினைவு - 2 :** திருப்பதிக்குப் பலமுறை வரும்போதெல்லாம் அவர் என் இல்லத்தில் விருந்தினராகத் தங்குவார். தமிழிலக்கியம்பற்றியும், திருமுறைகள்பற்றியும் சல்லாபங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கும். ஒருமுறை நான் திருப்பதி உமாமகேசுவரரெட்டி குடியிருப்பில் (கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி) தங்கியிருந்தபொழுது (1967) இவர் என் விருந்தினராக இருந்த பொழுது அதிகாலையில் எழுந்து சுமார் ஒருகல்

2 திருவாசகம் - 528 என்ற மணிவாசகப் பெருமான் பாடிய மூலபண்டாரம் வைத்து மூடிய பெட்டி இதுதான் என்பதையும் தெரிந்து கொண்டு விட்டனர்.

தொலைவிலுள்ள கபில தீர்த்தம் சென்று நீராடி வருவோம். இந்த நடைப்பயணம் ஆராய்ச்சிப் பயணமாகவும் இருக்கும். "திருமுறை" என்ற தொடர்பற்றி விளக்கம் தந்து வந்தார் வெள்ளை வாரணனார். "திரு" வென்பதற்கு "இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் இரண்டையும் ஒப்பக் கருதும் மனச்செம்மையே" என்று பேராசிரியர் என்னும் உரையாசிரியரைப்பற்றி விளக்கம் தந்தார். இத்தகைய பெரியோர்களைக் **"கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்"** என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் காட்டுவார். இந்த மனஉறுதி வழங்கவல்லவன் பேரருளாளன், முழுமுதற் பொருளாகிய இறைவன் ஒருவனே என்பதைக் குறிப்பிடுவார். இவ்வாறு இறைவன் தம் அடியார்கட்கு வழங்கும் துளக்கமிலா மனச் செம்மையை **"திருநின்ற செம்மை"** என்று திருத்தொண்டத் தொகையில் (4-ஆம் திருப்பாடல்) நம்பியாரூரர் போற்றுவதையும் சான்றாக்குவார். இத்தகைய சான்றோரின் வாழ்க்கை முறை **"திருநெறி"** என்று பெரியோரால் வழங்கப் பெறுவதாகவும் விளக்குவார். இத்தகைய திருநெறியினை வகுத்தருளிய சான்றோர்களாகிய திருமூலர் காரைக்காலம்மையார், சைவசமய குரவர்களாகிய நால்வர் முதலியோர் திருவாய்மலர்தருளிய திருப்பாடல்களே "திருநெறித்தமிழ்" எனவும் "திருமுறை" எனவும் வழங்கப் பெறுகின்றன என்று தெளிவுறுத்துவார். இதனை இன்று நினைவு கூர்கின்றேன்.

**நினைவு - 3 :** இந்தக் காலத்தில் ஒருநாள் மாலை எங்கள் இல்லத்திற்குச் சற்று அருகில் இருந்த தியாகராஜ மண்டபத்தில் ஏதோ இசைக்கச்சேரி நடைபெற்றது. அழைப்பு வந்திருந்தது. அடியேனும் வெள்ளை வாரணனாரும் அதற்குச் சென்றிருந்தோம். இம்மாதிரி நிகழ்ச்சிகட்குச் சென்றால் திருப்பதியிலுள்ள பல நண்பர்களைச் சந்திக்க முடியும். எனக்கு இசையில் அதிக ஈடுபாடு இல்லாவிடினும் அதனை மெய்மறந்து அனுபவிப்பதுண்டு. தாளம், பண் முதலியவற்றை இனங்கண்டு அநுபவிக்கும் ஆற்றல் இல்லையாயினும் மகுடியை அநுபவிக்கும் நாகம்போல் சிலபோது கண்ணை மூடிக்கொண்டு மெய்மறந்து இருக்கும் நிலைகளும் உண்டு.

பேராசிரியர் வெள்ளைவாரணனார் நன்றாக அநுபவித்ததைக் கண்டேன். அடிக்கடி தலையை ஆட்டியாட்டி அநுபவித்துக் கொண்டிருந்தார். கூட்டம் முடிந்த பிறகு அவரிடம், "நன்றாக இசையை அநுபவித்தீர்கள்; தலையை அடிக்கடி ஆட்டிக் கொண்டே அநுபவித்ததைக் கண்டேன். உங்கட்கு பண், தாளம் முதலியவை தெரியுமா? இனங்கண்டு அநுபவிக்க முடியுமா?" என்ற வினவினேன். அதற்கு அவர் "நீங்க ஒண்ணு. ஏதோ ஓரளவு தெரியும். இனங்கண்டு கொள்ளும் அளவுக்கு இசை ஞானம் எனக்கு இல்லை. ஆயினும் தலையை ஆட்டினால் பாடுவோருக்கு உற்சாகம் ஏற்பட்டு இன்னும் நன்றாகப் பாடுவார் அல்லவா?" என்றார். என்ன வெள்ளைமனம்?

**நினைவு - 4 :** திருப்பதியிலிருந்தபோது சென்னைப் பல்கலைக்கழகத்தினின்றும் சைவசித்தாந்தம்பற்றி ஒப்படைப்பு ஒன்று எழுதித்தர வேண்டிய பணி ஒன்று வந்தது. அது வந்த காலத்தில் சித்தாந்தம்பற்றி அடியேனுக்குத் தெளிவு இல்லை. இருந்தாலும் பணியை மறுக்காமல் எழுதித்தர ஆசை. ஏதோ எழுதினேன். அதனைச் சரிபார்த்துக் கொள்வதற்காக திருப்பதியிலிருந்து சிதம்பரம் போந்தேன். 142, கனகசபை நகரிலுள்ள பேராசிரியர் இல்லத்தில் இரண்டு இரவுகள் ஒரு பகல் தங்கியதாக நினைவு. பல்வேறு ஐயங்களை அகற்றிக் கொண்டேன்; என் பணியையும் நிறைவு செய்து கொண்டேன்.

தில்லைச்சிற்றம்பலவன் திருக்கோயில் செல்ல ஆசை; பேராசிரியர் என்னை இட்டுச் சென்றார். இதற்கு முன்னர் பல தடவை பார்த்து சேவித்திருந்தாலும் இப்போது பேராசிரியருடன் சென்று சேவித்தபோது பல செய்திகளை அறிந்து மன நிறைவு கொண்டேன். இதுகாறும் வந்த போதெல்லாம் எதனையும் கருதாது கோயிலை வலம் வருதல், ஆடலரசனைச் சேவித்தல், விபூதி சந்தனம் பெறல் முதலியவை சடங்குபோல் நடைபெற்று வந்தன. இப்போதைய நடைமுறை மாறுபட்டதாக அமைந்தது. ஒரு சமயம் திருவனந்தபுரம் அனந்தசயன சேவையின்போது பிள்ளைத் திருநறையூர் அரையரும், பராசரபட்டரும், திருமாளிகைகளையும், திருக்கோபுரங்களையும்

பிறவற்றையும் "பருகுவண்ண அருகா நோக்கமொடு" பார்த்துக் கொண்டு வந்ததைப் போல் இருந்தது என்று சொல்லிவைக்கலாம். இதனைக் கண்ட நஞ்சீயர் "அல்லாதார்க்கும் இவர்க்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே இவர்களானவாசி இருந்தபடி என்? என்று இருந்தேன்" என்று அருளிச் செய்ததை நினைந்து கொண்டே வெள்ளை வாரணனாருடன் உரையாடிக் கொண்டு வலம் வந்து கொண்டிருந்தேன்[3]

வெள்ளைவாரணனார் பல்வேறு பகுதிகளை விளக்கிக் கொண்டு வர மெதுவாக வலம் வந்தோம். அவரால் பெற்ற விளக்கம் "கோயில்" என்று சைவர்கள் வழங்கிவரும் சிற்றம்பலவன் திருக்கோயில்[4] சற்றேறக்குறைய நாற்பது ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. திருக்கோயில் ஊரின் நடுவே உள்ளது.[5] இத்தில்லைப் பெருங்கோயிலினுள் ஐந்து சபைகள் உள்ளன. (1) நடராசப் பெருமான் திருநடம் புரியும் **சிற்றம்பலம்** அல்லது **சிற்சபை** (2) **கனகசபை** இது சிற்றம்பலத்திற் எதிரிலுள்ள எதிரம்பலமாகும்; **பொன்னம்பலம்** என்றும் வழங்கப்பெறும். இங்குப் பெருமான் தினமும் ஆறுகாலப் பூசைகளும், ஆண்டில் நான்குமுறை திருமஞ்சனமும் கொண்டருள்கின்றார். நாடோறும் காலைபத்து மணியளவில் அழகிய சிற்றம்பலமுடையாரும் இரத்தின சபாபதியும் திருமுழுக்கு ஆராதனை பெறுகின்றனர் (3) **தேவசபை** : இது வழக்கத்தில் **பேரம்பலம்** எனப்படுகின்றது. இது யாகசாலைக் கருகில் ஈசான மூலையில் உள்ளது. இங்குத்தான் உற்சவமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர் (4) **நிருத்தசபை** : இது நடராசருக்கு

---

3 "மலை நாட்டுத் திருப்பதிகள்" - அனந்தபுரத்து அண்ணலார் (5வது கட்டுரை) - பக். 48 (முதற்பதிப்பு)

4 வைணவர்ளும் திருவரங்கத்தைக் "கோயில்" என்று வழங்கி வருதல் ஈண்டு நினைத்தல் தகும்

5 மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஊரின் நடுவே அமைந்துள்ளது போல், இத்திருக்கோயிலும் ஊரின் நடுவே அமைந்துள்ளதை ஒப்பு நோக்கலாம்.

எதிரிலுள்ள கொடிமரத்திற்குச் சிறிது தென்பால் உள்ளது. இங்கு ஊர்த்துவதாண்டவ மூர்த்தியைக் கற்சிலை வடிவில் சேவித்து மகிழலாம். மிகவும் சித்திரவேலைப்பாடு அமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது மண்டபம். குதிரைப் பூட்டிய தேர் அமைப்பைப் பெற்றுள்ளது. (5) **இராஜசபை** : இஃது ஆயிரங்கால் மண்டபம். இது கோவிலுனுள் வடகிழக்குத் திசையில் உள்ளது. நடராசப் பெருமான் ஆண்டில் ஆனியிலும், மார்கழியிலும் இருமுறை இவண் எழுந்தருள்கின்றார். இம்மண்டபத்தின் நீளம் 340 அடி; அகலம் 190 அடி. மண்டலத் தூண்கள் வரிசைக்கு இருபத்து நான்காக 41 வரிசைகள் உள்ளன. நடுவில் வெளவால் நத்தி மண்டபம் அமைக்கப் பெற்றுள்ளதால் ஐம்பத்தாறு தூண்கள் குறைவென்றும், ஆதலால் மண்டபத்தின் வெளியிலுள்ள தூண்களையும் சேர்த்து எண்ணிக்கை கொள்வர். இது தேவாசிரிய மண்டபமுமாகும். இராஜசபைக்கு அருகில் தொன்மைக் கோயிற்குளமாகிய **சிவகங்கைத் தீர்த்தம்** உள்ளது. நீளம் 160 அடி; அகலம் 100 அடி. இஃது அழகிய சுற்றுமாளிகையைக் கொண்டது.

பண்டைத் தமிழர் பாரதத்தையே விராட் புருடனாகக் கருதி சிவத்தலங்களைக் கொண்டு அதனை விளக்கும் ஒரு மரபும் உண்டு. திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா அதன் கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவத்தின் நடுஇடம். சிதம்பரம் இதயம் ஆதலின் இறைவனது இயக்கமாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் ஆடலரசனின் ஆனந்தத் தாண்டவத்தில் அமைந்திருப்பது வியக்கத்தக்க தத்துவமாகத் திகழ்கின்றது.

சிற்றம்பலத்தின் மேலுள்ள தூபி ஏனைய தலங்களில் உள்ளது போன்றதன்று. சாதாரண வீடுகளுக்குள்ள கூரை போன்றது 21600 தங்க ஓடுகளால் ஆனது. ஒவ்வொரு ஓட்டிலும் "சிவாய நம:" என்ற ஐந்தெழுத்து மந்திரம் எழுதப் பெற்றுள்ளதாக தில்லையுலா குறிப்பிடுகின்றது. ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் 24 மணிநேரம் கொண்ட ஒரு நாளுக்கு 21600 மூச்சு ஆகின்றது. இதுதான் தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை. இவ்வாறு கோயிலமைப்பிற்குத்

தத்துவங்கள் கூறப் பெறுகின்றன. இப்படிப் பலசெய்திகள் வெள்ளை வாரணனார் மூலம் அறிய முடிந்தது. இந்த சிவநேசச் செல்வர். சித்தாந்தக் களஞ்சியம்போல் எனக்கு அடிக்கடிப் பயன்பட்டார்.

நினைவு - 5. : 1977 ஆண்டு என் மணிவிழா ஆண்டு. திருப்பதி பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் மிகச் சிறிய அளவில் என் மணிவிழா கொண்டாடப் பெற்றது. அதனையொட்டி மணிவிழா மலர் ஒன்று கொணரத் திட்டமிட்டனர் ஆசிரியர்களும் மாணவர்களும். வாழ்த்து செய்தி கேட்டு பல பெரியார்கட்கு வேண்டுகோள் விடுக்கப்பெற்றது. வெள்ளைவாரணனாரையும் கேட்டனர். அப்போது அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் துணைப்பேராசிரியர். தமது வாழ்ந்துச் செய்தியை ஐந்து பாடல்களாக அனுப்பினார். அவை :

திருவளரும் பரதகண்டம் நிலமகளின்
திலகமெனத் திகழத் தெய்வ
அருள்வளரும் வேங்கடமும் அழகுதிகழ்
குமரியுமென் றமைத்த சீர்த்தித்
தெருள்வளரும் தமிழகத்தே செந்தமிழ்த்
திறம்வளர்க்கும் திருவி னோருள்
ஒருவரெனத் திகழ்சுப்பு ரெட்டியார்
தமிழ்த்தொண்டின் உரவோ ராவார்.

சோணாடில் சைவநலந் திகழிரட்டி
யார்மரபின் தோன்ற லாகிச்
சேணாட்டோர் ஆங்கிலமும் செந்தமிழும்
பயின்றுதிகழ் புலமை யெய்தி
நாணாளும் தமிழ்மொழியில் அறிவியல்நூல்
பலவியற்றி நாடு போற்ற
வீணாட்கள் படாதுதம் வாழ்நாட்கள்
தமிழ்க்கெனவே உழைக்கும் வீரர்.

துறையூரில் உயர்பள்ளித் தலைமையா
சிரியராய்த் தூய பண்பின்
இறையருளாற் காரைநகர் ஆசிரியக்
கல்லூரி எழில்பெற் றோங்க
உரைதருபே ராசிரிய னெனவுயர்ந்து
வேங்கடவ னருளால் உள்ளம்
நிறைவுபெற வேங்கடப்பல் கலைக்கழக
தமிழ்த்துறையில் நிலவும் செல்வர்

உழைப்பினால் உயர்வதுவே உரவோர்தஞ்
செயலெனவே உலகு போற்றப்
பிழைப்பினா லன்றியே பேருழைப்பால்
தமிழ்த்துறையின் பெற்றி நாட்டி
அழைப்பினால் நல்லறிஞர் பேரவையைத்
திருப்பதியில் அமைத்து நன்னூல்
இழைப்பினால் டாக்டர்என இயல்பட்டம்
பெற்றுமகிழ் இனிய நண்பர்.

சுப்புரெட்டி யாரெனவே தூயதமி
ழறிஞரெல்லாம் போற்ற நாளும்
ஒப்பிலாத் தமிழ்ப்பணிசெய் திருவாளா
உழைப்பினுக்கோர் உருவ மாக
இப்புவியோர் பாராட்ட விளங்குபே
ராசிரியர் இமையா முக்கண்
அப்பனரு ளால்மக்கள் சுற்றமுடன்
நீடூழி யமர்ந்து வாழி[6]

நினைவு - 6 : "திருவளர்செல்வர்கள்" என்ற நான்கு நூல்களில் நாவுக்கரசர் (1986) என்ற என் நூலை "சிறப்புப் பாயிர

6 மணிவிழா மலர் (1977) - பக். 46

மாலை" ஒன்றினால் வாழ்த்துமாறு வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு 22 பாடல்கள் எழுதி வாழ்த்தியுள்ளார் அவற்றுள் சில :

நன்றுடையான் வீற்றிருக்கும் சிராப்பள்ளி
வட்டத்து நல்லோர் வாழும்
தொன்றுமுதிர் பதியின்கண் இரட்டியார்
தொன்மரபில் வந்த தோன்றல்
குன்றெனுஞ்சீர்ப் பெருங்குணத்தான் குறைவிலா
நல்லுளத்தான் கோதொன் றில்லாத்
தென்றமிழ்தேர் பேராசான் சுப்புரெட்டி
யாரென்றும் செல்வ னாவான் (1)

பலகலையும் பயின்றுணர்ந்த பண்பாளன்
அன்பாளன் பாரோர் போற்றும்
நிலையுடைய சான்றாண்மைக் கிலக்கியமாய்
நிலவுபுகழ்க் குரிசில் நெஞ்சின்
நலமொன்றே பெருஞ்செல்வ மெனக்கொண்டு
நாடும்கிழ் நலத்தால் நாளும்
புலவருள மகிழ்கூர வேண்டுவன
புரிந்துவக்கும் புலமைச் செல்வன் (3)

ஆசிரியப் பயிற்சிபெற விழைவோருக்
காமுறையின் அறிவு நூல்கள்
மாசிரியப் பயிற்றுவளர் மாணவர்கள்
மதிநலத்தால் வளம்பெற் றோங்கத்
தேசுமிகு நூலியற்றித் தேர்ச்சிபெறச்
செய்துவக்கும் திறத்தான் "யார்க்கும்
ஆசிரியன இவன்"என்ன அறிஞரெலாம்
பாராட்டும் ஆற்றல் வாய்ந்தான் (5)

பிறமொழியில்தோன்றிவளர் மேனாட்டின்
அறிவியல்நூ லனைத்தும் பேணி

முறைமைபெற வுணர்ந்திடநம் தாய்மொழியில்
மொழிபெயர்த்தல் முதற்றொண்டாமென்(று)
உறுதிபெற வுணர்ந்தமையால் ஆங்கில நூல்
பலவற்றைத் தமிழின் கல்வித்
துறைவளர மொழிபெயர்த்தான் சுப்புரெட்டி
யெனும்பெயர்கொள் தோன்றல் மாதோ (7)

திருந்தப் பயின்றான் தமிழ்நடையின்
செப்ப முணரப் பலநூல்கள்
பொருந்த வரைந்தான் புகழுடனே
வாழ்ந்த புனிதர் அருள்வாழ்வும்
வருந்தி யுழைத்தே நாடுயர
வாழ்ந்த பெரியோர் வரலாறும்
அருந்தும் அமிழ்தாம் எனத்தமிழன்
அழகு திகழ வரைந்தனனால் (1

நாடும் மொழியும் உரிமைபெற
நல்ல தமிழ்தேர் பாரதியார்
பாடும் பனுவல் முதலாகப்
பல்லோர் பயிலும் இலக்கியமும்
பீடு பெறுமவ் இலக்கியத்தின்
பெற்றி காணும் திறனாய்வும்
தேடி யரிதற் கற்போர்க்குத்
தெவிட்டா விருந்து படைத்தனனே

சீரார் காழிப் பிள்ளையார்
திகழ்பே ரன்பால் அப்பரெனச்
செப்பும் திருநா வுக்கரசர்
சீர்த்தி மிக்க வரலாறும்
பாரோர் வாழ நாவரசர்
பிரிவால் திருவாய் மலர்ந்தருளும்

பதிகப்பாடல் பொருள் நயமும்
பண்பார் தலத்தின் வரலாறும்
ஆர்வ முடனே கற்போர்கள்
அறிந்து மகிழத் தக்கவண்ணம்
அறமார் நாவுக் கரசரெனும்
ஆய்வு நூலை அளித்தனனால்;
சோர்விலாமல் தமிழ்ப்பணிசெய்
தோற்ற முடையான் கற்றோர்கள்
சுப்புரெட்டி யாரெனும்பேர்
செப்ப விளங்கும் தூயோனே. (16)

பெருமை சிறுமை கருதாது
பேரன் புடனே யாவரொடும்
நெருங்கிப் பழகும் நீர்மையினான்
நின்ற சொல்லும் நேர்மையினான்
கருமை விரவா நெஞ்சத்தான்
கற்றோர் தமக்கே நற்பணியை
உரிமை செய்யும் உவப்புடையான்
உயிரோ ரன்ன கேண்மையினான் (19)

அயரா முயற்சி யாலறிவால்
வறுமை யகற்றும் ஆற்றலான்
செயிர்தீர் நட்பால் அன்பரொடு
சேர்ந்து பழகும் தெளிவுடையான்
மயர்வில் மனத்தான் மதிநலத்தால்
மக்கள் சுற்றம் மகிழ்கூரத்
துயர்தீர்ந் துலகம் வாழச்செய்
தூயோன் நேயம் மிக்குடையான் (20)

இந்தப் பாடல்களை அனுப்பிய பிறகு இவரைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லை. பல அன்பர்கள்மூலம் இவர் உடல்நிலை நைந்து சீர்குலைந்து நாகப்பட்டினத்தில் மருத்துவராகப் பணிபுரியும் டாக்டர்

M. திருநாவுக்கரசு[7] என்ற மருமகனாரின் இல்லத்தில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருவதை அறிந்தேன். நலமுடன் வாழ நன்றுடையானைப் பிரார்த்தித்தேன். அவர் மருகர் எழுதிய கடிதத்திலிருந்து கல்லீரலில் ஏற்பட்ட கோளாறினால் குருதி வாந்தி ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்று அறிந்தேன். நுகர்வினை முடிந்ததால் இறைவன் பொன்னடி சேர்ந்தார் என்பது மெய்ப்பொருளியல் உணர்த்தும் உண்மை. தத்துவ உண்மைகள் மனத்திற்கு அமைதி தருவனபோல் வேறொன்றைக் காண்டல் அரிது.

பேராசிரியர் வெள்ளைவாரணனார் சத்துவகுணம் நிறைந்த தமிழ்ச் செம்மல். மதுரைப் பல்கலைக்கழகம் இந்தச் செம்மலுக்கு முத்திரையிட்டு உலகினருக்கு "தமிழ்ச் செம்மலாகப்" பிரகடனப் படுத்தியது. தமிழில் ஆழ்ந்த புலமையுடைய இப்பெரும் பேராசிரியர் தொடக்கத்திலிருந்தே பல நிலைகளிலும் என்னுடைய தமிழ் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தவர். பழகுவதற்கு இனியவர். அடக்கம் இவரது தனிச்சிறப்பு. "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்ற வாய்மொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர். "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். என்றும் இவர்தம் திருநெற்றியில் திருநீறும் சந்தனப் பொட்டும் அணிசெய்யும். இப்பெருமகனாரின் மறைவு தமிழுலகிற்குப் பேரிழப்பு. இருந்தாலும் திருக்கயிலையில் தமிழ் முருகனுடன் தமிழாய்வு செய்து கொண்டிருப்பதாக என் சிறுமனம் கருதுகின்றது.

**நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு[8]**

***தோற்றம் : 14.1.1917*** ***சிவப்பேறு : 13.6.1988***

---

7 இவர் ஒரு சமயம் தலைமைச் செயலகத்தில் ஔவை நடராசன் திருமாளிகையில் அறிமுகமானார்.

8 குறள். 336

# 15

# துணை வேந்தர் டாக்டர் G.N. ரெட்டி

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்[1]

என்ற நாலடியாரின் திருப்பாடலோடு துணைவேந்தர் G.N. ரெட்டி பற்றிய சில நிகழ்ச்சிகள் நீங்காத நினைவுகளாகப் பதிவு பெறுகின்றன. காரணம், அவர்தம் வாழ்வும் இந்தப் பாடலின் கருத்துக்கு ஏற்றவாறு பொருந்துவதால், அதன் அடிப்படையிலும் "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குத் தத்தம், கருமமே கட்டளைக்கல்"[2] என்ற குறளின் ஒளியிலும் இந்த நிகழ்ச்சிகளைச் சிந்திக்கலாம்.

கொல்லா நர்ராயணசாமிரெட்டி (G.N. ரெட்டி) ஆந்திர மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்தில், சித்தூர் நகரத்திற்குப் பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மகாசமுத்திரம் என்ற சிற்றூரில் பிறந்தவர் (டிசம்பர் (1927). வேளாண்மையே தொழிலாக உடைய நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்[3]. தொடக்கக் கல்வியைத் தம் சொந்த ஊரில் பெற்றார். பின்னர் சித்தூரில் மாவட்டக் கழக நடுநிலைப் பள்ளி, பின்னர் உயர்நிலைப் பள்ளிகளில் பயின்றார். அடுத்து, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில்

1 நாலடியார் - 248
2 குறள். 505
3 அடியேனை விட பத்தாண்டு ஐந்து திங்கள் இளையவர்

தெலுங்கைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பயின்றார். தொடர்ந்து சென்னை கிறித்தவக் கல்லூரியில் தெலுங்கு B.O.L. (Hons) வகுப்பில் சேர்ந்து பயின்று முதல் வகுப்பு முதல்நிலையில் தேர்ச்சி பெற்றார்; இதற்குரிய தங்கப்பதக்கமும் (Gold medal) இவரை வந்தடைந்தது (1949); அக்காலத்தில் B.O.L (Hons) பட்டம் பெற்றவர்கட்கு எம்.ஏ. பட்டம் வழங்கப்பெற்றது ஓராண்டில் (1949). தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் மட்டிலும் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு எம்.ஏ. பட்டம் பெற்றதாக நினைவு. தொடர்ந்து எம்.லிட் (1955) பிஎச்.டி. (1962) பட்டங்களைப் பெற்றார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் பயிற்சியளிப்பவராக (Tutor) பணியேற்றார் (1949-50). அடுத்த ஆண்டில் அதே கல்லூரியில் துணைப்பேராசிரியராக ஏழாண்டுகள் பணியாற்றினார் (1950-57). அடுத்து ஆந்திர மாநிலம் அனந்தப்பூரில் (1958-59) தெலுங்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார். (1953-54) இல் திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றது. 1959-இல் இப்பல்கலைக்கழகத்தில் தெலுங்கு விரிவுரையாளராகச் சேர்ந்தார். அப்போது இலக்குமி நாராயணன் என்பார் துணைப் பேராசிரியர் (Reader) - துறைத் தலைவர். இக்காலத்தில்தான் (ஆகஸ்டு, 1960) நான் காரைக்குடியில் பேராசிரியர் பதவியைத் துறந்து திருப்பதிப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியேற்றேன். இந்தித் துறையில் தங்குவதற்கு இடம் தரப்பெற்றது; பின்னர் விலங்கியல் துறைக்கு இடம் மாற்றப் பெற்றது. இப்போதுதான் இரண்டு ஆண்டுகள் முறையாக உயிரியல் பயின்றேன். திரு. ரங்கராவும், திரு. சீநிவாசலு ரெட்டியும் இதற்கு மிகவும் உதவினர். அப்போது திரு. K. மகாதேவ சாஸ்திரி, திரு. கோதண்ட ராமய்யா, கந்தப்ப செட்டி[4] திரு சுப்பிரமணியம் ஆகியோர் துறையிலிருந்தனர்.

4. திரு கந்தப்பச் செட்டி (பயிற்சியாளராக இருந்தவர்) சென்னைப் பல்கலைக்கழகத்தில் தெலுங்கு விரிவுரையாளராகச் சேர்ந்தார். ஒரு சில ஆண்டுகளில் அவர் நஞ்சுண்டு தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி எட்டியது. அப்போது நான் திருப்பதியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

திரு. J. சென்னாரெட்டி டாக்டர் பட்டம் பெற்றவுடன் அவர் கீழ்த்திசை ஆய்வுக் கழகத்திற்கு இயக்குநரானார். இலக்குமி நாராயணன் பேராசிரியர் பதவி கிடைக்காததால் (அவருக்கு டாக்டர் பட்டம் இல்லை) அவர் தம் பணியைத் துறந்து டில்லி மாநகரிலுள்ள வேங்கடேசுவரா கல்லூரியின் முதல்வராகப் பணியேற்றுக் கொண்டார். டாக்டர் G.N. ரெட்டி அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் (1962-64) விருந்து விரிவுரையாளராகப் பணியேற்றார்.

இக்காலத்தில் விசாகப்பட்டினத்தில் ஓய்வு பெற்ற இலக்குமிகாந்தம் என்பாரை ஒப்பந்த முறையில் (அவருக்கு டாக்டர் பட்டம் இல்லை) பேராசிரியராகக் கொணர்ந்தார்கள். அவர்காலத்தில் டாக்டர் G.N. ரெட்டி அமெரிக்காவிலிருந்து திரும்பியதும்துணைப் பேராசிரியராக (Reader) உயர்ந்தார். (1964-65) ஒப்பந்த முறையின் காலம் முடிந்ததும் பேராசிரியர் இலக்குமிகாந்தம் ஓய்வானார். இப்போது டாக்டர் G.N. ரெட்டி 1965 முதல் பேராசிரியர் துறைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார். 1984 வரை பேராசிரியராக இருந்தவர், (1978-79) கல்லூரித் துணை முதல்வராகவும், இரண்டாண்டுகள் (1981-83) முதல்வராகவும் இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1981-84இல் பல்கலைக் கழக ஆட்சிக்குழு (Syndicate) உறுப்பினராகவும், 1966-75 இல் கீழ்த்திசைக் கல்வித்துறையில் தலைவராகவும் (Dean), (1977-78)இல் பல்கலைக்கழக வெளியீடுகளின் கௌரவ இயக்குநராகவும் இருந்து பல்புகழ் பெற்றார்; காரணம் "உலகத்தோடொட்ட ஒழுகல்" (140) என்ற வள்ளுவர் வாக்கைக் கடைப்பிடித்தார்.

செல்வர்களும் பதவியில் உள்ளவர்களும் அடக்கத்தைக் கடைப்பிடித்தல் சிறப்பு என்பது வள்ளுவர் வாய்மொழி. "எல்லார்க்கும் நன்றாம் பணிதல்" (125) என்பது பொய்யாமொழி. பதவிகள் வகிக்கும்போது எல்லா நிலைகளிலும் நடுவு நிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகியவர்.

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி**[5]

என்பதை என்றும் மனத்தில் இருத்திக்கொண்டு இயங்கினமையால் பல்கலைக் கழகத்தில் பெரும்பாலும் எல்லா நிலையிலும் உள்ளவர்களின் பாராட்டைப் பெற்றது வியப்பன்று. இவர்காலத்தில் இவர்மீது அழுக்காறு கொண்டவர்களும் இருந்தனர். இவர்களை யான் அறிவேன். திருப்பதியில் அக்காலத்தில் (ஏன் இக்காலத்தில் கூடத்தான்) நிலவிய ரெட்டி - நாயுடு வகுப்புப் போட்டியாலும், தனிப்பட்டவர்களின் பொறாமைக் காய்ச்சலாலும் அங்குமிங்குமாகக் "கிசுகிசுப்பு" இருந்து வந்ததையும் யான் அறிவேன். என் வாழ்கையில் இத்தகைய பூசல்களால் அடிபட்ட எனக்கு இவை புதிர்க் கதிர்ப்படங்கள் (X-ray pictures) போல் தெளிவாகப் புலனாயின.

எனக்குப் பிடித்தமான நாலடியார் கருத்தொன்று :

**அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்**
**மிகைமக்க ளான்மதிக்கற் பால - நயமுணராக்**
**கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்**
**வையார் வடித்தோது வார்**[6]

என்ற பாடலின் கருத்து என் பணிக்காலத்தில் எப்பொழுதுமே என் மனத்தில் முன் நிற்கும். "நாயின் மேலேறி வையாளி விட்டாலென்ன, வீழ்ந்தாலென்ன?" என்ற பழமொழிப்படி, அற்பர் புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் அதனால் பிறர்க்கு வருவதோர் உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை என்பதை மனத்தில் யான் கொண்டதைப் போல் அவரும் கொண்டொழுகினார் என்பதை யான் கண்டேன். இதனால் நாலடியாரைப் படித்தறிந்தவர் என்பது பொருளல்ல. இக்கருத்தினை தெலுங்கு இலக்கியங்களில் இவர் படித்தறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு பல்லோர் பாராட்டுக்கும் உரியவராக இருந்த டாக்டர் G.N. ரெட்டிக்கு (1984 - 87) காலத்தில் திருவேங்கடவன் பல்கலைக்

5 திருக்குறள் - 118

6 நாலடியார் - 183

கழகத்தின் துணைவேந்தர் பதவியும் வந்தது. ஒருகாலத்தில் துணைவேந்தர் பதவிக்குப் பெருமதிப்பு இருந்தது. அப்பெருமை இன்று "கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனாற்போல" மிகவும் கீழ்நிலைக்கு இறங்கிவிட்டது. இந்தச் சிறுமைக்குக் காரணம் அப்பதவி வசித்தவர்களேயாகும். கோபுரத்தில் ஏற்றி வைத்த பொம்மைபோல், "ஆட்டுவித்தார் ஆரொருவர் ஆடாதாரே" என்ற வாக்கையொட்டியும் செயற்பட்டதே இதற்குக் காரணமாகும். துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுக்கும் மூதறிஞர்குழு அமையும் முறை, அவர்கள் தேர்ந்தெடுக்கும், துணைவேந்தராவதற்கு உரிய மூவர் பட்டியல் அமைக்கும் முறை இவற்றில் சாதி, சமயம், கட்சி, அரசியல், இவற்றுக்கும் மேலாக பணம் ஆகியவை புகுந்து விளையாடுவதால் பல்வேறு வகையான சீர்கேடுகள், முறைகேடுகள் நடைபெற்று வருவதைக் காணலாம். ஆளுங்கட்சிக் காலத்தில் துணைவேந்தராகப் பதவி ஏற்றவர். அக்கட்சி தேர்தலில் தோல்வியுற்று வேறொரு கட்சி அரசு அமைக்கும் போது முன்னைய கட்சி ஆட்சியில் வந்த துணைவேந்தர் மனச்சாட்சிக்குகந்தவாறு செயற்பட முடிவதில்லை. எல்லாத் துணைவேந்தர்கட்கும் உரிய இந்தச் சாபக்கேடு டாக்டர் G.N. ரெட்டி காலத்திலும் இருந்தது வியப்பொன்றும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளிலும் சில நல்லவர்கள் அனைத்தையும் தாக்குப் பிடித்துக் கொண்டு சிறந்த முறையில் செயற்பட்டவர்களும் இருந்தனர் என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உண்டு.

டாக்டர் G.N. ரெட்டி பல்வேறு பதவிக்காலங்களில் நடைபெற்ற ஒரு சில நிகழ்ச்சிகள் நீங்காத நினைவுகளாக ஈண்டுப் பதிவாகின்றன.

**நினைவு - 1 :** 1970 - 71 இல் தமிழ் எம்.ஏ. வகுப்பு தொடங்கப் பெற்றது. 1972 வரை பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்புகளும் இருந்தன. துறைத்தலைவர், ஆசிரியர்கட்குத் தனித்தனி அறைகள் அமைந்தன. தனி அறை கிடைக்காதவர்கட்கு துறை நூலக அறையில் இடம் கொடுக்கப் பெற்றது. இன்னும் ஒரு வகுப்பறை இல்லாமையால்

பட்ட துன்பங்கள் சொல்லுந்தரமன்று. வடமொழி, இந்தி, வரலாறு, தெலுங்குத்துறைகளுக்கு உரிய அறைகள் காலியாக இருக்கும் நேரம் அறிந்து அவற்றில் வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தோம். ஆனால் தத்துவத்துறைத் தலைவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யில்லாதவராக இருந்தமையால் அடிக்கடி "மோதல்கள்" ஏற்பட்டன. ஒரு சமயம் தெலுங்குத் துறைத் தலைவராக இருந்த டாக்டர் G.N. ரெட்டியிடம் இந்த நிலைமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது எங்கட்குத் தேவையான பொழுதில் (Period) அவர் துறைக்கும் வகுப்பு இருந்தால், அந்தப் பொழுதில் தேவையான அறையைத் தமிழுக்கு அளித்து தம் வகுப்பு காலை 9-10 மணிக்கு நடைபெறுமாறு மாற்றிக் கொண்டார். நாங்கள் புகார் செய்தால் அவருக்குத் தலைவலி தருவதைத் தவிர அவரால் இடம் கண்டுபிடிக்க முடியாது என்பதை டாக்டர் G.N. ரெட்டியும் நானும் அறிந்தோம். மகள் வீட்டுக்கு வந்த தாய்க்கு இடம் அளித்ததில் அக்கறை கொண்ட டாக்டர் ரெட்டியை அன்றைய தமிழ்த்துறை நன்றியுடன் போற்றிக் கொண்டிருந்தது. இரண்டாண்டுளில் பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகள் நிரந்தரமாக எடுக்கப்பெற்றதால் இத்தகைய பிரச்சினை இல்லாதொழிந்தது. உருதுத் துறைத் தலைவர் "பாகிஸ்தான்" மனப்பான்மையுடையவர் என்பதற்கு முன்னநுபவம் இருந்தமையால்இடவசதி கேட்டு அவர் பக்கம் தலைவைத்துக்கூடப் படுப்பதில்லை.

**நினைவு - 2 :** திருப்பதியில் நான் வாழ்ந்த (ஆறு ஆண்டுகள் குடும்பமின்றி மாணியாய் வாழ்ந்த நிலை) போது ஒரு சிறு அறையில் தங்கியிருந்தேன். "கல்யாணமாகியும் பிரம்மச்சாரி; கடன் வாங்கியும் பட்டினி" என்ற நிலை என்னுடையதாக இருந்தது. டாக்டர் G.N. ரெட்டியும் அப்போது (1967 வரை) திருமணம் ஆகாதவர். 40 அகவை வரை மாணியாகவே இருந்தவர். நான் இருபது அகவையிலேயே இல்லற வாழ்க்கையில் புகுந்தவன். திருப்பதியில் அவர் எங்கோ ஓர் அறையில் வாழ்ந்து வந்தார். இருவருக்கும் போக்கு வரவுக்கு ஊர்தி மிதிவண்டியே; ஏழைகளின்

வாகனம். பராமரிப்புச் செலவு குறைவு; வைத்துக் கொள்வதற்கும் அதிக இடம் தேவை இல்லை. நாடோறும் திருப்பதியிலிருந்து பல்கலைக்கழகம் போய்வர 2 + 2 கி.மீ பயணம் செய்ய வேண்டும்.

பல பேராசிரியர்கள் மிதி வண்டியையே ஊர்தியாகக் கொண்டிருந்தனர். திருப்பதியிலும் காரைக்குடியிலும் நான் ஒருவனே வெயிலினின்றும் பாதுகாத்துக்கொள்ள தலையணி (Hat) கொண்டிருந்தேன். காரைக்குடியிலும் திருப்பதியிலும் ஆடையலங்கரத்திற்குக் குறைவில்லை. இடுப்பிற்குக் கீழே குழாய் உடுப்பு; இடுப்பிற்கு மேலே கழுத்துவரை மூடிய நிலையில் உள்ள மேல்சட்டை (Coat) அல்லது கழுத்துப்பட்டை அணிந்த நிலையிலுள்ள மேல்சட்டை; காலுக்கு காலுறையுடன் கூடிய பாதத்தை மூடிய செருப்பு வகை (Boots). இரப்பர் அடியுடன் கூடியது; தரையில் நடக்கும்போது ஒலி எழும்பாது; பூனை நடைபோலிருக்கும்[7] டாக்டர் G.N. ரெட்டியும் இப்படியே ஆடையலங்காரம் செய்து கொள்வார். பெரும்பாலும் அக்காலத்தில் எல்லோரும் இந்த முறையையே பின்பற்றியிருந்தனர்.

கல்லூரியிலிருந்து மாலையில் திரும்பும்போது காந்தி சாலையிலுள்ள "கண்ணன்" என்ற புத்தகக் கட்டமைப்போர் இல்லத்தில் இறங்கி ஒரு சில மணித்துளிகள் அமர்ந்திருப்பது வழக்கம். பலநூல்களைக் கட்டமைத்துக் கொள்வது என் வழக்கம். டாக்டர் G.N. ரெட்டியும் என்னைக் கண்டதும் மிதிவண்டியிலிருந்து இறங்கி உரையாடுவார். என்னால் கண்ணனுக்கு G.N. ரெட்டி நட்பு கிடைத்தது. பிறகு இருவருமாகச் சேர்ந்து திரும்புவோம். சில சமயம் இருவருமாக "ஆரோக்கிய பவன்" என்ற சிற்றுண்டிவிடுதியில் பசியாற்றிக் கொள்வோம்.

7 நான் திருப்பதியில் சேர்வதற்கு முன் டாக்டர் மணவாள ராமாநுசம் என்னும் பெரியார் கல்லூரி முதல்வராக ஒரு சில ஆண்டுகள் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் கல்லூரிப் பேராசிரியர்களை இரப்பர் அடியைக் கொண்ட காலணி போட்டுக் கொள்வதை வற்புறுத்துவாராம்.

நினைவு - 3 : நான் ஜூன் 1966 முதல் கபில தீர்த்தச் சாலையிலுள்ள உமாபதி ரெட்டி குடியிருப்பில் ஓர் இல்லத்தில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தேன். வேறு ஒரு குறுக்குவழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதால் டாக்டர் G.N. ரெட்டியை வழியில் சந்திக்கும் வாய்ப்பே இல்லாது போய்விட்டது. கண்ணன் சந்திப்பும் இல்லாதொழிந்தது.

1967-இல் டாக்டர் G.N. ரெட்டியின் திருமணம் அலர்மேல்மங்காபுரத்தில் ஒரு பெரிய திருமண மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. அனந்தப்பூரிலுள்ள ஒரு நல்ல குடும்பத்திலுள்ள எம்.ஏ. படித்த பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டார். நானும் என் துணைவியுடன் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தித் திரும்பினோம். G.N. ரெட்டியின் துணைவியாருக்கும் தேவஸ்தானப் பொறுப்பிலிருந்த கலைக்கல்லூரியில் விரிவுரையாளர் பணி கிடைத்தது. இதனால் G.N. ரெட்டி மிதி வண்டியைத் துறந்து மகிழ்வுந்தில் பயணம் செய்வதை மேற்கொண்டார். தம் துணைவியாரைக் கல்லூரியில் இறக்கி விட்டுத் தாம் மட்டிலும் பல்கலைக்கழத்திற்கு வருவதும், மாலையில் கலைக்கல்லூரிக்குச் சென்று துணைவியாரை இட்டுக் கொண்டு வீடு திரும்புவதும் அவர் வழக்கமாகி விட்டது. அப்போது பல்கலைக்கழகத்திற்கு எதிர் வரிசையிலுள்ள பேராசிரியருக்குரிய இல்லத்தில் வாழ்ந்து வந்தார். நான் திருப்பதியில் ஓய்வு பெற்றபிறகு சித்தூர் - திருப்பதி நெடுஞ்சாலையில், சாலைக்குச் சற்று உட்புறமாக அமைந்த அகன்ற இடம் ஒன்றில் சொந்தவீடு அமைத்துக் கொண்டு குடியேறி விட்டார். பல ஆசிரியர்கள் அங்குச் சொந்த இல்லங்களை அமைத்துக் கொண்டனர்.

நினைவு - 4 : 1970 - 71. இல் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. தொடங்கப் பெற்றது. 1970 - டிசம்பரில் பல்கலைக் கழக வளாகத்தில் எனக்கு இல்லம் ஒதுக்கப் பெற்றது. பிரகாசம் நகரில் துணைப் பேராசிரியர்கட்கென கட்டப்பெற்ற கட்டடங்கள் ஒன்றில். - அங்குள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்துக்

கொண்டனர் பல ஆசிரியர்கள். உள்ளூர் செல்வாக்கு, நிர்வாகத்துடன் ஒட்டி உறவு கொள்ளும் தன்மை, கால்கை (காக்கை) பிடிக்கும் பண்பு இவை இவர்கட்குக் கைகொடுத்து உதவின. எனக்கு ஒதுக்கப் பெற்றுக் கிடைத்த இல்லம் கட்டாந்தரையில் கட்டப்பெற்ற கீழ்க்கோடியில் உள்ள இல்லம், அரை அடிக்குக் கீழ் தோண்டினால் கூழாங்கற்களும் பெரிய கற்களுமே கிடைப்பன. இதனைச் சீர்ப்படுத்துவதில் மேற்கொண்ட முயற்சி என்னை தோட்டக்கலை வல்லுநராக்கியது. மண்வெட்டி, களைக்கொட்டு, சிறிய கடப்பாரை, வேறு சில சிறிய இரும்புக் கருவிகள், நீர்பாய்ச்சும் PVC குழாய் தயாரித்துக் கொண்டேன்.

சந்திரகிரிப் பக்கத்திலிருந்து வேலிக் கருவை விதைகளைச் சேகரித்துக் கொண்டேன். இல்லத்தைச் சுற்றி வேலிக்குட்பட்ட இடங்களில் அரை அடி தோண்டி வேலிக்கருவை விதைகளைப் போட்டு நீர்பாய்ச்சி வந்ததால் ஓராண்டிற்குள் ஓரடி உயரம் கருவைச் செடிகள் வளர்ந்து வேலித்தோற்றத்தைக் கொடுத்துவிட்டது. பிறகு ஆண்டுதோறும் ஆளுயரத்திற்கு ஆட்களை விட்டு வேலியாக அமைத்து அழகுபடுத்தினேன். வேளாண்மைக் குடி வழிவந்த எனக்கு இவை எல்லாம் தண்ணீர்ப் பட்டபாடு.

டாக்டர் G.N. ரெட்டியும் வேளாண்மைக் குடி வழிவந்தவர். செடி கொடிகளை உயிர்போல் போற்றி வளர்ப்பவர். அரளிச் செடி, குரோட்டன்ஸ் செடி வகைகள், வாழை முதலியவைகள் அவர் வாழ்ந்த பேராசிரியர்களுக்குரிய இல்லத்தில் நிறைய இருந்தன. அவற்றையெல்லாம் வாங்கிவந்து என் இல்லத் தோட்டத்தில் நட்டு வளர்த்தேன். பல்வகை ரோஜாச் செடிகளை இரண்டு வரிசைகளில் நட்டு வளர்த்தேன். என் இளைய மகன் இராமகிருட்டிணன் (அப்போது திருப்பதி மருத்துவக் கல்லூரி மாணவன்) ரோஜா செடிகளின்மீது தனி அக்கறை செலுத்தினான். ஒரே செடியில் வெவ்வேறு வண்ண ரோஜாச் செடிகளின் கிளைகளை வெட்டி ஒட்டிச் சேர்த்து வெள்ளை, சிவப்பு, மஞ்சள், ஊதா, ஆரஞ்சு வண்ணப் பூக்கள் தோன்றுமாறு செய்து மகிழ்ந்தான். ஒரு சமயம் டாக்டர் G.N. ரெட்டி தற்செயலாக என் இல்லத்திற்கு வந்தபோது

இவ்விநோதச் செடியைக் கண்டு மகிழ்ந்தார்; வியந்தார். அவர் தந்த வாழைக் கன்றுகள் தோப்பாக வளர்ந்து குலைகள் தள்ளும் நிலையிலிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். அவர் தந்த கறிவேப்பிலைச் செடி மட்டிலும் வளராமல் பட்டுப் போயிற்று என்றும், பெங்களூரி லிருந்து என் நண்பர் பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம் தந்த செடிமட்டிலும் கொழுத்து செழுமையாக வளர்ந்து பொலிவதைக் காட்டினேன். அங்ஙனமே என் அரிய நண்பர் ஆங்கிலப் பேராசிரியர் திரு. எஸ். விசுவநாதன் இல்லத்தினின்றும் பெற்று வந்த முருங்கைப் போத்துகளும் மிக நன்றாக வளர்ந்து ஒரு மீட்டர் நீளமுள்ள முருங்கைக்காய் தொங்குவதையும் G.N. ரெட்டி கண்டு மகிழ்ந்தார்.

**நினைவு - 5** : 1972 இல் முதன் முதலாகத் தமிழ் எம்.ஏ. மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். இராமலிங்க வள்ளல் பெயரிலும் (பொள்ளாச்சி வள்ளல் மகாலிங்கம் வழங்கிய பொருளுதவியால் நிறுவப் பெற்ற அறக்கட்டளை) திருவள்ளுவர் பெயரிலும் (சித்தூர் வணிக வள்ளல் இராசமாணிக்கம் செட்டியார் முன் நின்று தண்டப் பெற்ற பொருளுதவியால் நிறுவப் பெற்ற அறக்கட்டளை) வழங்கப் பெற்ற இரண்டு தங்கப் பதக்கங்களை முறையே டி. சாமுவேலும், தேவசங்கீதமும் தட்டிச் சென்றனர். தேவசங்கீதம் பிஎச்டிக்கு ஆய்வு செய்ய விரும்பினதால் என் மேற்பார்வையில் ஆய்வு மாணவனாகப் பதிவு செய்வித்துக் கொண்டேன்.

அக்காலத்தில் பல்கலைக்கழக மானியக் குழு (U.G.C) ஒரு பல்கலைக்கழகத்திற்கு இத்தனை பேருக்கு உதவிச் சம்பளம் (Scholarship) என வழங்கும். 1972 இல் 30 பேருக்கு வழங்கியதாக நினைவு. பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பெற்ற ஆய்வுக்குழு கலைக்கு இவ்வளவு, அறிவியலுக்கு இவ்வளவு என்று பிரித்துக் கொள்ளுமாறு ஆணையிடும். இப்பிரிவுகளில் அடங்கியுள்ள துறைகள் ஒவ்வொருவருக்கும் இத்தனை என்று பிரித்துக் கொள்ளும். அந்த ஆண்டு தெலுங்குத்துறைக்கு மூன்று கிடைத்தனவாக நினைவு. ஆய்வுக்குழு தமிழ்த்துறையைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே ஒன்று கூட தமிழ்த் துறைக்கு வழங்கப் பெறவில்லை.

டாக்டர் G.N. ரெட்டியை அணுகினேன். நான் இத்துறையை நிறுவுவதற்கு பத்தாண்டுகள் பட்டபாட்டை அவர் நன்கு அறிவார். தேவசங்கீதம் முதல் வகுப்பில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றதை எடுத்துக்கூறி ஓர் உதவிச் சம்பளச் சலுகையைத் தமிழ்த்துறைக்குத் திருப்பி விடுமாறு வேண்டினேன். ஏழை எளியவர்மீது இரக்கக் குணம் உள்ளவராதலாலும், அவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கு உதவவேண்டும் என்ற கொள்கையுடையவராதலாலும் ஓர் உபகாரச் சம்பளத்தைத் தமிழ்த்துறைக்கு விட்டுக்கொடுப்பதாகப் பல்கலைக்கழகத்திற்கு உடனே எழுதினார். இதனால் தேவசங்கீதத்தற்கு வாய்ப்பு கிடைத்தது. மாதம் ஐந்நூறு ரூபாய் உபகாரச் சம்பளமாகவும், ஆண்டுக்கு 1500/= ரூபாய் புத்தகம், தாள் முதலியவை வாங்கிப் பயன்படுத்துவதற்கு உதவியாகவும் வழங்கப்பெற்றன. சங்கீதத்திற்கு மூன்றாம் ஆண்டு இத்தொகைகள் ரூ. 750/= ஆகவும், ரூ. 2500/= ஆகவும் உயர்ந்தனவாக நினைவு. இங்ஙனம் பெறுவதற்கு முதற் காரணமாகத் திகழ்ந்த டாக்டர் G.N. ரெட்டியின் பெருமனம் நீங்காத நினைவாக ஈண்டுப் பதிவு பெறுகின்றது.

**நினைவு - 6** : 1977 - செப்டம்பரில் என் மணிவிழாவை துறை ஆசிரியர்களும், மாணாக்கர்களும் கொண்டாடினர். பல பெரியார்களும் பல்கலைக்கழகப் பலதுறை ஆசிரியர்கள் வழங்கிய வாழ்த்துரைகள் ஒரு மணிவிழா மலராக வெளிவந்தது. அந்த மலருக்கு டாக்டர் G.N. ரெட்டி[8] வழங்கிய ஆங்கில வாழ்த்துரையின் சில பகுதிகள் தமிழில் தரப்பெறுகின்றன :

> "...... இந்து சமய மரபில் 61-வது பிறந்தநாள் விழா என்பது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். ஆசிரியர்களும் மாணவர்களும் டாக்டர் சுப்பு ரெட்டியாரின் நண்பர்களும் அவர்தம் மணிவிழாவைக் கொண்டாடுதல் பாராட்டப்பட வேண்டிய அறிகுறியாகும். அக்காலத் தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் ரெட்டியார் கற்றுத் துறை போய வித்தகர்

8 அப்போது அவர் துணைமுதல்வர் பதவியை வகித்து வந்தார்.

என்பதிலும், வளமான எழுத்தாளர் என்பதிலும் தமக்கென சிறந்ததோர் இடத்தைப் புனைந்து கொண்டவர். அவருடைய எழுத்துரைகள் திறனாய்வு, கல்வி, இலக்கணம், இலக்கியம், மெய்ப்பொருள், பொதுவிருப்பார்ந்த அறிவியல் என்ற மிகவிரிந்த எல்லைகளைக் கொண்டவை. இவை தவிர பல்வேறு ஆய்வுக் கட்டுரை வழங்கிப் பெரும்புகழ் பெற்றவர். இன்னும் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருப்பவர். இவருடைய நற்பண்புகள், திறமைகள், புலமை முதலியவை இளைய தலைமுறையினரால் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை.

தோழ ஆசிரியர் என்ற முறையில், பேராசிரியர்கள் கல்வி சம்பந்தமான பேரார்வத்தையும், பல்வேறு இடர்ப்பாடுகளையும் தாங்கிக்கொண்டு திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை நிறுவிய பாங்கையும் யான் வியந்து போற்றுகின்றேன்; பாராட்டுகின்றேன். திருவேங்கடநாதன் திருவருளால் இன்றும் பல்லாண்டுகள் வாழ்ந்து இத்தகைய இலக்கியப் பணியைத் தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன்."[9]

இங்ஙனம் என்பால் பேரன்பு கொண்டு வாழ்த்தியும், உடன்பிறவாச் சகோதரர்போல் பழகியும் வந்த பெருமகனார் வாழவேண்டிய வயதிலேயே திருநாடு அலங்கரித்தது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

**நினைவு - 7 :** 1984 - 87 ஆண்டுகள் டாக்டர் G.N. ரெட்டி துணைவேந்தராகப் பணியாற்றிய காலம். நான் ஓய்வு பெற்று ஏழாண்டுகளாயின (ஓய்வு பெற்றது அக்டோபர் 24, 1977). என் பணிக்காலத்தில், டாக்டர் D. சகந்நாத ரெட்டியின் ஆட்சியில் (1969 - 75) துணைப் பேராசிரியர் பதவி வருவதிலும் அதற்குமேல் பதவி உயர்வு பெறுவதிலும் நான் பட்டபாட்டையும், ஓய்வு பெற்ற பின் ஓய்வு ஊதியம் பெறாமல் தொல்லைப் பட்டுக் கொண்டிருப்பதையும் துணை வேந்தர் டாக்டர் G.N. ரெட்டி சிந்தித்துப் பார்த்திருக்க

6 மணிவிழா மலர் - பக். 32

வேண்டும் என்பது என் நினைவு. அக்காலத்தில் துறைத்தலைவராக இருந்த, என்மீது அளவுகடந்த பற்றும், பாசமும் கொண்ட டாக்டர் P. சௌரிராசனும் டாக்டர் ரெட்டிக்கு என் நிலையை எடுத்துக் கூறியிருக்கக்கூடும் என யான் கருதுகிறேன். வைணவத்தையும் தமிழ் இலக்கியப் பரப்பையும் நன்கு ஆராய்ந்தவன் என்பதையும் சைவத்திலும் அத்தகைய ஈடுபாடு உண்டு என்பதையும் டாக்டர் ரெட்டி நன்கு அறிவார். 68 அகவையுடையவர் மூன்று மாத காலம் திருப்பதியில் வந்து தங்கினால் உணவு முதலியவை ஒத்துவரா என்பதையும் நன்கு தெளிந்தவர். எனினும் விருந்துப் பேராசிரியராக மூன்று மாத காலத்துக்குப் பணி புரியுமாறு ஆணை அனுப்பினார். என்னுடைய நலத்தைவிட மாணவர்களின் நலமே முக்கியம் எனக் கருதியவர் டாக்டர் ரெட்டி என்பது எனக்குப் படுகின்றது. தங்குவதற்கு விருந்தினர் மாளிகையில் இலவசமாக இடம் ஒதுக்கப் பெற்றது. ஏதோ வாய்ப்பினை ஒப்புக்கொண்டு திருப்பதிப் பணியை ஏற்றேன்.

என் மனம் கருதியவற்றையும் சிந்திக்கின்றேன். மலையேறி மாலவனைக் காணாவிட்டாலும் அவன் அடிவாரத்தில் சில காலம் தங்கியிருந்தாலும் போதும் எனக்கருதினேன்.

**சென்று சேர்த்திரு வேங்கட மாமலை**
**ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே[10]**

என்ற நம்மாழ்வார் வாக்கும் என்னை அப்பணியை ஒப்புக் கொள்ளுமாறு தூண்டியது. என் பிள்ளைப் பருவத்தினின்றே எம்பெருமான் ஏழுமலையான் என்னை ஆட்கொண்டான் என்பதில் அதிராத நம்பிக்கையுடையவன்.

**சேலேய் கண்ணியரும்**
**பெருஞ்செல்வமும் நன்மக்களும்**
**மேலாத் தாய்தந்தையும்**
**அவரேயினி யாவாரே[11]**

---

10 திருவாய் 3.3 : 8

11 மேலது 5.1 : 8

என்ற நம்மாழ்வார் கொள்கையில் பிடிப்புள்ளவனாகையாலே எனக்கு இந்த அழைப்பு. "தேனே பாலே கன்னலே அமுதே" எனத் தித்தித்தது. ஆதலால் வயது முதிர்ந்த காலத்தில் உணவு முதலிய துன்பங்களையும் பொருட்படுத்தாது அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

மூன்று மாத காலத்தில் "அங்குற்றேன் அல்லேன்; இங்குற்றேன் அல்லேன்; உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து; எங்குற்றேனும் அல்லேன்"[12] என்ற ஆழ்வார் திருவாக்கின்படி விட்டுவிட்டு திருப்பதி 45 நாட்களும் சென்னையில் 45 நாட்களும் கழித்தேன். எம்.ஏ. மாணாக்கர்கட்கு வைணவ தத்துவத்தை, என்றுமில்லாத முறையில் மிக உற்சாகமாக, நானே வியக்கும் வண்ணம் கற்பித்தமை நீங்காத நினைவாக மனத்தில் எழுகின்றது.

**நினைவு - 8 :** அந்த ஆண்டு (1986 சனவரி - 14 என்பதாக நினைவு) பொங்கல் பண்டிகை சமயம். திருப்பதியில் தங்கிவிட்டேன். ஆந்திரத்தில் தீபாவளியைவிட பொங்கல் பண்டிகைக்குச் சிறப்பு அதிகம். அதனைப் **"பெத்த பண்டுக"** (பெரிய திருநாள்) என்று வழங்குவர். தமிழர்கள் பொங்கல் திருநாளைத் **"தமிழ்த் திருநாள்"** என்று பெருமையாகப் பேசுவதுண்டு. இப்படிச் சொல்லுவதைவிட **"உழவர் திருநாள்"** என்று செப்புவதே சிறப்பு என்பது என் கருத்து. எல்லோரும் பொங்கல் திருநாளைக் கொண்டாடினாலும் அத்திருநாளன்று உழவர்களிடம் காணப்பெறும் உற்சாகத்தைப்போல் பிறரிடம் காண்டல் அரிது.

*டாக்டர் ரெட்டி விருந்தினர் மாளிகையில் இருந்த என்னை இரண்டுநாள் தம் வீட்டு விருந்தினனாக அழைத்துத் தம் திருமாளிகையிலேயே தங்க வைத்து மிக்க அன்புடன் உபசரித்தார். தாம் அன்புடன் பராமரிக்கும் தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தார். தர்பூஸ் கொடி செழிப்புடன் படர்ந்து ஏராளமான கனிகள் நிறைந்திருப்பதையும், குட்டை, நெட்டை என்று பல்வேறு வகைத்

12 மேலது - 5.7 : 2

தென்னை மரங்கள் குலை தள்ளியிருப்பதையும் காட்டி என்னை மகிழ்வித்தார். மாட்டுச் சாணத்தை எரித்து அந்த வாயுவினால் அமைந்த அடுப்பைக் காட்டி என்னை வியக்க வைத்தார். தர்பூஸ் பழத்தை மைசூர்பாகுத் துண்டுகள் போல் அழகாக வெட்டித் தட்டில் வைத்துத் தந்தது கவிதையை அநுபவித்ததுபோல இருந்தது. கால தாமதமாகத் திருமணம் ஆனாலும் "மனைத்தக்க மாண்புடையவள்" இல்லத்தரசியாக அமைந்ததைக் கண்டு பெருமிதம் கொண்டேன். கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துவதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

சந்திரகிரிப் பக்கம் உள்ள மங்காபுரத்துக்குத் தம் குடும்பத்துடன் என்னையும் இட்டுச் சென்று அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகச் செய்ததைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகின்றேன். நான் திருப்பதியில் இருந்த 17 ஆண்டுகளில் இந்தத் திருக்கோயிலுக்குச் செல்லாத குறையினைப் போக்கியது யான் பெற்ற மற்றொரு பேறாக அமைந்தது.

காலந் தாழ்ந்து மணம் செய்து கொண்டாலும் நல்ல மனைவி வாய்த்து இல்லறமாகிய நல்லறம் புரிந்து வருவதை நேரில் காண முடிந்தது.

> **சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்**
> **இல்லாம லேவந்த விருந்தோம்பி - செல்வத்(து)**
> **இடரின்றி ஏமாந் திருந்தாரே நாளும்**
> **கடலுள் துலாம்பண்ணி னார்**[13]
>
> [ஏமாந்திருக்காரே = ஏம (ம) ஆ(ர்)ந்திருந்தாரே
> இன்பமுற்று வாழ்ந்தவர்களே]

என்ற பழமொழி ஆசிரியர் காட்டும் குடும்பத்தைக் காணமுடிந்தது. "ஆசைக்கு ஒரு மகள்; ஆஸ்திக்கு ஒரு மகன்" என்று இரண்டு

13 (பழமொழி நானூறு-130)

மக்கட்ச் செல்வங்களைப் பெற்றிருத்தலையும் கண்டேன்; மகிழ்ந்தேன். இரு செல்வங்களும் இப்போது பொறியியல் கல்வி பெற்று வருவதாக அறிகின்றேன்.

**நினைவு - 9 :** இவர் துணை வேந்தராக இருந்த காலத்தில் (மார்ச்சு 27, 1986) தான் தமிழ்த்துறையின் வெள்ளி விழா சீருடனும் சிறப்புடனும் நடைபெற்றது. கேரள ஆளுநர் பேராசிரியர் இராமச்சந்திரன் வெளிவிழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்பித்து வாழ்த்து கூறினார். இந்த விழாவின்போது (1) **வைணவ உரைவளம்** (2) **தம்பிரான் தோழர்** (3) **ஆன்மிகமும் அறிவியலும்** (4) **Collected Papers** என்ற நான்கு நூல்கள் திரு. R. சுந்தரராஜு I.P.S. அவர்கள் தலைமையில் வெளியிடப் பெற்றன. திரு. அ. நடராசன், (இயற்பியல்), திரு ஜயந்தா (ஆங்கிலம்) இந்த நூல்களைப் பாராட்டிப் பேசியதாக நினைவு. திரு. R. சுந்தரராஜு தம் தந்தையா - அன்னையார் பெயரில் (திரு. P. அரங்கசாமி ரெட்டியார் - திருமதி. சத்தியபாமா அம்மாள் அறக்கட்டளை) ரூ. 25000/= அளவில் தமிழ்த்துறையில் ஓர் அறக்கட்டளை நிறுவுவதாக அறிவித்து ரூ. 5000/=க்கு ஒரு வரைவோலை (Draft) வழங்கினார். பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் (துறை நிறுவிய பேராசிரியர்) டாக்டர் பொன். சௌரிராசன் (தமிழ்த்துறைத் தலைவர்) இருவரும் பாராட்டுரையும் கேடயமும் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றனர்.

**நினைவு - 10 :** ஆந்திரத்தில் ரெட்டி - நாயுடு சாதிப் போராட்டம் நடைபெற்று வருவது உலகறிந்த செய்தி. அரசியலில் நடைபெறும் இந்தப் போராட்டம் கற்றவர்கள் நிறைந்த பல்கலைக்கழகத்திலும் தலைகாட்டி வருவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நான் அங்குப் பணியாற்றியபோது டாக்டர் G.N. ரெட்டியிடம் இந்தக் குறையைக் காணவில்லை. இதுபற்றி நிலவிய "கிசுகிசுப்பையும்" கேட்கவில்லை. அப்படிப்பட்ட குணமுடையவர் டாக்டர் ரெட்டி என்பதற்கு ஒரு சிறு அறிகுறியும் காணவில்லை; காற்று வாக்கில் கூட அப்படிப்பட்ட செய்தி என் காதிற்கு எட்டவில்லை.

நினைவு - 11 : டாக்டர் G.N. ரெட்டி துணை வேந்தராகப் பதவி வகித்த காலத்தில் எல்லா மட்டங்களிலும் உள்ள ஊழியர்கட்குப் பதவி உயர்வு, புதிதாக ஆட்கள் நியமனம் போன்றவற்றில் பேருதவிகள் செய்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்று நான் மிகவும் மகிழ்ந்தேன். இவர்களுள் எல்லாச் சாதியார்களும் அடங்குவர் என்ற செய்தியும் பரவலாகப் பேசப் பெற்றது. இவ்வாறு பயன்பெற்றவர்களில் ரெட்டி குலத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருந்திருக்கக் கூடும். இதனை வைத்துக் கொண்டு சிலர் கயிறு திரிக்கின்றனர் போலும் என்று நினைத்துக் கொண்டேன். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஒருவரைப்பற்றி மதிப்பீடு செய்யும்போது,

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்கக் கொளல்**[14]

என்ற வள்ளுவத்தை உரைகல்லாக கொண்டு ஆராய்ந்தால் உண்மை தெளிவாகும். நிர்வாகத்தில் இத்தகைய குறைகள் ஏற்படுவது இயல்பு. நீதிமன்றங்களில் வழங்கப்பெறும் நீதியும் சில சமயம் ஒரு பக்கம் சாய்ந்திருப்பதைக் காண்கின்றோம். இவையெல்லாம் உலகியலில் ஒட்டிய நடைமுறை எனக் கொண்டு மறப்பது - மன்னிப்பது - பெருந்தன்மையாகும்.

நான் திருப்பதியில் பணியாற்றியபோது தெலுங்குத்துறையில் ஆய்வு மாணவர்களாக இருந்த இருவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தெலுங்குத்துறையில் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இருவருமே எம்.ஏ. முதல்வகுப்பு பெற்று டாக்டர் பட்டமும் திருப்பதியில் பெற்றவர்கள். இவர்களை நான் தமிழ்த்துறைக்குப் போகும்போதெல்லாம் சந்தித்து உரையாடுவதுண்டு. தெலுங்குத் துறை வளர்ச்சியைப்பற்றி உசாவுவதும் உண்டு. எப்போதோ "நீங்கள் திருப்பதியில் பணியாற்றினால் சிறக்குமல்லவா?" என்று கேட்டதாக நினைவு. இந்த

14 குறள் - 504

இருவரையும் திருப்பதியிலிருந்தபோதே நன்கு அறிவேன்; மிக அன்பாகப் பழகுவேன். பல துறையிலுள்ள மாணவர்கள்பால் எனக்கு நல்ல செல்வாக்கு உண்டு. அவர்கட்கு அவர்கள் துறையில் சேருங்கால், அல்லது தேவைப்படுங்கால் மதிப்பெண் பட்டியல், பிறந்த நாள் சான்றிதழ், சாதிபற்றிய சான்றிதழ் இவற்றின் நகல்களில் கையெழுத்திடுமாறு வேண்டி வருவர். நானும் என் துறையிலுள்ள ஆய்வு மாணவர்களின் துணைகொண்டு அசலையும் நகலையும் சரிபார்க்கச் செய்து கையெழுத்திட்டு வாழ்த்துவேன். இக்காரணம் பற்றியும் என் செல்வாக்கு பெருகியது.

சென்னையில் பணியாற்றும் இருவரில் ஒருவர் நாயுடு வகுப்பினர்; மற்றொருவர் ரெட்டி குலத்தவர். "நான் கம்மா (நாயுடு) வகுப்பைச் சேர்ந்தவனாதலால் டாக்டர் ரெட்டி என்னைத் தேர்ந்தெடுக்காமல் ஒதுக்கினார்" என்று குறைகூறினார். மற்றவர் "நான் ரெட்டி வகுப்பினனாதலால் யாராவது சாதியானுக்குப் பதவி வழங்கினார் என்று குறை கூறுவார் என்று அஞ்சி என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை" என்று குறைபட்டுக் கொண்டார். தெலுங்குத் துறையில் கம்மா, ரெட்டி. குலத்தவர்கள் பணியாற்றி வருவதை நான் நன்கு அறிவேன். ஆதலால் "டாக்டர் ரெட்டி சாதி வேற்றுமை பாராட்டுவர்" என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதைத் தெளிந்து கொண்டேன்.

**நினைவு - 12 :** துணைவேந்தர் பணியிலிருந்து 4.5.1987இல் ஓய்வு பெற்றார். மீண்டும் துறைக்கு வந்து ஓராண்டுக் காலம் பேராசிரியராகப் பணிபுரிந்தார்: இப்பதவியிலிருந்தும் ஜூலை 1988இல் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். பின்னர் ஆகஸ்டு, 1988 இல் தகுநிலைப் பேராசிரியராகச் சேர்ந்தார். இத்திட்டப்படி ஓய்வு ஊதியம் போக பல்கலைக் கழக மானிய ஆணையம் மாதம் ஒன்றுக்கு ரூ. 4000/= ஊதியமாக வழங்கும்.

இக்காலத்தில் அவர் மன அமைதியுடன் இல்லை. அவ்வமயம் துறைத்தலைவராக இருந்த துணைப் பேராசிரியர் இவருக்குத் தங்க இடவசதியையும்கூட அமைத்துத்தர

மறுத்தமையையும் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக மானிய ஆணையம் தந்த ரூ. 4000/= யும் கூடப் பெற்றுத்தருவதில் பல்வேறு இடர்ப்பாடுகளையும் தடைகளையும் எழுப்பினதாக அறிந்தேன்; மிகவும் வருந்தினேன்.

நற்கல்விகற்று, நற்பதவிகள் வகித்து[15], நற்பணிகள் புரிந்த நல்லவருக்கு இறுதிக்காலத்தில் மன அமைதியுடன் வாழும் சூழ்நிலை அமையாதது அவர்தம் நுகர்வினையின் (பிராரப்தத்தின்) பலன் என்றே கருதவேண்டியுள்ளது. நுகர்வினையை அநுபவித்தே தீரவேண்டும் என்பது விதி. ஆனால், மன அமைதியின்மை காரணமாக உடல்நலன் குன்றி, படுக்கையாகப் பலநாட்கள் கிடந்து துன்புறவில்லை; மரணகாலத்தில் பலர் படும் துன்பங்கள் இவரைச் சாராதது இறைவனது திருக்குறிப்பு. எதிர்பாராமல் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் திருநாடு அலங்கரித்து விட்டார். இதுவும் ஒரு நற்பேறு என்றே எனக்குத் தோன்றுகின்றது.

**- யாக்கை**

**மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே**
**நிலையாது நீத்து விடும்[16]**

***தோற்றம் : 23.12.1927**** ***முக்தி : 13.7.1989***

---

15 எட்டுத்தரமான நூல்களின் ஆசிரியர்; அனைத்திந்திய நிலையில் பல்வேறு கருத்தரங்குகளில் பங்குகொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவர். ஆ.மா. சாகித்திய அகாடமி பல்கலைக்கழக மானிய ஆணையம், பல்வேறு ஆய்வு நிறுவனங்களில் உறுப்பினராகவும், துணைத்தலைவராகவும் இருந்து பணிபுரிந்து நாடாளவிய புகழும் பாராட்டும் பெற்றவர்.

16. நாலடியார் - 28

* பிறந்தநாள் சரியாக அறியக்கூடவில்லை.

# 16

# பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

**நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்**
**மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்**[1]

என்னுடைய பேராசிரியர் மு. நடேச முதலியாரின் அருமந்தத் திருமகனார் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவியைப்பற்றி எழுதத் தொடங்கும்போது மேற்கண்ட நாலடியாரின் செய்யுள் நினைவிற்கு வருகின்றது. காரணம் எங்கள் இருவருக்குமே இந்தச் செய்யுள் என்றுமே குறிக்கோள் பொருளாக இருந்து வந்ததனால். என்னைவிட பத்து ஆண்டுகட்குமேல் இளையவர். இதனை எழுதும்போது (1998) என் வயது 83. சஞ்சீவி இப்போது இருந்தால் அவர் 73 அகவை உடையவராக இருப்பார். ஆனால் 61-ஆம் அகவையில் சிவப்பேறு அடைந்துவிட்டார்.

**நினைவு - 1 :** நான் திருச்சியில் பயின்றபோது (1934-39) இடைநிலை வகுப்பில் இருந்தபோது (1934-36) காசியப்பா ராவுத்தர் ஸ்டோர்ஸ் என்ற தங்கும் விடுதியில் (திருச்சி சவுக் பகுதி) தங்கியிருந்தபடியால் மலைக்கோட்டை யானைக்கட்டித் தெருவில் வாழ்ந்து வந்த பேராசிரியர் மு. நடேச முதலியார் அவர்களை அடிக்கக் காணும் பேறு இருந்தது. பேராசிரியர் முதலியாரின் இல்லம் ஒரு சிறு சந்தில் இருந்தது. அப்போது சஞ்சீவிக்கு 6, 7 வயது இருக்கலாம். எப்பொழுது போனாலும் அவர் சந்தின் முகப்பில் தெருவில் நடைபெறும் காட்சிகளை வேடிக்கை பார்த்துக்

1 நாலடி - 248 (அறிவுடைமை-8)

கொண்டிருப்பார். குள்ளமான உருவம். புதிதாக சந்தில் நுழைபவரைப் பார்க்கும்போது பேந்தப் பேந்த விழிப்பார். அடிக்கடி போகும் நான் அவருக்குப் பழக்கமானவனாகி விட்டபடியால் போகும் போதும் திரும்பும்போதும் அவர் கன்னத்தை மெல்லக் கிள்ளிவிட்டு வருவேன்; அவ்வளவு நெருக்கம். பல்லாண்டுகள் இடைவெளிக்குப் பிறகு அந்த நெருக்கம் 1970 முதல் தொடங்கி அவர் மறையும் வரை இருந்து வந்தது இறைவனது திருக்குறிப்பேயாகும். இருவரும் வெவ்வேறு இடங்களில் தமிழ்ப் பணியாற்றி வந்ததும் அவன் இட்ட வழக்காகும். இடைப்பட்ட பல்லாண்டுகள் காலவெள்ளத்தில் பல்வேறு விதமாகத் தாக்குண்டு, உந்தப் பெற்று,

"மின்னொடு
வானந் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல். . . . .
முறை வழிப்பட்டு"[2]

தமிழ்த்துறைக்கு ஒதுக்கப் பட்டோம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. அவர் தமிழைத் தேர்ந்தெடுத்துப் பயின்றவர். "குல வித்தை கல்லாமல் பாகம் படும்"[3] அல்லவா? அவர் பிறப்பு நகர்புறத்தில் நடைபெற்றது; என் பிறப்பு நாட்டுப்புறத்தில் ஒரு சிற்றூரில் நடைபெற்றது. தொடக்கத்தில் அறிவியலில் நாட்டம் கொண்டு பட்டப்படிப்பு முடியும் வரை அறிவியலில் ஆழங்கால் பட்டிருந்த என்னைத் தமிழ்த்தாய் ஆட்கொண்டு அரவணைத்தது என் நல்லூழ் எனக் கருதுகின்றேன். இவ்விடத்தில் என் அருமை மாணவர் டாக்டர் அர. சிங்காரவடிவேலனாரின்[4]

ஆழ்வாரின் பாசுரத்தில் மூழ்கி மூழ்கி
ஆழங்கால் படுவதவர் பிறவிப் பேறு;

---

2 புறம் - 192

3 பழமொழி - 6

4 தேவகோட்டை சேவுகன் செட்டியார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். என் மாணவர்.

வாழ்விக்கும் கருவிதரு விஞ்ஞா னத்தில்
வாய்த்திருக்கும் பேரறிவு கல்விப்பேறு;
ஆழ்வாரின் தலைமணியாம் நம்மாழ் வாரை
அருகணைய வாய்த்ததுவோ ஆய்வுப் பேறு;
பால்வார்க்கும் தாய்போல துறைகள் தோறும்
பலநூல்கள் அவர்யாத்தல் தமிழர் பேறே![5]

என்ற பாடலை நினைவுகூர்ந்து எம்பெருமானின் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

**நினைவு - 2 :** ஏற்கெனவே இரண்டு முறை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்து நல்லூழ் இன்மையால் வெற்றிகாண முடியவில்லை. பின்னர் என்னைத் தெலுங்கன் என்று காதோடு காதாகப் பேசி என்னைத் தவிர்த்ததையும் செவிவழிச் செய்தி மூலம் அறிந்தேன். மூன்றாவது முறை தமிழ் விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்தேன். என்றுமே ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு இடம் மாற்றத்திற்கு முயலவில்லை. பல்கலைக்கழகத்திலிருந்தால் அறிவு பெறுவதற்கும், ஆய்வு செய்வதற்கும் வாய்ப்புகள் ஏற்படும் என்று கருதியே சென்னைக்கு வர விரும்பினேன்.

முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றை நினைவுகூர விரும்புகின்றேன். நான் பள்ளியிறுதி வகுப்பில் இருந்தகாலம் முதல் (1934) - திரு. K. இராமச்சந்திர அய்யர் அறிமுகம் செய்ததால் - திரு. தி.மூ. நாராயணசாமிபிள்ளை அவர்களை (அப்போது அவர் திருச்சி மாவட்ட வாரியத் தலைவர்) நன்கு அறிவேன். அதன்பிறகு திருச்சி கல்லூரியில் படித்த காலத்தில் (1934-39) அவர் வக்கீல் தொழில் நடத்தி வந்தபோது திருச்சி பெரிய கடைத்தெருவில் மலைக்கோட்டைக்குச் சற்று அருகிலுள்ள ஒரு மாடியில் அவரது அலுவலகத்தில் அடிக்கடிச் சந்தித்து உறவை வளர்த்துக் கொண்டு வந்தேன். பிஎஸ்சி.யில் முதல் வகுப்பில் தேறியவுடன் (வேது நிலை)

5. வடவேங்கடமும் திருவேங்கடமும் - சிறப்புப் பாயிர மாலை - 6

அவரிடம் நடத்தைபற்றிய சான்றிதழும் பெற்றேன். சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றபோது (1940-41) திரு பிள்ளையவர்கள் இந்து அறநிலையத்துறை ஆணையராகப் பணியாற்றிவந்தார்கள். அப்போது அவர்கள் சென்னை தியாகராயர் நகரில் குடியிருந்தார்கள். அக்காலத்திலும் அவரை மூன்று முறை சந்தித்தாக நினைவு; இப்படி உறவு அறாத நிலையில் பழகி வந்தேன். நடத்தைச் சான்றிதழையும் புதுப்பித்துக் கொண்டேன்.

துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபோது (1941-50) திரு. பிள்ளையவர்கள் சென்னையில்தான் குடியிருந்தார்கள். (கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலையில்). அப்போதும் பலமுறை சந்தித்தேன்; ஒருமுறை என் ஆசிரியப் பெருந்தகை திரு. K. இராமச்சந்திர அய்யர் மூலம் சந்தித்தேன். அப்போது திரு. பிள்ளையவர்கள் அரசு தேர்வாணையத்தில் உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும் பணியாற்றிய காலம் என்பதாக நினைவு. இந்தக் காலத்தில் நானும் துறையூரை விட்டு காரைக்குடி அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றி வந்தேன். இக்காலத்தில் என் நிலை : (1) 18 ஆண்டு அநுபவம்; (2) வித்துவான், தமிழ் எம்.ஏ. பட்டங்கள் பெற்றிருந்தேன் (3) "கவிஞன் உள்ளம்" "அறிவியல் பயிற்றும் முறை" "தமிழ் பயிற்றும் முறை", "கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி", "அணுவின் ஆக்கம்", "காலமும் கவிஞர்களும்", "மானிட உடல்" (தமிழாக்க நூல்) என்ற ஏழுநூல்களின் ஆசிரியன். இவற்றையெல்லாம் திரு. பிள்ளையவர்கள் நன்கு அறிந்தவர்கள். தவிர, 1953-56 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகக் கல்வி ஆலோசனைக் குழுவிலும் (Academic Council) பேரவையிலும், (senate) உறுப்பினராக இருந்து அநுபவம் பெற்றவன் என்பதும் திரு பிள்ளையவர்கள் அறிவார்கள்.

தவிர, திரு பிள்ளையவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் துணை வேந்தராக இருந்த காலம். 1958 ஏப்பிரல் திங்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புதுமுக வகுப்பிற்குத் தமிழில் அறிவியல் பாடங்களைக் கற்பிப்பது

பற்றிய ஆறுவாரக் கருத்தரங்கினை முன்னின்று நடத்தும்படி ஓர் அழைப்பு வந்தது. என்னுடைய அறிவியல் நூல்களைக் கண்ட துணைவேந்தர் எனக்கு இந்தப் பொறுப்பினை நல்கினார்கள். இதற்கு ஊதியமாகவோ சன்மானமாகவோ ஒன்றும் இல்லை. ஆறு வாரம் பல்கலைகழக விருந்தினன் என்ற கௌரவம் ஒன்றுதான்; துறைவகை வல்லுநர் (Resource person) என்ற பெருமையும் சேர்ந்தது நாடோறும் (1) கலைச்சொல்லாக்கம், (2) பாடங்களில் மாதிரி வகுப்புகள் எடுத்தல் என்ற இரண்டு திசைகளில் கருத்தரங்கு நடைபெற்றது.

எனக்குப் பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் உண்டி உறையுள் இவற்றிற்கு ஏற்பாடாகி இருந்தது. திரு பிள்ளையவர்கள் நாடோறும் காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு சுமார் 8.30க்குத் தம் இல்லத்திற்கு வந்து தம்மிடம் அளவளாவிக் கொண்டிருக்குமாறு பணித்தார். அங்ஙனமே ஆறுவாரம் போய்க் கொண்டிருந்தேன். 8.30 முதல் 9.45 வரை இலக்கியச் சல்லாபம்; பல்வேறு திசைகளில் பேச்சுகள் நடைபெறும். 9.55க்குக் காரில் ஏறுவார்; என்னையும் ஏற்றிக் கொள்வார். தாம் அலுவலகத்தில் இறங்கிக்கொண்டு என்னைக் கருத்தரங்கம் நடைபெறும் களத்தில் இறக்கிவிடச் செய்வார். இக்காலத்தில் என் திறமை, பணி முதலியவற்றைத் திரு பிள்ளையவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பிருந்தது. அதன் பிறகு சில திங்களில் ஓய்வு பெற்றுத் திருச்சிக்குத் திரும்பிவிட்டார்.

அகராதிப் பணி தொடங்கப் பெற்றதும் திரு. சஞ்சீவி காஞ்சி பச்சையப்பன் கல்லூரியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு அகராதித் துறையில் மொழிவல்லுநராக (Language expert) வந்து சேர்ந்திருந்தார் (1959 என்பதாக நினைவு). அநுமன் மகேந்திர மலையிலிருந்து இலங்கைக்கு எளிதில் தாவிச் சென்றதுபோல் அகராதித் துறையிலிருந்து தமிழ்த்துறைக்குத் தாவுவது எளிதன்றோ? சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய பலதுறை ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தாவிய வரலாறுகளும் உண்டு! தவிர, முன்னணியும் பின்னணியும், பரிந்துரைக்கப் பெரியோர்களும் இருக்கும்போது எச்செயலும் வெற்றியாக முடியுமன்றோ? துணை வேந்தர் ஆதரவும், திரு பிள்ளையவர்களின் ஆசியும் திரு.

சஞ்சீவிக்கு இருந்து வந்தன. தம் தந்தையார் காலத்திலிருந்தே இந்த சூழ்நிலை அவருக்கு நிறைய அமைந்திருந்தது. விண்ணப்பம் போட்டபிறகும் அவர் துணைவேந்தரைப் பார்த்து வேண்டுகோள் விடுத்திருக்க முடியும். அவரும் ஏதாவது சாதகமாகப் பேசியிருக்கக் கூடும்.

**நினைவு - 3 :** அகராதித் துறையில் சுமார் ஓராண்டுகாலமாகப் பணியாற்றி வந்த திரு. சஞ்சீவியும் விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். யார் யாரோ விண்ணபத்திருந்தனர். அவர்களையெல்லாம் நினைவு கூரமுடியவில்லை. இந்தநிலையில் சஞ்சீவி என்னைப் பற்றியும், நான் விண்ணப்பித்திருந்தது பற்றியும் அறிந்திருப்பார். என்னை நோக்க, அவருக்குக் கிடைக்குமோ என்ற ஐயமும் எழுந்திருக்கக்கூடும். தவிர, இந்த விரிவுரையாளர் பதவி கல்லூரித் தமிழ் ஆசிரியர்கட்குப் பயிற்சி தருவதற்காக ஏற்பட்டது என்ற குறிப்பும் விளம்பரத்தில் குறிப்பிடப்பெற்றிருந்ததாலும் எனக்கு மட்டுமே பயிற்சிக்கல்லூரி அநுபவம் இருந்தமையாலும் எனக்குதான் அப்பதவி கிட்டும், தமக்குக் கிட்டாது என்று சிறு "திகிலும்" சஞ்சீவிக்கு ஏற்பட்டிருத்தல் கூடும்.

இந்த ஆசிரியரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பெற்ற தேர்வுக்குழுவில் (Selection Committee) திரு. தி.மூ. நாராயணசாமிப் பிள்ளையும் இடம் பெற்றிருந்தார். அப்போது அவர் தமிழ்ப்பாடத் திட்டக்குழுவின் தலைவராக இருந்தமையாலும், நானும் இவர் இக்குழுவில் இடம் பெற்றிருந்தபடியால் உதவலாம் என்றும் சிறிது நம்பிக்கையும் கொண்டிருந்தேன். இந்தக் காலத்தில் சஞ்சீவி எனக்கு நேர் அறிமுகம் இல்லை; பேசினது கூட இல்லை. எனக்கு அவர் என் பேராசிரியர் மு. நடேசமுதலியாரின் முதல் மகன் என்பது மட்டிலும் தெரியும். அவருக்கு அது தெரியாது. அக்காலத்தில் நான் கணிசமான புகழுடன் திகழ்ந்தமையால் காரைக்குடியில் பணியாற்றியவன் என்பது மட்டிலும் அவர் என்னைப்பற்றி அறிந்திருத்தல் கூடும்.

துணைவேந்தர் டாக்டர் A.L. முதலியார் என்னைப் பற்றி மிக நன்றாக அறிவார். (1) காரைக்குடிக் கல்லூரி பல்கலைக்கழக ஆணையம் கல்லூரிகளின் நிலைமைகளைச் சோதிக்க வந்தபோது, டாக்டர் முதலியாரைச் சந்தித்து, (1958) "தமிழ் பயிற்றும் முறை", "அறிவியல் பயிற்றும் முறை" என்ற அண்மையில் வெளிவந்த என்னுடைய இரண்டு நூல்களைத் தந்தேன். ஐந்து மணித்துளிகள் அன்பாகப் பேசினார். பேச்சுக்கிடையில் Verse, Poem என்ற இரு சொற்களின் பொருளை எப்படித் தமிழில் அமைக்கலாம் என்று வினவினார். நான் Verse - செய்யுள் (செய்யப் பெற்றது என்ற பொருளில்), Poem - கவிதை என்று சொன்னதை மிகவும் பாராட்டினார். (2) 1953-56 ஆண்டுகள் கல்வி ஆலோசனைக் குழு கூட்டங்கள், பேரவைக் கூட்டங்கள் இவற்றிற்கு வரும்போதெல்லாம் 12 முறை மரியாதைக்காக அவர் இல்லத்தில் சந்தித்துப் பேசியதுண்டு. (3) அண்மையில் அகராதித் துறைத் தலைமைப் பதிப்பாசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழு பேட்டியின்போது அக்குழு உறுப்பினர் தனிநாயக அடிகள் கலைச்சொல் பற்றி விடுத்த வினாக்களுக்கு மறுமொழி தந்த முறை டாக்டர் முதலியாரின் கவனத்தை மிக நன்றாக ஈர்த்திருக்க வேண்டும். Pennis - இலிங்கம், clitoris - யோனிலிங்கம், Menopause - சூதக் ஓய்வு என்று கூறி விளக்கிய முறையும், Electron - எதிர் மின்னி Proton - நேரியல் மின்னி, Neutron - பொதுஇயல் மின்னி, Positron - நேர் மின்னி, Mason - எதிரியல் மின்னி என்று கூறி விளக்கிய முறையும் அவர் மனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். எத்தனை முறை ஒருவர் பார்த்தாலும் அவரை புதிதாகக் காண்பவர்போல் நடிப்பது டாக்டர் முதலியாருக்கு உரிய தனிப்பாணியாகும்.

பேட்டிக்கு முன்பாக சஞ்சீவி அங்குமிங்குமாக நடைபோட்டதும், மிகச் சிறப்பான முறையில் ஆடையலங்காரம் செய்து கொண்டு வந்த முறையும், நடைபோட்டுக் கொண்டிருந்தபோது இருவர் கூடவே நடந்து கொண்டு "உங்கட்குப் பதவி நிச்சயம்" என்று முகஸ்துதி பாடிக்கொண்டிருந்த தோரணையும் இன்றும் பசுமையாக என் நினைவில் உள்ளது. குழு கூடி பேட்டி

நடைபெற்றது. திரு. தி.மூ. நாராயணசாமிபிள்ளை கூட்டத்திற்கு வரவில்லை. அவர் காஸ்மாபாலிடன் கிளப்பில்தான் தங்குவார். அங்கிருந்து கொண்டு, "வந்த இடத்தில் திடீர் என்று உடல் நலம் கெட்டது. கூட்டத்திற்கு வரமுடியவில்லை. வந்த விண்ணப்பங்களை ஆய்ந்து நோக்கியதில் சஞ்சீவிதான் விரிவுரையாளர் பதவிக்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்" என்று எழுதியனுப்பி விட்டதாகப் பின்னர் அறிந்தேன். என் எல்லாத் தகுதிகளையும் நன்கு அறிந்த திரு பிள்ளை அவர்கள் என்னை எவ்வளவு தந்திரமாக விலக்கிவிட்டார் என்பதை இன்றும் வியந்து மகிழ்கின்றேன். நேரில் வந்திருந்தால் குழுவின் முன்னர் என்னை வினாக்களால் விலக்க முடியாது என்பதை நன்குத் தெளிந்தே இவ்விதம் செய்தார் என்பது உறுதிப்படுத்துகின்றது.

**ஓர் உறுப்பினர்** : நீங்கள் ஏன் சென்னைக்கு வர விரும்புகிறீர்கள்?

**நான்** : அது என் விருப்பம். மதிப்புக்குரிய உறுப்பினருக்கு நான் காரணம் சொல்லத் தேவை இல்லை. எனினும் சொல்லுகிறேன். நூலக வசதியும், ஓய்வு நேரமும் அதிகம் இருப்பதால் ஆய்வில் அவாவுள்ள எனக்கு பல்கலைக்கழகப் பதவி வாய்ப்புகளை நல்கும் என நினைத்து இங்கு வரவிரும்புகிறேன்.

**ஓர் உறுப்பினர்** : நீங்கள் காரைக்குடியிலிருந்து கொண்டே உங்கள் ஆய்வைத் தொடங்கலாமே.

நெறியல்லாத முறையில் வினாக்கள் அமைகின்றனவே என்று சினந்தேன். சினத்தை அடக்கிக் கொண்டு, "நான் காரைக்குடியிலிருந்து என் சொந்த செலவில் உங்கள் "அற்புதமான ஆலோசனைகளைக்" கேட்கவா சென்னை வந்தேன் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கருதுகின்றாரா? நீங்கள் பயிற்சிக் கல்லூரியில் இருக்கின்றீர்கள். அங்கு நூலக வசதி எப்படியிருக்கும் என்பது உங்கட்குத் தெரியும். சிலசமயம் நீங்கள் என் இடத்திலும் நான் உங்கள் இடத்திலும் இருக்கும் சந்தர்ப்பமும் எழலாம்.

அநுபவம்மிக்க ஒருவரை இப்படி இழிவுபடுத்துவது நியாயம் அல்ல" என்றேன்.

உடனே துணைவேந்தர் குறுக்கிட்டு, "மிஸ்டர் கோவிந்தராஜன், பொருத்தமற்ற வினாக்களை விடுத்து திரு. ரெட்டியாரைச் சீண்டாதீர்கள்" என்று அவரை வாய் அடக்கினார். பேராசிரியர் சேதுப்பிள்ளை வினாக்கள் விடுக்கவில்லை. இவர்என் நூல் ஒன்றுக்கு அணிந்துரை வழங்க இசையாதவர்.

**துவே :** உங்கட்கு பி.ஏ. வகுப்பு எடுத்த அநுபவம் உண்டோ?

**நான் :** இல்லை. பி.டி வகுப்பு எடுத்த அநுபவம் உண்டு. இந்தப் பதவி ஆசிரியர்க்குப் பயிற்சி அளிக்கும் பணிக்குத்தானே!

இத்துடன் என் பேட்டி முடிந்தது. டாக்டர் முதலியார் பொதுவாக வினாக்கள் விடுப்பதில்லை. அப்படிவிடுத்தாலும் விண்ணப்பதாரரிடம் எது இல்லையோ அதைத்தான் வினவுவார். அவர் வினவினால், வினப்பட்டவருக்குப் **"பட்டை நாமம்"** என்பது பொருள்! எனக்கு அப்பொழுதே என் முடிவு தெரிந்துவிட்டது. சஞ்சீவிக்குத்தான் கிடைக்கும் என நினைத்து ஊர் திரும்பினேன். அப்படியே அவருக்குப் பதவி கிடைத்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் நுழைய எனக்கு ஊழ் இல்லை என்று நினைத்துக் கொண்டேன். டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளைக்குப் பிறகு டாக்டர். மு.வ. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்தறைப் பேராசிரியானார். சஞ்சீவி அவருக்குக்கீழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டுக் காலம் சென்னைப் பல்கலைகழகத்திற்கு வந்து கொண்டிருந்ததேன். டாக்டர் மு.வ. வுடன் பழகினதோடு சரி. சஞ்சீவியுடன் யாது காரணத்தாலோ பழகவில்லை. அவரும் என்னுடன் நெருங்கவில்லை.

**நினைவு - 4 :** அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்தில் (சனவரி 3.10.1968) நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டேன். அப்போது என் பிஎச்.டி. கட்டுரை எழுதுவதிலும் அதனைத் தட்டச்சு செய்வதிலும் மும்முரமாக

ஈடுபட்டிருந்ததால் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேனேயன்றி, ஆய்வுக் கட்டுரையும் அனுப்பவில்லை; மலருக்கும் கட்டுரை அனுப்பவில்லை. ஒருவாரம் சென்னையில் (புதிய எம்.எல்.ஏ. உணவு விடுதியில்) தங்கியிருந்தேன். பலருடன் பழக வாய்ப்புகள் இருந்தன. என்ன காரணத்தாலோ சஞ்சீவியுடன் பழக வாய்ப்பில்லை. ஒரு பகுதியில் சஞ்சீவி ஆய்வுக் கட்டுரை படித்தது நினைவுகூர முடிகின்றது. தவிர, பிற கட்டுரையாளர்கள் தம் கட்டுரைகளைப் படித்த பிறகு நடைபெற்ற கலந்துரையாடலில் சஞ்சீவி அற்புதமாகப் பங்கு கொண்டதைக் கண்டு வியந்தேன். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டேன். துரோணர் மகன் அசுவத்தாமைப்போல் நடேச முதலியார் மகன் சஞ்சீவி திகழ்ந்ததைக் காண என் மகிழ்ச்சி பன்மடங்கு பெருகியது.

**நினைவு - 5 :** 1971 திசம்பரில் (26, 27, 28) அனைத்திந்திய கீழ்த்திசை மாநாடு (26வது அமர்வு) உஜ்ஜயினியில் நடைபெறுவதாக இருந்தது. உஜ்ஜயினி தமிழ் இலக்கியத்தில் உஞ்சை என்று குறிப்பிடப் பெறும். அவசரநிலை பிரகடனப் படுத்தப் பெற்றதால் இம்மாநாடு அத்தேதிகளில் நடைபெறவில்லை. இது 1972 - அக்டோபரில் (26, 27, 28) நடைபெற்றது. பல்கலைக்கழகம் என்னைப் பேராளராக அனுப்பி வைத்தது. திரு. சஞ்சீவியும் இம்மாநாட்டிற்கு வந்திருந்தார். அப்போது டாக்டர் மு.வ. மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர். இம்மாநாட்டின்போதுதான் சஞ்சீவியுடன் பழக்கம் ஏற்பட்டது; அதிலிருந்து அதிக நெருக்கமும் உண்டாயிற்று. என்னைத் தனிமையில் அழைத்துப் பேசினார். ஏதோ மு.வ. சூழ்ச்சி செய்வதாகக் குறிப்பிட்டார். அப்படி ஒன்றும் இராது என்று வலியுறுத்திச் சொன்னேன். ஒருவாறு ஒப்புக் கொண்டார். இதிலிருந்து டாக்டர் மு.வ. சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தபோது இருவரிடையேயும் சரியான நல்லுறவு இல்லை என்று அறிந்து கொண்டேன்.

இம்மாநட்டுக் கருத்தரங்கிற்கு (1) The Alvars' concept of salvation (2) Two Sects of South Indian Vaishnavism என்ற இரண்டு

ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி வைத்தேன். இவை கருத்தரங்கில் படிக்கப் பெற்றன.[6] டாக்டர் சஞ்சீவி முத்தொள்ளாயிரத்தில்,

> **கச்சி ஒருகால் மிதியா, ஒருகாலால்**
> **தத்துநீர்த் தண்உஞ்சை,. தான்மிதியாய், பிற்றையும்**
> **ஈழம் ஒருகால் மிதியா வருமேநம்**
> **கோழியர்கோக் கிள்ளி களிறு**[7]

என்ற பாடலைத்தம் ஆங்கிலப் பேச்சுக்குக் கருவாக அமைத்துக் கொண்டு அற்புதமாகப் பேசி அனைவரையும் மகிழ்வித்தார்.

**நினைவு - 6 ;** (1) திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் 1970-71 இல் தமிழ் முதுகலை (எம்.ஏ), எம்.ஃபில், பிஎச்.டி., பட்டங்கட்கு வழிவகை செய்யப் பெற்றது - பத்து ஆண்டுகள் முயன்று ஆண்டொன்றுக்கு பத்தாயிரம் தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்காக மானியம் வழங்கியதால் 1973-74 இல் தமிழ்த் (தமிழக அரசு நிதி உதவி) துறையில் முதல் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தேன். உலகுக்கென்று ஒரு பொது நூலை அளித்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. இதுபற்றித் தமிழ் மக்கள் பெருமை அடையலாம். இத்தகைய பெருமை திருவள்ளுவருக்கு உண்டு; இவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையுமாகும்

> **வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
> **வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**[8]

என்று பாரதியாரும் பாடியுள்ளாரல்லவா? இதனால் திருக்குறள் முதல் கருத்தரங்குப் பொருளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

பல்கலைக்கழக மரபுப்படி துணைவேந்தர் தலைமை வகித்தார். வள்ளுவனுக்கே தம் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து, தம்மகனுக்குத் திருவள்ளுவன் என்ற பெயரையும் இட்டு மகிழ்ந்த

---

6 இவையும் இவை போன்ற பிறவும் (27 கட்டுரைகள்) collected papers என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

7 முத்தொள்ளாயிர விளக்கம் பாடல் 63

8 பா.க. செந்தமிழ் நாடு - 7

தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு (துணைவேந்தர் - சென்னைப் பல்கலைக்கழகம்) அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைக்க, என் அருமை நண்பர், கல்லூரியில் ஒரு சாலை மாணாக்கர் - பிரபல வழக்குரைஞர், பல பேருந்துகளின் உரிமையாளர் - 1952 - 57 வரை சென்னை சட்டமன்ற உறுப்பினர் P. அரங்கசாமி ரெட்டியார் வள்ளுவர் படத்தைத் திறந்து வைக்க, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆசிகூற தொடக்க விழா அமர்வு அற்புதமாக அமைந்தது.

அடுத்து அமைத்த 4 அமர்வுகளின் விவரம் :

**முதல் அமர்வு : திருக்குறள் - கலையும் அறிவியலும்**

**தலைவர்** : டாக்டர் மெ. சுந்தரம் (சென்னை மாநிலக் கல்லூரி)

1. **வேளாண்மை** : எம். சண்முகம் பிள்ளை (திருக்குறள் ஆய்வுத்துறை, செ.ப.க)
2. **கல்வி** : டாக்டர் ந. சுப்புரெட்டியார் (திருப்பதி)
3. **அரசியல்** : டாக்டர் K. கமலநாதன், (திருப்பதி)
4. **சட்டமும் நீதியும்** : பேரா. A. பழநிசாமி (சென்னை, சட்டக்கல்லூரி, இயக்குநர் சட்டப்படிப்பு)
5. **பெண்மை** : பேரா. P.B. இராஜராஜேசுவரி, (முதல்வர், அரசினர் கல்லூரி, நாமக்கல்)

**இரண்டாம் அமர்வு : தமிழ் இலக்கியத்தில் திருக்குறள்**

**தலைவர்** : பேரா. வ.சு.ப. மாணிக்கம்

**சங்க இலக்கியம்** : டாக்டர். வ.சு.ப. மாணிக்கம் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

2. சிலம்பு : சிலம்பொலி சு. செல்லப்பன் (சென்னை)

3. கம்பராமாயணம் : டாக்டர் G. தாமோதரன் (திருப்பதி)

4. மனோன்மணியம் : பேரா. T.K. நாகாம்பாள் (பெங்களூர்)

5. பாரதி படைப்புகள் : T.J. இரகுபதி (திருப்பதி)

**மூன்றாம் அமர்வு : திருக்குறளும் சமயமும்**

தலைவர் : டாக்டர் ந. சஞ்சீவி (சென்னைப் பல்கலைக்கழகம்)

1. சைவம் : டாக்டர் ந. சஞ்சீவி

2. வைணவம் : கே. வேங்கடசாமி ரெட்டியார் (V. பூதூர்)

3. பௌத்தம்-சமணம் : மயிலை சீனி. வேங்கடசாமி (சென்னை)

4. இஸ்லாம் : பேரா. ந. அப்துல் ரகுமான் (வாணியம்பாடி)

5. கிறித்தவம் : Father டாக்டர் ந. இராசமாணிக்கம் (சென்னை)

**நான்காம் அமர்வு : திருக்குறளும் பிறமொழி இலக்கியங்களும்**

தலைவர் : பேரா. M.V. இராம சர்மா (திருப்பதி)

1. தெலுங்கு : பேரா. ஜி.என்.ரெட்டி (திருப்பதி)

2. மலையாளம் : பேரா. E.R. சிரீகிருட்டிணசர்மா (திருப்பதி)

3. இந்தி : பேரா. S. சங்கரராஜு நாயுடு (சென்னை)

4. வடமொழி : டாக்டர் V. வரதாச்சாரி (திருப்பதி)

5. ஆங்கிலம் : S. விசவநாதன் (திருப்பதி)[9]

இந்தக் கட்டுரைகள் யாவும் எழுத்து வடிவம் பெற்றன. ஆண்டிகள் மடம் கட்டுவதுபோல் நிதியே இல்லாமல் **"திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974"** என்ற தலைப்பில் வெளிவந்தது ஒரு பகீரதப் பிரயத்தனமாகும். பிறமாநிலங்களில் பணியாற்றுவோருக்குத்தான் இதன் சிரமம் நன்கு புரியும். இந்தக் கருத்தரங்கில் தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் மாநிலங்களிலிருந்து பங்கு கொண்டமை ஒரு தனிச்சிறப்பு.

(2) அடுத்து 1974-75இல் துணைவேந்தர் டாக்டர். D. ஜகந்நாத ரெட்டி தலைமையில் நடைபெற்ற சிலப்பதிகாரக் கருத்தரங்கிலும் (பல்கலைக் கழக ஆணையை நிதி உதவி) சிலம்பை அறிமுகம் செய்வதில் விரிவான திட்டம் வகுக்கப் பெற்றது. தமிழக கல்வி நிதி அமைச்சர் தலைமை வகித்தார்; டாக்டர் V.C. குழந்தைசாமி (சென்னைத் தொழிற்றுறைக் கல்வி இயக்குநர்) இளங்கோ இதயத்தைத் திறந்து காட்டும் பாங்கில் ஒரு சிறப்புரையும், டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் (இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்) கருத்தரங்கின் அடிப்படைக் கருத்தை விளக்கும் பாங்கில் ஒரு சிறப்புரையும் நிகழ்த்தினர். வழக்கம்போல் நான்கு அமர்வுகள் இருந்தன. ஓர் அமர்வுக்கு டாக்டர். ந. சஞ்சீவி தலைமையேற்று ஓர் ஆய்வுக்கட்டுரையும் படித்தார். வேறு இருபது அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரை படித்தனர்.

(3) 1976-77இல் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் ஆதரவில் கம்பராமாயணக் கருத்தரங்கு நடைபெற ஏற்பாடு செய்தேன். துணைவேந்தர். டாக்டர் K. சச்சிதானந்த

9 நான் நடத்தும் கருத்தரங்குகள் எவ்வாறு அமையும் என்பதைத் தெரிவிக்கவே இங்கு விரிவாகக் காட்டப்பெற்றது.

மூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது. ஆந்திர மாநில முன்னாள் தலைமையமைச்சரும், உத்திரப் பிரதேச முன்னாள் ஆளுநரும், நெல்லூரில் வாழ்ந்து வருபவருமான திரு. B. கோபால ரெட்டி மாநாட்டைத் திறந்து வைத்தார். கம்பனில் திளைத்து ஆங்கிலத்திலும் கம்பனைக் காட்டும் ஓய்வு பெற்ற ஜஸ்டிஸ் S. மகாராஜன் (சட்டஆணையத்தின் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்) தொடக்க விழாவில் அடிப்படைக் கருத்தமையும் பாங்கில் (Key - note address) சொற்பொழிவை நிகழ்த்தினார். இலக்கிய வரலாற்று அறிஞர் மு. அருணாசலம் கம்பன் படத்தைத் திறந்து வைத்தார். கம்பன் அடிப்பொடிக்கு தொடக்க விழாவில் தமிழில் வரவேற்புக் கவிதை மடலும் திரு. B. கோபால் ரெட்டிக்குத் தெலுங்கில் வரவேற்புக் கவிதை மடலும் படித்தளிக்கப்பெற்றன. கம்பன் அடிப்பொடி ஓர் அமர்வுக்குத் தலைமை வகித்தார். டாக்டர் சஞ்சீவி ஓர் அமர்வுக்குத் தலைமை வகித்து ஓர் ஆய்வுக் கட்டுரையையும் படித்தார். கம்பனடிப்பொடி இல்லாத ஒரு கம்பராமாயணக் கருத்தரங்கும், டாக்டர் சஞ்சீவி இல்லாத ஒரு பல்கலைக் கழக கருத்தரங்கும் பருப்பு இல்லாத கல்யாணம் போன்றதல்லவா? எல்லா அமர்வுகளிலும் 20 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன.

**நினைவு - 7 :** சென்னைப் பல்கலைக்கழகத்தில் 22.1.73 முதல் 31.1.73 வரை நடைபெற்ற **"தெய்வத்தமிழ்"** கருத்தரங்கில் பத்தாம்நாள் **"வைணவ சமய நூல்கள்"** என்ற தலைப்பில் ஜஸ்டிஸ் N. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் பேச வாய்ப்பு தந்தார் டாக்டர் சஞ்சீவி. ஆய்வுக் கட்டுரையும் தரப் பெற்றது. இக்கட்டுரையில் (1) விரிவஞ்சி நூலாசிரியரின் காலம் விரிவாக ஆராயப் பெறவில்லை. கால எல்லை மட்டிலுமே குறிப்பிடப் பெற்றுள்ளது (2) நூல்களும் விரிவான திறனாய்வுக்கு உட்படுத்தப் பெறவில்லை. குறிப்பாக அவற்றின் சில சிறப்பியல்புகள் மட்டிலுமே சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. பேச்சின் இறுதியில் தமிழ்த்துறையினரும், அவையோரும் எழுப்பின வினாக்களுக்கு விடைகள் தரப்பெற்றன. ஆய்வுக் கட்டுரையும், வினாக்களும் விடைகளும் அச்சு வடிவம் பெற்று **"தெய்வத்தமிழ்"** என்ற

நூலில் இடம் பெற்றுள்ளன. கட்டுரை அச்சேறும்போது தட்டச்சுப் படிவத்துடன் கைப்படியை ஒப்புநோக்கிப் பார்க்கப்பெறாததால் சொற்கள், சொற்றொடர்கள், சில இடங்களில் வாக்கியங்கள், விடுபட்டு **"பிழை மலிந்த சருக்கமாகத்"** தோற்றமளிக்கின்றது. பல்கலைக்கழக வெளியீடு இப்படி வெளிவருவது அங்குப் பணியாற்றும் ஆசிரியர்களின் பொறுப்பின்மையைக் காட்டுவதாக அமைகின்றது.

(2) 1973 நவம்பரில் "டாக்டர் R.P. சேதுப்பிள்ளை வெள்ளி விழா அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்" நிகழ்த்துமாறு டாக்டர் ந. சஞ்சீவி ஏற்பாடு செய்தார். அடியேன் திருப்பதியில் பணியாற்றியதால் **"திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்"** என்ற தலைப்பில் மூன்று பொழிவுகள் நிகழ்த்துமாறு பணித்தார் டாக்டர் சஞ்சீவி. அடியேனும் (1) சங்ககால வேங்கடம் (2) இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம் (3) திருவேங்கடத்தின்மீது எழுந்துள் நூல்கள் என்ற தலைப்புகளில் பொழிவுகள் நிகழ்த்தினேன் (பிப்பிரவரி 28, மார்ச்சு 1, 2 - 1974). பல்கலைக்கழக இசைவு பெற்று பொழிவுகள் **"திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்"** என்ற தலைப்பில் பாரி நிலையத்தார் வெளியிட்டனர். இந்த நூலுக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு அரியதோர் அணிந்துரை நல்கியுள்ளார். நூலை அக்காலத்தில் தமிழக முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் 52-வது பிறந்தநாள் விழாவின் நினைவாக,

**பொற்புறு தமிழ்த்தாய் மலரடி பிணித்த**
**புல்லிய விலங்கினைத் தகர்த்து**
**நற்புகழ்த் தமிழர் இதயமாம் அணையில்**
**நாவலர் போற்றிட அமர்த்திச்**
**சிற்பவண் குறளாம் ஆணை யெப்புறத்தும்**
**திகழ்ந்திடத் தமிழ்ப்பணி புரியும்**
**அற்புதக் கருணா நிதியெனும் தலைவர்**
**அன்பினுக் குரியதிந் நூலே.**

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். டாக்டர் ந. சஞ்சீவி இல்லாமல் திருப்பதியில் எந்தக் கருத்தரங்கும்

நடைபெறுவதில்லை. எப்பொழுது வந்தாலும் குடும்பத்துடன்தான் வருவார்.

**நினைவு - 8 :** திருமதி இந்திராகாந்தி ஆட்சிக் காலத்தில் (25.6.1975) அவசரகாலநிலை பிறப்பிக்கப்பெற்றது. இதுநாட்டின் ஒழுங்குமுறை சீர்படுவதற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம். இதனைப் பல்வேறு துறைகளில் மேல்மட்டத்தில் பணியாற்றிய பல கயவர்கள் இந்தத் திட்டத்தையே குலைத்து அந்த அம்மையாருக்கு அழியாப் பழியைத் தேடித் தந்தனர். அவசரகால நிலையில் கயவர்களின் கைங்கரியத்திற்குப் பலியாகிச் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்த நல்லவர்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவியும், சென்னை மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரமும் அடங்குவர். அவசர காலத்தில் **"புறங்கூறுதல்"** உச்சநிலையில் செயல்பட்டது. இதன் விளைவால் ஏற்பட்ட விபரீதச் செயல்கள் கணக்கிலடங்கா.

தவிர, டாக்டர் மெ. சுந்தரத்திற்கும் டாக்டர் ந. சஞ்சீவிக்கும் கருத்து மாறுபாடுகள். இருவரும் "கீரியும் பாம்பு"மாகப் பழகினர். டாக்டர் சஞ்சீவி தமக்கு வந்த பல மொட்டைக் கடிதங்களை என்னிடம் காட்டி "இவையனைத்தும் மெ.சுவின் திருவிளையாடல்களே" என்று பழி சுமத்துவார். அப்போது தமிழ்ப் பேராசிரியர்களின் மனப் போக்குகளை நினைத்து நாணித்தலை குனிவேன். மிகவும் வருந்துவேன். இருவருமே தொடக்க காலத்திலிருந்தே அரசியலில் அவரவர் மனப்போக்குப்படி நேர்த்தொடர்பு கொண்டிருந்தது பெருந்தவறு. இவர்கள் இருவருமே இதைத் தவிர்த்திருக்கலாம்.[10]

**நினைவு - 9 :** சுமார் ஆறாண்டுகளாகத் (1969 - 75) தேக்கிவைக்கப்பெற்றிருந்த என் பதவி உயர்வு (பேராசிரியர் பதவி) துணைவேந்தர் கே. சச்சிதாநந்தமூர்த்தி காலத்தில் எனக்குக் கிடைக்கக் கூடிய ஊழ் ஏற்பட்டது. பதவி விளம்பரப்படுத்தப்

10 இதை எழுதும்போது இன்று (ஜுன் 1998) இருவருமே இல்லை

பெற்றது. விளம்பரம் செய்யப் பெற்றதே எனக்குக் கிடைப்பதற்கான அறிகுறி என்று எல்லோர் கருத்திலும் பட்டது. நானும், டாக்டர் G. தாமோதரனுமே இதற்கு விண்ணப்பம் செய்திருந்தோம். சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவியும், மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் முத்து சண்முகமும் நியமன நிபுணர்க்குழுவில் இடம் பெற்றிருந்தனர். பேட்டியும் முடிந்தது. குழு கலந்தாயும்போது கடுமையான வாதங்கள் இருந்தனவாம். டாக்டர் சஞ்சீவி, "நானும் டாக்டர் ரெட்டியாரும் (அப்போது இருவருக்குமே டாக்டர் பட்டம் இல்லை) 1960-இல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தோம். டாக்டர் ரெட்டியார் என்னைவிட அநுபவம் மிக்கவராகவும், பலதரமான நூல்களின் ஆசிரியராகவும் இருந்தார்; வயதிலும் முதிர்ந்தவராக இருந்தார். தவிர அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியர் (professor) பதவியிலும் இருந்தார். இத்தகுதிகள் எல்லாம் இல்லாதிருந்தும் அவருக்குப் போகவேண்டிய பதவி என்தலையில் விழுந்தது. அன்று அவர் தலையில் விழுந்திருந்தால் இப்போது நான் இருக்கும் நிலையில் (சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் இந்த நியமனக்குழு உறுப்பினராகவும்) அவர் இருப்பார். இப்போது டாக்டர் G. தாமோதரன் தகுதிகளையும் டாக்டர் ரெட்டியாரின் தகுதிகளையும் ஒப்பிடுங்கால் சம்பந்தா சம்பந்தமே இல்லை. டாக்டர் ரெட்டியார் எங்கே? டாக்டர் தாமோதரன் எங்கே? உழைப்பிலாவது ஒப்பீடு உண்டா? இல்லவே இல்லை என்பதும் தெளிவு. டாக்டர் ரெட்டியாரின் நூல்களே அவருக்குப் பரிந்துரைகளாக இருக்கும். ஆதலால் இப்பதவி டாக்டர் ரெட்டியாருக்குத்தான் போகவேண்டும்" என்று மிக உருக்கமாக வாதித்து என்னை நியமிக்கவேண்டும் என்ற தீர்மானத்திலும் கையெழுத்திட்டாராம். இச்செய்தி எப்படியோ டாக்டர் தாமோதரன் காதுக்கு உடனே எட்டியது.

டாக்டர் தாமோதரன் இருப்பூர்தி நிலையம் சென்று பலர் இருந்தும் அவர்களைப் பொருட்படுத்தாமல் "என்ன சார், எனக்கும் ரெட்டியாருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. அவர் மிக

உயரத்திலிருக்கிறார் என்று சொன்னீர்களாமே" என்று கேட்டாராம். அதற்கு டாக்டர் சஞ்சீவியும் "உண்மையைத்தான் சொன்னேன்; உங்கள் நெஞ்சில் நீங்களே கையை வைத்துப் பாருங்கள்" என்று சொன்னாராம். இப்போது இதனை எண்ணிப் பார்க்குங்கால் என்னுடைய பேராசிரியப் பெருந்தகையே சஞ்சீவி வடிவில் வந்து எனக்கு ஆசி கூறியதாக நினைக்கத் தோன்றுகின்றது.

பதினாறு ஆண்டுகள் ஓடிவிட்டன. மனமும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. மனம் இரு வினையொப்பைச் சிந்திக்கின்றது; அதில் ஆழங்கால் படுகின்றது.

**முப்பதுசென் றால்விடிவும் முப்பதுசென் றாலிருளும்**
**அப்படியே ஏதும் அறிநெஞ்சே - எப்பொழுதும்**
**ஆங்கால் எவ்வினையும் ஆகம் அதுதொலைந்து**
**போங்காலும் எவ்வினையும் போம்.**[11]

என்ற பொன்மொழியை எண்ணுகின்றது. "வவ்விப் பொருகுவதும் புழுங்குவதும் வேண்டா; வருகுவதும் தானே வரும்"[12] என்ற உண்மையிலும் மனம் தோய்ந்து விடுகின்றது.

**நினைவு - 10 :** 1977 செப்டம்பர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் ஆதரவில் என் மணிவிழா கொண்டாடப் பெற்றது. அதன் நினைவாக பல பெரியார்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. டாக்டர் சஞ்சீவி அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

"பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் முப்பால் பெரியார்; அறம் பொருள், இன்பம் மூன்றுக்கும் உரியார்.

பேராசிரியர் சுப்பு ரெட்டியார் மணிவிழாக் கண்ட மணவாளர். இப்போதும் அவர் சிரிப்பதே - இல்லை - முறுவலிப்பதைப் பார்த்தால் எந்த ஆணும் கொஞ்சம் மயங்கவே செய்வார்.

---

11 சிவபோக சாரம் - 79

12 மேலது - 79

பேராசிரியர் - சுப்பு ரெட்டியார் உலகியல் நன்கு உணர்ந்தவர். ஊசி நுழையாத இடத்திலும் அவர் நுழைவார். பகைச்சுவை அறியாத நகைச்சுவைப் பண்பாளராகிய அப்பெருமானால் போதிக்க - வேதிக்க - சாதிக்க - முடியாதது ஒன்று உண்டோ? அவரிடம் இல்லாத செல்வம் இல்லை. அறிவுச் செல்வம், உழைப்புச் செல்வம், அருட்செல்வம் எல்லாம் அவரிடம் அள்ள அள்ளக் குறையாமல் உண்டு. சிக்கனச் செல்வமும் சீராக உண்டு! (மதிப்பெண்கள் தருவதில் மட்டும் இந்தச் சிக்கனம் இம்மியும் இராது)

பேராசிரியர் ரெட்டியார் - ஊழையும் கூழாக்கும் உரவோர். அவர் படித்த அறிவியல் படிப்பும், பயிற்சிக் கல்லூரிப் பட்டறிவும் தமிழ் பெற்ற பேறாயின. எந்த ஊழ்வினையும், சூழ்வினையும் அவரை ஏதும் செய்ய இயலாது! நாய்கள் குரைத்தாலும் ஒட்டகம் நகர்ந்து கொண்டே இருக்கும்!

பேராசிரியர் ரெட்டியார் நன்றி உணர்வு நிறைந்தவர்; நடுநிலை பிறழாதவர். பிறழ்ந்தாலும் கனவாலும் பிறர்க்குத் தீமை புரியாக் கருணைக் கடல். திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையை அவர் உருவாக்கியிருக்கும் - திருவாக்கியிருக்கம் - உரன், திறன் - வியந்து வியந்து மகிழ்ந்து மகிழ்ந்து போற்றுதற்குரியது.

பேராசிரியர் ரெட்டியார் கள்ளங்கபடமற்றவர். நாய் வாயில் கோல் கொடுக்கார் - அதன் வாலை நேராக்க முயலுதலும் முட்டாளின் வேலை என்பதை முழுதாக நன்குணர்ந்து பயனுடைய வேலையைப் பார்ப்பார்.

பேராசிரியர் ரெட்டியார் சாலை வீடே வேண்டும் என்று சதிகள் செய்யார். சந்து, பொந்து வீடாயினும் சாணைப் பிடிக்கும் வேலையில் சளைக்கார்.

சுருங்கச் சொன்னால் பேராசிரியர் சுப்புரெட்டியார் நல்லதந்திரர்; யந்திரர்; பேராசிரியர் ரெட்டியாரின் மனைவியும் மக்களும் அவர் மனதிற்கு ஏற்ற மாண்பினர்.

அப்பப்பா, நினைக்க நினைக்க டாக்டர் சுப்பு ரெட்டியாரைப் போல் பிறப்பது அரிது; பெரிது என்றே எண்ணத் தோன்றுகின்றது. எவர்க்கும் இனியராய், உழைப்பின் உருவமாய் விளங்கும் பேராசிரியர் ரெட்டியார் விரும்பும் காலம் எல்லாம் வாழ்ந்து வேண்டும் பணிகளெல்லாம் புரிய மாமனாரும் மருமகனும் ஒருங்கிணைந்து திருவருள் புரிவார்களாக."[13] இதனால் டாக்டர் சஞ்சீவி என்னை எப்படி எப்படி யெல்லாம் எடைபோட்டிருந்தார் என்பது தெளிவாகின்றது.

**நினைவு 11** : 1976இல் பேராசிரியர் நியமனக் குழுவில் இருந்த டாக்டர் சஞ்சீவி எனக்கு விடுத்த வினாக்களுள் ஒன்று "டாக்டர் ரெட்டியார், நீங்கள் சமயங்களைப்பற்றி ஆராய்ந்திருக்கின்றீர்கள். சைவத்திற்கும் வைணவத்திற்கும் உள்ள வேறுபாடுகள் எவை எனக் காட்ட முடியுமா?" என்பது (நினைவு - 9). நான் அதற்குப் "பெரும்பாலும் கொள்கைகளின் பெயர்களில் வேறுபாடுகள் இருப்பனபோல் தோன்றும். தத்துவக் கண்ணால் நோக்கினால் உண்மையில் வேறுபாடுகள் இல்லை" என்று விடையிறுத்தேன். பேராசிரியர் கே. சச்சிதானந்த மூர்த்தி (துணை வேந்தர்) ஒரு தத்துவப் பேராசிரியரானதால் அவருக்கு முன்பாக இவ்வினா விடுக்கப் பெற்றதாக எனக்குப் பட்டது. சில திங்கட்குப் பிறகு சென்னையில் நடைபெற்ற ஏதோ ஒரு கூட்டத்தில் பேசும்போது டாக்டர் சஞ்சீவி "நான் ஒரு பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரை "சைவத்திற்கும் வைணவத்திற்கும் வேறுபாடு என்ன?" என்று கேட்டதற்கு அவர் "வேறுபாடு ஒன்றும் இல்லை என்று கூறினார்" என்று அவிழ்த்துவிட கூட்டத்தி லிருந்தவர்கள் அனைவரும் கையொலி எழுப்பினார்களாம். வினாவின் பொருள்தவிர அதன் தொனி, விடுத்தவரின் முகபாவனை இவற்றையெல்லாம் நேரில் பார்த்தவர்கள்தாம் உண்மையை உணரமுடியும். ஆனால் இக்கூட்டத்திற்குச் சென்றிருந்த டாக்டர் சி.பா. விடுத்த வினாவிற்கு இறுத்த விடை தவறுடையது

13 மணிவிழா மலர் (1977) பக். 62-63

என்றபோக்கில்தான் கையொலி எழுப்புவதாகத் தெரிந்தது என்று கூறியவர். "பேட்டியில் தங்களிடம் இவ்வினா விடுக்கப் பெற்றதா?' என்றும் கேட்டார். "ஆம்" என்பதாக ஒப்புக் கொண்டேன். இந்த செய்தி என் மனத்தை நெருடிக்கொண்டே இருந்தது. திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை வெள்ளிவிழா ஆண்டில் அதன் நினைவாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும் வாய்ப்பு (1985) வந்தது. அதில் "சைவம் - வைணவம் : ஒப்பீடு" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினேன். அதனைக்கட்டுரையாகவும் வரைந்து வைத்திருந்தேன்.

"**ஆன்மிகமும் அறிவியலும்**" என்ற கட்டுரையுடன் வேறு பதினான்கு கட்டுரைகளையும் "**சைவம் வைணவம் : ஒப்பீடு**" என்ற கட்டுரையையும் சேர்த்து பதினாறு கட்டுரைகள் அடங்கிய "**ஆன்மிகமும் அறிவியலும்**" என்ற பெயரில் நூலாக வெளியிட்டேன். வேண்டுமென்றே டாக்டர் சஞ்சீவியின் கவனத்திற்கு இக்கட்டுரை வரவேண்டுமென்றே அவரிடம் இந்நூலுக்கு "அணிந்துரை" கேட்டேன். அவரும் "**பணிவுரை**" ஒன்று நல்கினார். அதில்,

"டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களைத் தமிழுலகு நன்கறியும். கடந்த நாற்பதாண்டுகளாக இடையீடின்றி அறிவுப் பணியும் அருந்தமிழ்ப்பணியும் செய்துவரும் சான்றோர் அவர். அறிவியல், சமயம், இலக்கியம் - கல்வியல், உளவியல் ஆகிய துறைகளில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு நூல்களை எழுதிப் பரிசுகளும் பாராட்டுகளும் பல பலவாகப் பெற்ற பெரியவர் அவர். இவ்வகையில் இவருக்கு நிகர் இவரே எனலாம். உயர்நிலைப் பள்ளியில் தொடங்கிய அவர்தம் கல்வி வாழ்க்கை தமிழகத்தின் வடவெல்லையில் உயர் கல்வித் துறையிலும் ஒளி வீசியது தமிழர் பெருமைப்படுவதற்கும் உரியதாகும். சலியாத உழைப்பே டாக்டர் சுப்புரெட்டியாரின் சாதனைகட்கெல்லாம் அடிப்படை."

"டாக்டர் ரெட்டியார் அவர்கள் தமது பணி ஓய்வுக் காலத்திலும் ஓயாமல் உழைப்பது போற்றிப் பின்பற்றக் கூடியது. "ஆன்மிகமும் அறிவியலும்" என்ற தலைப்பில் டாக்டர் ரெட்டியார் வெவ்வேறு

காலத்தில் வெவ்வேறு தலைப்புகளில் எழுதிய 16 கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை உருவாக்கியுள்ளார்....."

"டாக்டர் ரெட்டியார் சைவம் வைணவம் இரண்டையும் தமது இருகண்களாகப் போற்றுபவர் என்பதும் தமிழிலக்கியத்தின் பல்வேறு காலத்து நூல்களிலும் உரைகளிலும் ஆழ்ந்த புலமையுடையவர் என்பதும் அவர்தம் இந்நூலாலும் உறுதி பெறும்."

"டாக்டர் ரெட்டியார் அவர்கள் தம் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெற்றவர் அல்லர். இவருக்குத் தமிழக அரசு **"திரு.வி.க. இலக்கியப் பரிசும்"** இந்திய அரசு **"பத்மஸ்ரீ பட்டமும்"** வழங்கி சிறப்பித்தல் தகும்"[14]

**நினைவு - 12 :** இவர்தம் வாழ்க்கையில் பெற்ற பேரிடி மனைவியை இழந்தது. தம் மகள், தம்மைக் கலக்காமல் காதல் மணம் செய்து கொண்டதால் மனம் உடைந்து, உடல்நிலை குன்றி இறந்தார் என்று சொல்லப்படுகின்றது. இஃது உண்மைக் காரணமாக இருந்தால் இந்த அம்மையார் டாக்டர் சஞ்சீவியைக் கைபிடித்தது காதல் - கலப்பு மணந்தானே? இவர்தம் பெற்றோரைக் கலந்தா காதல் மணம் புரிந்து கொண்டார்? முதுகலைப் பட்டம், டாக்டர் பட்டம் பெற்று, பல பெண்களுக்குக் கற்பிக்கும் அநுபவம் பெற்றவர்கள், மகளிரின் மனநிலைகளை நன்கு அறிந்தவர்கள் ஆகியோருக்கு மனப்பக்குவம் ஏற்படவில்லை என்று கருதுவது தவறு. ஆயினும் எவ்வளவு கற்றாலும் "உண்மை அறிவே மிகும்" என்ற உண்மையையும் புறக்கணிப்பதற்கில்லை. இதைப்பற்றி ஆய்ந்தும் பயன் இல்லை. ஆனால் டாக்டர் சஞ்சீவியின் மனம் "மலை கலங்கினும் நிலை கலங்காத்" தன்மையுடையது. தம் அருமை மகளின் செயல் இவர் மனத்தை அதிகம் பாதித்திருககு முடியாது.

14 இவர்தம் தூய உள்ளத்தில் எழுந்த எண்ணத்தால் திரு.வி.க. இலக்கியப்பரிசு 1990இல் கிடைத்தது. இதனைக் காண இவர் அன்று இல்லை. நடுவண் அரசு வழங்கும் விருது ஏழுமலையான் அருளால்தான் வரவேண்டும். அதுவரையில் அடியேன் பூதஉடம்பு நிலைபெற்றிருப்பதும் அவனது திருவருள்.

ஒருவரது இன்றைய வாழ்க்கையில் மகள் திருமணம் ஆகி கணவனது வீட்டிற்குச் சென்று விடுவாள். மகனோ திருமணம் ஆகி உத்தியோகத்தின் நிமித்தம் வேற்றூரோ வேறுநாடோ சென்று விட வாய்ப்புகள் உண்டு. ஆனால் இறுதிவரையிலும் கணவனை விட்டுப் பிரியாமல் இருப்பவள் மனைவியே. இதனை நன்கு உணர்ந்தே நீதிவெண்பா ஆசிரியர்,

**மாதா மரிக்கில் மகன்நாவில் நல்சுவைபோம்;**
**தாதா வெனில்கல்வி தான்அகலும் - ஓதின்உடன்**
**வந்தோன் மரித்துவிடில் வாகுவலிபோம்; மனையேல்**
**அந்தோ இவையாவும் போம்.**[15]

என்று ஓதினார். மனைவி ஒரு குடும்பத்தின் பலதுறைகளையும் ஏற்றுப் பொறுப்புடன் செய்யும் நீரள் ஆதலின் அவளோடு அனைத்தும் போம் என்றார். "அந்தோ!" என்பதில் இரக்கம், பரிதாபம், பச்சாதாபம், ஏக்கம் முதலிய அனைத்து பாவனைகளும் கலந்து வெளிப்படுகின்றன. பாவேந்தர் தம் **"குடும்ப விளக்கில்"** முதியோர் காதலில் கணவன் "இருக்கின்றாள்" என்று சொல்லி மகிழ்கின்றதையும் நினைந்து பார்க்கலாம்.

திருமதி கிருஷ்ணா சஞ்சீவி மறைந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்று கேதம் விசாரிக்கச் சென்றிருந்தேன். டாக்டர் சஞ்சீவி என் கையைப் பிடித்து இட்டுக் கொண்டு சென்று துணைவியாரின் திருமேனியைக் காட்டினார். துக்கம் மனத்தை அடைத்தது. கைகளைப் பிசைத்து கொண்டோமேயன்றி பேச்சு எழவில்லை. சுடுகாடு வரை சென்று இறுதிச் சடங்குகள்வரை கலந்து கொண்டு திரும்பினேன். பின்னர் தம் சொந்த சேமிப்பிலிருந்து தமிழகப் பல்கலைக் கழகங்களில் பல அறக்கட்டளைகளை வைக்கும்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் தம் அன்னையார் - துணைவியார் இருவர் பெயரிலும் "டாக்டர் (திருமதி) கிருஷ்ணா சஞ்சீவி - திருமதி கண்ணம்மாள் நடேசன் அறக்கட்டளை" என்று நிறுவி இருவருக்கும் நினைவுச் சின்னம் ஏற்படுத்தி மனநிறைவு பெற்றார்.

15 நீதி வெண்பா - 61

நினைவு - 13 : தாம் நிறுவிய அறக்கட்டளையின் ஆதரவில் 1986-87க்குள்ள பொழிவுகளை நான் நிகழ்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டார்; அழைப்பும் அனுப்ப ஏற்பாடு செய்தார். பேசும் தலைப்பைப் பற்றிக் கேட்டதற்கு "**தமிழ் இலக்கியங்களில் - அறம், நீதி, முறைமை**" என்ற தலைப்பும் தந்தார். டாக்டர் சஞ்சீவி எதனையும் சிந்தித்துச் செயற்படுவதில் தனித்திறம் பெற்றவர். இதனால் இவரைச் "**சிந்தனைச் செல்வர்**" என்றே அழைப்பர் இவருடைய நெருங்கிய நண்பர்கள். என்னைத் தேர்ந்தெடுத்தற்கு அன்பு ஒரு காரணமாக இருந்தாலும், "நான் எதனையும் திருத்தமுறச் செய்வேன்; பொழிவுகளையும் நூல்வடிமாக்குவேன்" என்ற நம்பிக்கையும் என்பால் கொண்டிருந்தது மற்றொரு காரணமுமாகும்.

அவர் கருத்துப்படியே மார்ச்சு 28,29,30 (1988) நாட்களில் மேற்படி தலைப்பில் மூன்று பொழிவுகள் நிகழ்த்தினேன். மிகக் கடினமாக உழைத்துத் தயார் செய்த பொழிவுகளாகும் இவை. இந்தப் பொழிவுகளும் இதே தலைப்பில் தேன்மழைப் பதிப்பாக வெளியீடாக (திசம்பர், 1988) வெளிவந்தது. இதற்கு தில்லி உச்சநீதிமன்றம், நீதிபதி ஜஸ்டிஸ் எஸ். நடராசன் அரியதோர் அணிந்துரை அருளிச் சிறப்பித்துள்ளார். இந்த நூலை தில்லிப் பாராளுமன்ற முன்னாள் சபாநாயகரும், பீகார் மாநில முன்னாள் ஆளுநரும் திருவேங்கடவனுக்கு அடிமையும் வைகுந்த வாசியுமாகிய திருமாடபூசி அனந்தசயனம் அய்யங்கார் அவர்கட்கு

**திவ்விய மான வேங்கடத் தப்பன்**
**திருவடி மலர்திரு வுளத்தன்;**
**கவ்வைசேர் மக்கள் உயர்வுற உழைத்த**
**கண்ணியன்; காந்தியின் தொண்டன்;**
**அவ்வியம் அறியாச் சால்பினன்; என்னை**
**அன்பினால் பண்பினால் பிணித்தோன்;**
**செவ்விய அனந்த சயனமைய் யங்கார்**
**சேவடிக் குரியதிந் நூலே.**

என்ற பாடல்மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இந்த நூலுக்கு இந்து நாளிதழ் (செப்டம்பர் 24, 1989) சிறந்ததொரு மதிப்புரை வழங்கியுள்ளது. இந்த நூலின் படி ஒன்றை டாக்டர் சஞ்சீவியின் திருக்கைகளில் சேர்வதற்கு முன்னர் அவர் இறைவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார். அவருடைய நெருங்கிய நண்பரும் கிறித்தவத் துறைப் பேராசிரியருமான டாக்டர் இன்னாசி அவர்களின் மூலம் அவர் அருமை மகள் கையில் சேர்ப்பிக்கப்பெற்றது.

டாக்டர் சஞ்சீவி நீரிழிவு நோயாலும் குருதியமுகத்தாலும் தொல்லைப் பட்டார். மிக்கக் கட்டுப்பாடுடன் உடலைப் போற்றினார். விதி யாரை விட்டது? நுகர்வினை (பிராரத்தம்) முடிவுற்றது. இயற்கையுடன் கலந்து விட்டார்.

> இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
> முதுநீர் உலகில் முழுவதும் இல்லை[16]

*பிறப்பு : 2.5.1927* *சிவப்பேறு : 22.8.1988*

16 சிலம்பு - வஞ்சிக் - நடுகல் - அடி 181-82

# 17

# துணைவேந்தர் டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே"[1]

என்ற நாவுக்கரசப் பெருமானின் திருமொழி நினைவில் எழ, டாக்டர் D. ஜகந்நாத ரெட்டியின் பணியின் நினைவுகள் நீங்காத நினைவுகளாக ஈண்டு இடம் பெறுகின்றன. டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி ஏற்றது 1969 செப்டம்பர் என்பதாக என் நினைவு. "இரண்டு மூன்று திங்கள்கட்கு முன்பதாக வந்திருக்க வேண்டியவர் ஏன் தாமதமாக வந்து சேர்ந்தார்? காரணம் என்ன?" என் அரிய நண்பர் ஜஸ்டிஸ் மகராஜன் ஒரு சமயம் உரையாடிக் கொண்டிருந்தபோது "உங்கள் துணைவேந்தர் உரிய காலத்தில் வந்து பணியை ஏற்றுக் கொண்டாரா?" என்று வினவினார். "இல்லை. இரண்டு மூன்று திங்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தார்" என்றேன். ஏதோ தகுந்த காரணம் சொன்னார். அதனை ஈண்டு வெளியிடப் போவதில்லை; எப்பொழுதுமே வெளியிடப் போவதில்லை.

டாக்டர் ரெட்டி காலத்தில் துறைகளிலிருந்து பல்கலைக்கழக அலுவலகத்திற்குப் போகும் சாலை தொடங்கும் இடத்தில் The Thinker என்ற அரியதோர் சிலை நிறுவப் பெற்றது. இதனைத் திறந்து

---

1 அப்பர் தேவாரம் 5.19 : 9

வைத்தவர் அக்காலத்தில் தமிழக ஆளுநராக இருந்த திரு K.K. ஷா[2] என்பார். ஆளுநர் பதவியை ஏற்பதற்கு முன்னர் இவர் நடுவண் அரசு அமைச்சரவையில் நலவாழ்வுத்துறை அமைச்சராகப் பணிபுரிந்தவர். The Thinker என்ற சிலை டாக்டர் ரெட்டி தாமதமாக வந்து சேர்ந்த காரணத்தை நினைந்து பார்க்கும்படி தூண்டிக்கொண்டே உள்ளது!

**நினைவு - 1 :** இந்த ஜகந்நாதரெட்டி என்பவர் யார்? பாரதியார் பாட்டில் **"கண்ணன் - என் சேவகன்"** என்பதில்,

**எங்கிருந்தோ வந்தான்**
**இடைச்சாதி என்று சொன்னான்**
**இங்கிவனை யான்பெறவே**
**என்னதவம் செய்துவிட்டேன்**

என்று பாரதியார் கண்ணனை அறிமுகம் செய்துவைப்பார். அதுபோல டாக்டர் ரெட்டியை இவர் பணியாற்றிய ஒவ்வொரு நிறுவனமும் அறிமுகம் செய்து வைக்கும். மேலும்,

**கண்ணன் எனதகத்தே**
**கால்வைத்த நாள்முதலாய்**
**எண்ணம் விசாரம்**
**எதுவும் அவன்பொறுப்பாய்ச்**
**செல்வம், இளமாண்பு,**
**சீர்,சிறப்பு நற்கீர்த்தி**
**கல்வி அறிவு**
**கவிதை சிவயோகம்**

2 இவர் சிறந்த அரசியல்வாதி. கலைஞர் ஆட்சிக்காலத்தில் இருந்தவர். பொதுக்கூட்டங்களில் தம்மைக் கலைஞர் கருணாநிதி ஷா என்று சொல்லிக் கூட்டத்திலுள்ளோர் மகிழும்படி செய்பவர். செட்டி நாட்டரசரின் துணைகொண்டு தமிழ் - சமஸ்கிருத ஆய்வு நிறுவனத்தைத் தொடங்கியவர். இது சில ஆண்டுகள் இயங்கியது; இப்போது இது மூடப் பெற்றது. பச்சோந்தித்தனம் இவரிடம் நிறைய உண்டு.

தெளிவே வடிவாம்
சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலமனைத்தும்
ஓங்கிவரு கின்றனகாண்![3]

கண்ணனைப் பெற்றதால் தாம் அடைந்த பயனைக் கவிஞர் கூறுவதுபோல் இவர்பணியாற்றிய ஒவ்வொரு நிறுவன்மும் தான் அடைந்த பயனைப் பறைசாற்றும். இவர் இப்போதைய செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் வீரணல்லூர் என்ற ஓர் சிற்றூரில் தோன்றிப்[4] பல இடங்களில் கல்விபெற்று 1941இல் சென்னை மருத்துவக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர். House surgeon ஆகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த ஆறுமாத காலத்தில் உலகப்போர் நடைபெற்ற சமயம் போர்த்துறையில் லெப்டினண்டாகப் பணியேற்றார். எட்டரையாண்டு போர்த்துறையில் பணியாற்றிய பின் பணியிலிருந்து விலகினார்.

**நினைவு - 2 :** போர்த்துறையில் பணியாற்றி வந்த காலத்தில் அதே துறையில் பணியாளர் செவிலி (Staff nurse)யாகப் பணியாற்றிய ஒரு கிறித்தவப் பெண்மீது காதல் கொண்டு திருமணம் புரிந்து கொண்டார். இந்தக் காதல் மணம் நூறு விழுக்காடு வெற்றியைத் தந்தது. திருமணத்திற்குபின் இந்தப் பெண்மணி இந்துவாக மாறி கணவரால் இலட்சுமி என்று திருநாமம் சூட்டப் பெற்றார். ஒரு திருமணம் வெற்றியடைவது பெரும்பாலும் பெண்ணைப் பொறுத்தது. இதனால்தான் **"பானை பிடித்தவள் பாக்கியம்"** என்று அநுபவப் பழமொழியும் எழுந்தது.

---

3 கண்ணன் பாட்டு : கண்ணன் என் சேவகன்

4 இவருடைய சகோதரர்களில் திரு. D. வேங்கடராமரெட்டி என்பவர் இருப்பூர்தித் துறையில் பணியாற்றி உயர்நிலையில் ஓய்வு பெற்றவர். D. விசுவநாதரெட்டி வேளாண்மைத் துறையில் பணியாற்றி உயர்நிலையில் ஓய்வு பெற்றவர். டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி கடைக்குட்டி. மூவரும் பிறந்த குடும்பத்திற்கும் தாய்நாட்டிற்கும் "மும்மணிகளாகத்" திகழ்ந்தவர்கள்.

போர்த்துறையிலிருந்து திரும்பியதும் டாக்டர் ரெட்டியின் பெற்றோர்கள் இத்திருமணத்தை விரும்பவில்லை. அதனால் அவர்கள் மறையும் வரை சில ஆண்டுகள் மனைவியைப் பிரிந்த நிலையில் வாழ நேர்ந்தது. டாக்டர் ரெட்டியின் இல்லற வாழ்க்கையில் ஒரு கசப்பான பகுதியாகும் இது.

பெற்றோர்கள் மறைந்த பிறகு டாக்டர் ரெட்டியின் இல்லற வாழ்க்கை மிகச் சிறப்புடன் நடைபெற்றது. காதற் பெண் மூலம் பல இலட்ச ரூபாய் வந்து சேர்ந்தது. இதனால்தான் இப்பெண்மணிக்கு "இலட்சுமி" என்று திருநாமம் சூட்டினார் போலும்! இலட்சுமி D. ஜகந்நாத ரெட்டி மனைத்தக்க மாண்புடையவளாக அமைந்ததால் டாக்டர் ரெட்டியின் இல்லற வாழ்க்கை பலருக்கு எடுத்துக்காட்டாகவும் அமைந்தது. திருப்பதியில் இவர்கள் இல்லற வாழ்க்கையை நான் நேரில் கண்டு மகிழ்ந்தவன். திருமதி இலட்சுமி தம் கணவன்மீது அளவற்ற பாசத்தையும் நேசத்தையும் காட்டி வந்ததையும், டாக்டர் ரெட்டியும் அவ்வாறே தன் துணைவியின்மீது காட்டி வந்ததையும் நேரில் கண்டு மகிழ்ந்தேன். "செம்புலப் பெயநீர்போல, அன்புடை நெஞ்சங்கள் கலந்து வாழ்ந்ததைக்" கண்டு களிப்பெய்தினேன்.

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை;**
**யானாகியர்நின் நெஞ்சுநேர் பவளே**[5]

என்ற அம்மூவனார் படைத்துக் காட்டும் தலைவிபோல் வாழ்ந்ததை நேரில் கண்டு மகிழ்ந்தேன்.

இவர்கட்கு இராமசந்திரரெட்டி என்ற ஒரே மகன் உண்டு. இவரும் சிறந்த மருத்துவர். இவருடைய துணைவியாரும் ஒரு மருத்துவ நிபுணர். இருவரும் பெரும்புகழ் பெற்ற சென்னை அப்போலோ மருத்துவமனையில் பணியாற்றியவண்ணம் புகழோங்கி நிற்கின்றார்கள். டாக்டர் ரெட்டி மறைந்த பிறகு திருமதி இலக்குமி ஜகந்நாத ரெட்டி தம் மகனுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

5 குறுந். 49

நினைவு - 3 : போர்த்துறையிலிருந்து விலகிய பிறகு டாக்டர் ரெட்டி சென்னை மருத்துவக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்து நோயியல் துறையில் மூன்றாண்டுகள் பயின்று M.D (Pathology) பட்டம் பெற்றார். அக்கல்லூரியிலேயே மருத்துவமனை மருத்துவராகப் (Demonstrator) இரண்டாண்டுகள் பணியாற்றிய பின்னர் விசாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது குண்டூர் (ஆந்திரம்) மருத்துவப்பள்ளியில் முதல்வராகப் பணியேற்றார். அங்குப் பணியாற்றிய எட்டரையாண்டுக் காலத்தில் அரும்பாடுபட்டு அதனை M.D கற்பிக்கும் கல்லூரியாக, உயர்நிலை ஆய்வின் நிறுவனமாக வளர்த்துப் பெரும்பேர் பெற்றார். அவர் விசாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரியில் இரண்டாண்டுகள் நோய் மருத்துவராகவும், பின்னர் அத்துறையின் இயக்குநராகவும் (Director) பணியாற்றும் வாய்ப்புகள் பெற்றார். பலநிலைகளில் இவருக்கு திரு K.M. இராவ் (குடியரசுத் தலைவர் சர்வே பள்ளி இராதா கிருட்டிணனின் மருகர்) அவர்களின் ஆதரவும் அரவணைப்பும் இருந்து வந்தது. இறைவனின் திருவுளக்குறிப்பே என்று கருதவேண்டும்.

> **அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்**
> **பேணித் தமராக் கொளல்**[6]

என்பது வள்ளுவர் வாக்கு. பெரியவர்களைப் போற்றி அவர்களைத் தமக்கு உறவாகக் கொள்ளுதல் ஒருவர் பெறும் பேறுகளனைத்திலும் அரியதாகும் என்கின்றார். வள்ளுவர் பெருமான். எல்லோர்க்கும் இவ்வாய்ப்பு அமைவது இறைவன் திருவருளாலேயே என்று கருதுதல் வேண்டும்.

இவரது திறமையை நன்கறிந்த நடுவண் அரசு இவரை புதிதாகத் தொடங்கப்பெற்ற பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரி முதல்வராக அமர்த்தியது. நடுவண் அரசின் நிதிமடை திறந்த வெள்ளமெனப் பாய்ந்தது. பணம் பத்துவிதம் செய்யுமல்லவா? இதனால் இந்நிறுவன வளர்ச்சி நாளொரு மேனியும்

6 குறள். - 443

பொழுதொருவண்ணமுமாக மேம்படுகின்றது. கல்லூரி வசதிகட்காகவும், மருத்துவமனை வசதிகட்காகவும் பலகட்டடங்களை எழுப்பியதனால் ஒரு விசுவகர்மா எனப் போற்றப் பெற்றார். பாண்டி ஜவஹர்லால் மருத்துவக் கல்லூரி - ஆய்வு நிறுவனத்தின் (JIPMER) வளர்ச்சி வீறுகொண்டெழுந்தது. அதன் இருப்பை நாடறியச் செய்தது டாக்டர் ஜகந்நாத ரெட்டியின் பெரும்பணியாகும்.

**அன்பர் பணிசெய்யஎனை**
**ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந்**
**தெய்தும் பராபரமே**[7]

என்ற தாயுமான அடிகளின் பேருண்மையை அநுபவமாகக் கண்டவர் டாக்டர் ரெட்டி. செயல்திறம் மிக்க இவருடைய சுறுசுறுப்பையும் "மெய்வருத்த பாராதும், பசிநோக்காதும் கண் துஞ்சாதும்" பணியாற்றும் பாங்கையும் அறிந்த ஆந்திர அரசு இவரைத் திருவேங்கடம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக்கியது. டாக்டர் வாமனராவுக்குப் பிறகு இவர் திரிவிக்கிரமாவதாரம்போல் திருப்பதி வந்து சேர்ந்தார்.

**நினைவு - 4 :** டாக்டர் ரெட்டி பதவியேற்ற ஒன்றிரண்டு வாரங்களில் (அக்டோபர் - 1969) தமிழ் வளர்ச்சிக்கென நான் தமிழக அரசிடம் மானியம் பெறுவதற்கென்று மேற்கொண்ட "பகீரதப் பிரயத்தனம்" பழமாயிற்று. ஆண்டிற்குப் பத்தாயிரம் வீதம் ஐந்தாண்டுகட்கு மானியம் வழங்குவதென்ற ஆணையைத் தமிழக அரசு பிறப்பித்தது. டாக்டர் ஜகந்நாத ரெட்டிக்கு இது பெருமகிழ்ச்சி தந்திருக்க வேண்டும் என்பதைப் பின்னர் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் ஊகிக்க முடிந்தது.

எந்தத் துணைவேந்தர் புதிதாக வந்தாலும் ஒவ்வொரு துறையிலும் (தமிழ்த் துறையைத் தவிர) சங்கக் கூட்டத்தைத் தொடங்கி வைக்கவோ அல்லது அதன் நிறைவுக் கூட்டத்தை முடிக்கவோ அழைப்புகள் இருக்கும். பல்கலைக் கழக வளாகத்தில்

7 தா.பா. பராபரம் - 155

இஃது ஒரு மரபாக வழங்கிவரும் பழக்கமாகும்.[8] இதனால் புதிய துணைவேந்தரை எடைபோட்டுப் பார்ப்போருக்கு ஒரு வாய்ப்பு; கால்கை பிடிப்போருக்கும் ஒரு வழி. டாக்டர் ரெட்டியின் பேச்சு நன்றாக இருக்கும். சிலர்போல் வாய்க்கு வந்தபடி பேசமாட்டார். பேச வேண்டிய பொருளை நன்கு சிந்தித்து வகைப்படுத்திக் கொண்டு வந்து பேசுவார். பேசுவதற்கும் விரும்புவார். பேசுவதற்குத் தினவுடைய வாயைப் பெற்றவர். இவரது இந்தப் பழக்கத்தை மிக விரைவில் எல்லோராலும் அறிந்து கொள்ள முடிந்தது.

நான் பிறதுறைகளில் நடைபெறும் கூட்டங்களுக்குப் போய்வந்து கொண்டிருந்தேன். தமக்கும் தமிழ் இலக்கியத்தைப் பற்றிச் சிறிது தெரியும் என்பதைப் புலப்படுத்திக் கொள்வார். பேசும் போது நான் அக்கூட்டத்தில் இருப்பது தெரிந்துவிட்டாலோ தமிழ் இலக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "கம்பராமாயணத்தில் ஏழு தொகுதிகள்" என்பார்; "திருக்குறள் உலகப் பெரிய இலக்கியங்களுள் ஒன்று" என்று குறிப்பிடுவார். "சங்க இலக்கியங்கள்", "தேசியகவி பாரதியாரின் படைப்புகள்" என்று பேசுவார். சரளமான ஆங்கிலம் இவர் திருவாயினின்று பொழியும். சில கூட்டங்கட்கு நான் போகமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். அப்போது "இவர்தம் திருக்கண்கள் என் இருப்பைத் துழாவும்" என்றும் "டாக்டர் ரெட்டியார் எங்கே? வரவில்லையா?" என்று கேட்பார் என்றும் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். "டாக்டர் ரெட்டியாரின் முயற்சியால் தமிழக மானியம் வந்திருக்கின்றது; வருகிற ஆண்டு தமிழ் முதுகலை வகுப்பு தொடங்கப்படும்" என்று குறிப்பிடுவார். "நாவலர் நெடுஞ்செழியனைக் கொண்டு விழா அமைத்து முதுகலை வகுப்பு தொடங்கலாமா?" என்பார் நான் கூட்டத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டுவிட்டால். சில சமயம் இவரது பேச்சு அரசியல்வாதியின் பேச்சுபோல் ஒளிவிட்டுக் காட்டும். கூடியிருப்போர் மகிழ்வதற்காகவே சில நிகழ்ச்சிகளை நகைச்சுவையாகக்

8 டாக்டர் V.C. வாமன் ராவ் (து.வே) துறைகளின் கூட்ட அழைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. பேசுவதற்கு ஆசிரியர்களே ஏற்றவர்கள் என்ற கொள்கையுடையவர்.

குறிப்பிடுவார். பேச்சின் போக்கு இளைஞர்களின் கவனத்தை ஈர்ப்பதாகவும் அமையும்.

**நினைவு - 5 :** டாக்டர் ஜகந்நாத ரெட்டி காலத்தில் கட்டடங்கள் என்றுமில்லாத அசுர வேகத்தில் வளர்ந்தன; விரிந்தன. ஒவ்வொரு சிறு நிகழ்ச்சிகளிலும் இவரது கவனம் சென்றது. ஒரு பெரிய பொறிஇயல் வல்லுநர்போல் செயற்பட்டார்; வசதிகள் வளர்ந்தமை ஒருபுறமிருக்க, எதிலும் இவர் உள்ளத்தில் முகிழ்த்த கலை உணர்ச்சி கட்டடங்களிலும் வசதிகளிலும் துலங்கின. பல்கலைக்கழக வளாகமே ஓர் இந்திர பவனம்போல் மாறத் தொடங்கியது. வளாகத்தில் குறுக்கும் நெடுக்குமாக அமைந்த மண்சாலைகளில் வாகனங்கள் செல்லும்போது புழுதிகளைக் கிளப்பிக் கொண்டு செல்லுவதால், மாணாக்கர்கள், பல்கலைக்கழகத்திற்கு வரும் பெற்றோர்கள் முதலியவர்களின் உடல்நலம் கெடும் என்பதை அறிந்த துணைவேந்தர் எங்கெங்கோ ஒதுங்கிக் கிடந்த நிதிகளைத் தேடி எடுத்து முதல்வேலையாகத் தார்சாலையாக மாற்றச் செய்தார். எத்தனை வாகனங்கள் ஓடினாலும் புழுதியும் தூசியும் கிளம்பாத சூழ்நிலை வளாகத்திற்குப் புதியபொலிவினை நல்கியது. ஆசிரியர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாலைகளும் தார்சாலைகளாயின. எங்கெங்கு மரங்கள் இருந்தால் அழகுதரும் என்று கருதினாரோ அங்கங்கெல்லாம் மரங்களை நட்டுப் பாதுகாப்புடன் பராமரிக்கச் செய்தார். இவர்காலத்தில் போடப்பெற்ற (1970) தார் சாலைகள் நிதி வசதியில்லாமையால் பராமரிப்பின்றி பள்ளம், படுகுழிகளாகக் கிடந்தன. 1992இல் அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு திருப்பதியில் நடைபெற்றபோது திருப்பதி தேவஸ்தான நிர்வாக வாரியத்தின் தலைவராக இருந்த திரு T. சுப்பராம ரெட்டியின் கருணையுள்ளத்தினால், "திருப்பதியை அழகுபடுத்தும் திட்டத்தின்" கீழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள தார்சாலைகள் எல்லாம் புதுப்பிக்கப் பெற்றன. டாக்டர் ஜகந்நாத ரெட்டி காலத்திற்குப் பிறகு போடப்பெற்ற மண்சாலைகள் யாவும் தார்சாலைகளாக மாறி வளாகத்திற்குப் புதிய பொலிவினைத் தருகின்றன.

துணைவேந்தர் திருமாளிகை அகன்ற பரப்புள்ள இடத்தில் மாந்தோப்புகளுக்கிடையே அமைந்துள்ளது. அதற்குள் அங்குமிங்குமாகப் பல கற்சிலைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன; அவற்றுள் சில குறையுறுருப்புகளுடனும் காட்சியளித்தன. இவற்றை ஒன்று திரட்டி ஓரிடத்தில் கலைக்கூடமாக்கக் கருதினார். திருப்பதி - சித்தூர் நெடுஞ்சாலையிலிருந்து பல்கலைக்கழக வளாகத்தில் நூலகத்திற்குச் செல்லும் குறுஞ்சாலையின் இருபுறங்களிலும் நேருக்கு நேராக அமையுமாறு நடச் செய்து அவற்றைச் சுற்றி அழகான சிமிட்டியாலான மேடையையும் நிறுவச் செய்தார். அறிவுக் கலைக்கூடமாகிய நூலகத்திற்குச் செல்வோர் கலையுணர்வுடன் செல்வதற்கு இச்சிலைகள் வாய்ப்பாக அமைந்து அகத்தெழுச்சியை உண்டாக்குவனவாயிருந்தன. பார்ப்பதற்கு இச்சாலை ஓர் அரும்பொருள் காட்சியகக் களையை நல்கியது. இன்று அவை அகற்றப் பெற்று தேவஸ்தானத்தின் அருங்கலைக் காட்சியகத்தைப் புகலிடமாகக் கொண்டுவிட்டன.

இவர் காலத்தில் நடைபெற்ற பல்கலைக் கழக வளர்ச்சிப் பணிகளை கட்டட வளர்ச்சி, துறைகளின் தோற்ற வளர்ச்சி என்று இருபகுதிகளாகப் பிரித்து நினைவுகூரலாம். ஆயினும் இவை இரண்டும் இணைந்த நிலையில்தான் நடைபெற்றன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். கிடைப்படவடிவில் கிடந்த முக்கிய மூன்று கட்டடங்கள் உருப்பெற்றன. தொடர்ந்து ஏனையவை எழும்பின.

**நினைவு - 6 :** கட்டட வளர்ச்சிப் பணிகள் என்றுமில்லாத அசுர வேகத்தில் நடைபெற்றன. முதல் துணைவேந்தர் பேராசிரியர் கோவிந்தராஜுலு நாயுடு காலத்தில் திட்டமிடப் பெற்றுக் கிடைப்படிவ வடிவில் கிடந்த திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் செயற்படாமற் கிடந்தவற்றையெல்லாம் செயற்படச் செய்தார். புதிய திட்டங்களையும் தீட்டி அவற்றையும் முற்றுப்பெறச் செய்தார். முன்னைய திட்டங்களில் முக்கியமான மூன்று செயற்பட்டன.

(1) **பல்கலைக்கழக நிர்வாக அலுவலகம்:** பதிவாளர், துணை வேந்தர் அறைகள், தேர்வாணயர் அலுவலகம்,. பொறியாளர்

அலுவலகம், பேரவை மண்டபம் முதலியவை அடங்கிய பெரிய கட்டடம் இது. இது "நீலம் சஞ்சீவிரெட்டி பவனம்" என்ற திருநாமத்தால் பொலிவுடன் திகழ்கின்றது. இதில் மின்விசை ஏற்றம் பொருத்தப் பெற்றுள்ளது. பேரவையின் இருக்கை வசதிகள் மிக அழகாக அமைந்துள்ளன. ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு மாநிலச் சட்டப்பேரவையிலும் நாடாளுமன்றப் பேரவையிலும் இருப்பனபோல் ஒலிவாங்கிகள் (Micro phones) பொருத்தப் பெற்றுள்ளன. நுழைவாயிலை ஏழுமலையான் திருவுருவப்படம் அணிசெய்கின்றது. இருக்கை வசதிகள் பணிமேடை முறையில் அமைக்கப் பெற்றுள்ளன. ஒருபக்கம் வேமனர் திருவுருவப்படமும் (தெலுங்குத் துறை வைத்தது) அதற்கு எதிர்ப்பக்கம் திருவள்ளுவர் திருவுருவப்படம் (தமிழ்த்துறை வைத்தது) அணி செய்கின்றன. முதலில் வைத்தது தமிழ்த்துறை. ஒவ்வொரு விவரங்களிலும் டாக்டர் ரெட்டியின் கற்பனையுள்ளத்தையும், கலை உணர்ச்சியையும் கண்டு மகிழலாம்.

(2) **கலையரங்கம் : (Auditorium)** இஃது உருப்பெறும்போது ஒவ்வொரு சிறுவிவரங்களிலும் தம் நேர்க்கவனத்தைச் செலுத்தினார். அதிபரவளைவு அமைப்பிலுள்ளள (Hyperbola) இம்மண்டபத்தின் உட்புற அமைப்பு கண்டாரை வியக்க வைக்கும் பான்மையது. இருக்கை வசதிகள் நாடக - நாட்டியங்களுக்கான மேடை அமைப்பு, திரைச்சீலை அமைப்புகள் இவை மிகச் சிறப்பான முறையில் அமைக்கப் பெற்றன. இவ்வளவும் தயாராகித் திறப்பு விழாவுக்கும் ஏற்பாடு செய்யப் பெற்றுவிட்டது. இரண்டு நாட்கள் முன்னதாகத் தான் திரைச்சீலைகள் பொருத்தப் பெற்றன. மேடைக்கு மேலே மின்சாரத்தைக் கொண்டு ஏதோ பற்ற வைக்கப் பெற்றது; வேலையும் இரவில் நடைபெற்றது. தீப்பொறி குறிதவறி வேறுதிசையில் சென்று அரங்கக் கூரையில் தீப்பற்றிக் கொண்டது.[9] அங்கிருந்தவர்கட் கெல்லாம் ஒரு பிரமிப்பு ஏற்பட்டுவிட்டது. திருவேங்கட்டரங்கம் என்பவர் திரைச்சீலைகளை உருவிக்கொண்டு வெளியில் ஓடிவந்துவிட்டார். பிறரும் வெளியேறினர். சிறிது நேரத்திற்குள்

9 பற்றவைத்தவர் குடிபோதையில் இருப்பதாகப் பேசிக்கொண்டனர்

அரங்கக் கொட்டகை முழுவதும் தீக்கடவுள் வசமாயிற்று; காண்டவ தகனம்போல் நடைபெற்றது. இந்தத் தகனம் நடைபெற்றபோது இந்திரன் மழைபொழிய அருச்சுனன் அதைத் தடுத்து நிறுத்தினான். தீயணைக்கும் பொறிக்கு ஏற்பாடு செய்வதற்குள் நல்ல உயர்ந்த மெத்தையுடன் கூடிய இருக்கைகள் யாவும் சாம்பலாயின. நேரில் கண்ணுற்றவர்கள் அழாமல் இருக்க முடியாது. பெருநட்டம் ஒருபுறமிருக்க, அழகே வடிவங் கொண்ட ஒரு கலை மண்டபவம் முடியும் நிலையில் இப்படி நாசமானது நெஞ்சை உருக்கும் செய்தியாகி விட்டது. தமது கற்பனைச் சிறகைப் பறக்கவிட்டு அல்லும் பகலும் பாடுபட்ட துணைவேந்தர் டாக்டர் ரெட்டியின் மனம் என்ன பாடுபட்டிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கூடப் பார்க்க முடியாது.

துணைவேந்தரின் மனம் தளர்ந்து போகவில்லை. இறைவழிபாட்டில் தோய்ந்தவராதலால் இவர் மனம் ஒடிந்து போகவில்லை. இஃது இறைவன் திருக்குறிப்பின்படியே நடைபெற்றிருக்க வேண்டும் என்று நம்பினார். ஒரு சமயம் திருவேங்கடமுடையானைத் தரிசிக்கச் சென்ற "கியூ" வரிசையால் நெருக்கித் தள்ளும் நிலை (stampede) ஏற்பட்டுப் பத்துப் பதினைந்து பேர் மாய்ந்து போகும் நிலை ஏற்பட்டது. பக்தர்கட்குக் கூட - அதுவும் இறைவழிபாட்டிற்காக செல்லும் பக்தர்கட்கும் - இந்நிலை ஏற்படவேண்டுமா? என்று பக்தர் உலகமே திடுக்கிட்டது. வகையறியாது குழப்பத்தில் ஆழ்ந்தது. நாளேடுகளில் இந்தச் செய்தியைக் கண்டதும் அறிஞர் உலகம் தம்பித்து நின்றது. இறைவழிபாட்டில் நம்பிக்கை அற்றுப் போகுமோ என்று அஞ்சியது. அவ்வமயம் காஞ்சி முனிவர் (பெரியவர்) "திருக்கோயில் நிர்வாகத்தில் ஏதோ குறை உள்ளது; அஃது இன்னது என்று குறிப்பிடமுடியாது. அதன் அறிகுறியே இந்த விபத்து. கோயில் நிர்வாகம் மனத்தைச் சோதித்து குறையைப் போக்கிக் கொள்ளட்டும்" என்ற செய்தியை வெளியிட்டார். இதனைத் துணைவேந்தர் டாக்டர் ரெட்டி படித்திருக்க வேண்டும்; அதைப் பன்முறை சிந்தித்து உணர்ந்திருக்க வேண்டும். பல்கலைக்கழகம் கலைமகளின் பெருங்கோயில் அல்லவா?

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடும் தெய்வம்;
உய்வம் என்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய் தெய்வம்-,
செய்வமென்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்;
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்[10]

என்ற பாரதியாரின் பாடல் இதை எழுதுங்கால் என் மனத்தில் எழுகின்றது. துணை வேந்தர்,

உன்னை உள்ள படியறிவோம்;
உலகம் உள்ள திறமுள்ளோம்;
பின்னை யறியோம்; முன்னறியோம்
இடையும் அறியோம் பிறழாமல்;
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியின் நிற்கும் அதுவல்லால்
என்னை அடியேம் செயற்பால
இன்பதுன்பம் இல்லோனே?[11]

என்ற பாடலை அறியாராயினும் இதிலுள்ள கருத்துகள் அவர் சிந்தையில் முகிழ்த்திருக்க வேண்டும். உடலிலுள்ள நரைதிரை முதலியன ஆன்மாவைச் சேராதவாறுபோல் உலகத்துயிர்க்கெல்லாம் உயிரான பரமான்மாவைச் சேரா என்ற கருத்து நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. இறையருளால் முரட்டுத் துணிவோடு செயற்பட்டார். துணைவேந்தர். பல்கலைக்கழகப் பணியாளர் (எல்லா நிலையினரும்) ஒருநாள் ஊதியம் தந்தனர்; சில வங்கிகள் நன்கொடைகள் வழங்கின.[12]

---

10 பா.க. : வெள்ளைத் தாமரை - 4

11 கம்ப. யுத்த பிரம்மாத்திரப் - 223

12 ஆந்திரா வங்கி ரூ. 25,000/= வழங்கியது. இதனால் ஸ்டேட் வங்கியிலிருந்து சில கணக்குகள் இந்த வங்கிக்கு மாற்றப்பெற்றன.

தனிப்பட்டோரிடமிருந்தும், சில நிறுவனங்களிலிருந்தும் நன்கொடைகள் வந்து குவிந்தன. இவையெல்லாம் தீக்கடவுள் உணவாகக் கொண்ட பொருள்கள் வாங்கப் போதா. இறையருளால் கட்டடத்திற்கு அதிகச் சேதம் இல்லை. பொறியாளர்கள் இதனைச் சோதித்து அறிந்தனர். ஆறு திங்களில் துணைவேந்தர் மயன்போல் செயற்பட்டார். மீண்டும் கலையரங்கம் மறுபிறவி எடுத்தது. நிதிபோதாததால் புதிய பிறவி இரண்டாந்தரமாக அமைந்தது. இதுவும் இறைவனின் திருக்குறிப்பே என்று துணைவேந்தரோடு சேர்ந்து பல்கலைக்கழகப் பணியாளர்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

இதன் திறப்புவிழா கோலாகலமாக நடைபெற்றது. ஆந்திர அரசின் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு M.V. கிருஷ்ணராவ் திறந்து வைத்தார். (இவர் இப்போது இல்லை. இறைவன் திருவடியை அடைந்து விட்டார்) இவர் டாக்டர் ஜகந்நாத ரெட்டியின் அரிய பணிகளைக் கண்டு உள்ளூர மகிழ்ந்தவர். தம்முடைய பேச்சில் இக்கலையரங்கம் "**ஜகந்நாதரெட்டி கலையரங்கம்**" என்ற பெயரில் வழங்கினால் சிறப்பாக இருக்கும்; நன்றியுடன் நினைவுகூரத் தக்கதாகவு இருக்கும் என்று குறிப்பிட்டார். தம் காலத்தில் தாமே இத்திருப்பெயரைச் சூட்டிக்கொள்ள விரும்பவில்லை[13] டாக்டர் ரெட்டி. இவருக்குப் பின்னர் வந்த துணைவேந்தர்கள் இவர் பணியை நன்றியுடன் போற்றியிருக்க வேண்டும்; செய்யவில்லை. ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவரின் சிந்தையிலாவது இந்த நல்லெண்ணம் தோன்றாதிருந்தது மிகவும் வருந்தத்தக்கது. இதனைச் "**சீநிவாசபவனம்**" எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தது நிர்வாகம்! "என்ன நன்றி கெட்ட உலகம்!" என்று சில வயது முதிர்ந்த பேராசிரியர்கள் முணுமுணுத்து வருந்தினர்.

---

13 இன்றைய அரசியல்வாதிகள் தாம் பதவியிலிருக்கும்போதே தம்பெயர்களைப் பலநிறுவனங்களின் பெயர்களாகச் சூட்டி மகிழ்வது நடைமுறை அரசியலாகிவிட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் சர் A.L. முதலியார் (துணைவேந்தர்) சிலை அவர் பதவியிலிருந்தபோதே நிறுவப்பெற்றது.

(3) **விருந்தினர் மாளிகை :** பல்கலைக்கழகம் விரிவிற்கேற்ப, வெளியிலிருந்து வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையும் பெருகத் தொடங்கியது. வருகின்றவர்கள் தங்குவதற்கும், உணவு கொள்வதற்கும் வசதிகள் இல்லாமல் தவித்தனர். தேவஸ்தான சத்திரங்கள், விருந்தினர் இல்லங்கள் கைகொடுத்து உதவினாலும் வாகன வசதியின்மையால் தொல்லைப்பட்டனர். பல்கலைக்கழக வளாகத்திலேயே தங்குவதற்கும் உணவிற்கும் ஏற்பாடுகள் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தார் துணைவேந்தர் டாக்டர் ஜகந்நாத ரெட்டி. பல்கலைக்கழக வளாகத்தில் ஆசிரியர் குடியிருப்பையொட்டி ஒரு விருந்தினர் மாளிகையை எழுப்பினார். குளியலறை கழிப்பறைகளுடன் அமைந்த தங்கும் அறைகள் குளிர்சாதனமுள்ள சில அறைகள், பலர் சேர்ந்தாற்போல் அமர்வதற்கேற்றவாறு வசதியுள்ள, இரண்டு கூடங்கள் விருந்துகள் நடைபெறுவதற்கேற்ற உண்ணும் அறை - இத்தகைய வசதிகள் உள்ளன இந்த மாளிகையில், இந்த விருந்தினர் இல்லம் கட்டுவித்ததுடன், ஒவ்வொரு சிறு விவரங்களிலும் தம் நேரான கவனத்தைக் கொண்டு செலுத்தியதுதான் பலருடைய பாராட்டுக் குரியரானார் டாக்டர் ரெட்டி.

இந்த மூன்று தவிர இவரே திட்டம் வகுத்துச் செயற்படச் செய்தவை சில உள்ளன. அவையாவன :

(1) **மகளிர் விடுதி :** மகளிர் தொகை பல்கலைக்கழகத்தில் பெருகி வருவதைக் கண்டார் துணைவேந்தர். தேவஸ்தானத்தைச் சேர்ந்த மகளிர் விடுதிக்குரிய கட்டடம் போதாதிருந்தது (இது தொடக்கக் காலத்தில் பல்கலைக் கழகத்திற்குத் தரப்பெற்று விட்டது) இதனையொட்டி மிகவும் அழகான முறையில் மற்றோர் இரண்டுமாடிக் கட்டடத்தை எழுப்பச் செய்து அவர்கட்குத் தேவையான வசதிகளைப் பெருக்கினார். மகளிர் விடுதிகளில் மகளிர்க்கெனத் தனிப்பட்ட முறையில் தேவைப்படும் சுகாதார வசதிகட்கு வழியமைத்துத் தந்தார். சிறந்த மருத்துவரல்லவா?

(2) **ஆய்வுக் கூடங்கள் :** பொறியியல் படிப்பு ஏட்டுச் சுரைக்காய் அன்று. மாணாக்கர்களின் எண்ணிக்கை பெருகியதாலும்,

புதிய துறைகள் ஏற்படுத்தியதாலும் ஆய்வுக்கூடங்கள் தேவைப்பட்டன. இவற்றின் இன்றியமையாமையை உணர்ந்த துணைவேந்தர் மிக விரைவில் இரண்டு மூன்று ஆய்வுக் கூடங்களை எழுப்பித் தேவையான வசதிகள் கிடைக்கச் செய்தார்.

(3) **ஆசிரியர் குடியிருப்பு** : ஆசிரியர்கள் குடியிருப்பிற்கான பல்வேறு நிலை ஆசிரியர்கட்கேற்ற வீடுகள் அடங்கிய "**பிரகாசம் நகர்**"[14] இவர்காலத்தில்தான் தோன்றியது. அஃது இன்று விரிவாகிக் கொண்டே வருகின்றது. பத்தாண்டுகள் இப்பல்கலைக்கழகத்தில் அநுபவம் பெற்றுள்ள ஆசிரியர்க்கு வீடுகள் தருவது போன்ற விதிகளை வகுத்துக்கொண்டு இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்பெற்றன. இந்த விதியின் கீழ் 10 ஆண்டுகள் அல்லலுற்ற அடியேனுக்கு ஓர் இல்லம் ஒதுக்கப்பெற்றது. (8, துணைப் பேராசிரியர் பகுதி, பிரகாசம் நகர்) அதில் ஏழாண்டுகள் தங்கியிருக்கும் பேறு பெற்றேன். வழக்கமாகச் செய்யும் வேலைகளை விட இருமடங்கு பணிகள் செய்ய முடிந்தது. துறையிலும் இல்லத்திலும் ஆய்வு மாணவர்க்கான பணி மும்முரமாக நடைபெற இந்த வசதிகள் துணைசெய்தன.

(4) **பொறியியல் கல்லூரி 2-வது உணவு விடுதி** : பொறியியல் மாணவர்களின் தொகை பெருகிக் கொண்டே போனதால் இன்னொரு விடுதி தேவைப்பட்டது. விரைந்து செயலாற்றி அதைத் தோற்றுவித்தார். மருத்துவக் கல்லூரி பொறியியற் கல்லூரி மாணவர்களின் வகுப்பு முற்பகல் எட்டு மணிக்கே. தொடங்குவதால் விடுதி இவர்கட்கு மிகவும் இன்றியமையாதது என்பதை அவர்கள் பணியை நேரில் அறிந்தவர்கள்தாம் அவர்களின் தேவையை உணர முடியும்.

**நினைவு - 7** : "நன்றி மறப்பது நன்றன்று" என்ற பொன்மொழியை நன்கறிந்து செயற்படுபவர் டாக்டர் ரெட்டி. ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களின் செயற்பாட்டால் உருவானது திருவேங்கடவன் பல்கலைக்கழகம். அது போலவே முதல் துணைவேந்தர் கோவிந்தராஜுலு நாயுடு அவர்களின்

14 ஆந்திர கேசரியின் தொண்டின் நினைவாகச் சூட்டப்பெற்ற பெயர்.

செயற்பாட்டால் விரைந்து வளர்ந்தது பல்கலைக்கழகம். இவர்கள் இருவருக்கும் நன்றி செலுத்தும் பாங்கில் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் டாக்டர் ரெட்டியின் திருவுள்ளத்தில் எழுந்தது. இந்த எண்ணம் செயற்படுத்துவதில் இராயர் சீமைப் பெருமக்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று கருதினார் துணைவேந்தர். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் பங்கும் இதில் இருக்க வேண்டும் என்றும் கருதினார். கல்லூரி முதல்வர்களின் கூட்டம் இருந்தபோது ஒவ்வொரு மாணவனும் ஒரு ரூபாய் வீதம் வழங்குவதில் சிரமம் இராது என்று கருதி இத்திட்டத்தை அவர்களின் முன் வைத்தார். அவர்கள் இதனை ஒருமனதாக ஒப்புக் கொண்டனர். திட்டம் செயற்பட்டதால் பல ஆயிரம் வெண் பொற்காசுகள் குவிந்தன. இரு பெரியாருக்கும் வெண்கலச் சிலைகள் உருவாயின. ஆந்திரகேசரியின் சிலையை பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தின் முகப்பில் நிறுவி சஞ்சீவிரெட்டி பவனத்திற்கு ஒரு பொலிவினை ஏற்படுத்தினார். பல்கலைக்கழகத்திற்கு விதையூன்றிய பெரியாரின் சிலை இங்கு அணிசெய்வதுதானே பொருந்தும்?

துணைவேந்தர் கோவிந்தராஜுலு, நூலகம் பல்கலைக் கழகத்தின் இதயம் போன்றது என்று கருதியவர். ஒவ்வொரு சிறுசிறு விவரங்களிலும் தம் கருத்தைச் செலுத்தி வளர்த்தவர். அந்தக் கலைக்கோயிலுக்குச் செல்லும் வழியில் நான்கு சாலைகள் சந்திக்கும் இடத்தில் திரு. நாயுடு அவர்களின் சிலை அணி செய்கின்றது. பொருத்தமாக அமைப்பதில் டாக்டர் ரெட்டிக்கு டாக்டர் ரெட்டியே நிகர். திரு. நாயுடு அவர்கள் பணியைவிட்டு விலகும்போது அவருக்காக ஏற்படுத்தப் பெற்ற விழாவில் வெள்ளியாலான நூலகக் கட்டடத்தின் உருவம் அவருக்கு நினைவுச் சின்னமாக அளிக்கப் பெற்றதை ஈண்டு நினைவுகூரலாம்.

**நினைவு - 8 :** துறை வளர்ச்சியிலும், ஆசிரியர்களின் நியமனத்திலும் டாக்டர் ரெட்டியின் போக்கு சரிவர அமையவில்லை. எல்லா நிலைகளிலும் அவருடைய தனி முரண்பாடு (Idiosyncrsy) பளிச்சிட்டுக் காட்டியது. தமிழ்த்துறைகட்குப் பேராசிரியர்-1,

துணைப் பேராசிரியர்-1, விரிவுரையாளர்-1, தேவை என்று விளம்பரம் செய்யப் பெற்றிருந்தது. (1) பேராசிரியருக்கு பத்தாண்டுகள் எம்.ஏ. வகுப்பு கற்பித்த அநுபவம், டாக்டர் (Ph.D) பட்டம், ஆய்வு மாணவர்கட்கு வழிகாட்டிய அநுபவம் இருக்க வேண்டும் என்றும்; (2) துணைப்பேராசிரியருக்கு 5 ஆண்டுகள் எம்.ஏ வகுப்பிற்குப் பயிற்றிய அநுபவம், டாக்டர் பட்டம், வழிகாட்டிய அநுபவம் (இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்) என்றும், (3) விரிவுரையாளர் பதவிக்கு முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் தேறியிருக்க வேண்டும் என்றும் விளம்பரத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தன. நானும் துணைவேந்தரும் பேசிக்கொண்டிருந்தபோது டாக்டர் மு. வரதராசனைத் தவிர தமிழகத்தில் இத்தகுதிகள் பெற்றவர்கள் ஒருவருமே இலர் என்று தெளிவாக்கிவிட்டேன்.

எனினும் துணைவேந்தர் அண்ணாமலை, சென்னை, மதுரைத்துணைவேந்தர்கட்கு எழுதிப் பேராசிரியர் பதவிக்கு ஒருவரைப் பரிந்துரைக்குமாறு கேட்டிருந்தார். மூவரும் மறுமொழி தந்திருந்தனர். ஒருநாள் துணைவேந்தர் என்னை அவர் அறைக்கு வருமாறு சொல்லியனுப்பியிருந்தார். மூன்று துணைவேந்தர்களின் கடிதங்களை என்முன் வைத்தார் (1) அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆதிநாராயணா தந்த மறுமொழி; "இந்தப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் அ. சிதம்பரநாதனைத் தவிர பேராசிரியர்கள் ஒருவருக்குமே டாக்டர் பட்டம் இல்லை. டாக்டர் சிதம்பரநாதனும் அண்மையில் இறந்துவிட்டார். இந்தப் பல்கலைக்கழகம் மூலம் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் ஒருவருமே இலர்" என்று; (2) சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு நெ.து. சுந்தரவடிவேலு எழுதியது : "இப்பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. வகுப்புகள் இல்லை; கற்பித்தலும் இல்லை. தமிழ்த்துறையில் டாக்டர் மு.வ. ஒருவரே டாக்டர் பட்டம் பெற்றவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மட்டிலும்தான் எம்.ஏ. வகுப்பு நடைபெற்று வருகின்றது. அங்கு வித்துவான் பட்டம் பெற்றவர்கள்கூட எம்.ஏ. வகுப்பு கற்பிக்க அநுமதிக்கப்பெற்றுளர். ஆகவே, தாங்கள் கருதுகிறபடி ஆட்கள் இல்லை. அங்குள்ள டாக்டர் சுப்பு ரெட்டியார் பிஎச்.டி பட்டம்

பெற்றவர்; தரமான பன்னூல்களைப் படைத்தவர். அவரைக் கொண்டு காலத்தை ஓட்ட வேண்டியதுதான்" என்றும் (3) மதுரைப் பல்கலைகழகத் துணைவேந்தர் திரு. தொ.பொ.மீ எழுதியது : டாக்டர் மொ.அ.துரையரங்கனார், டாக்டர் T.E. ஞானமூர்த்தி, அச. ஞானசம்பந்தம், டாக்டர் க. ஆறுமுகனார் என்ற நான்கு பெயர்களைக் குறிப்பிட்டு "இவர்கள் தகுதியானவர்கள்" என்று எழுதிவிட்டார்; முகவரி கூடத்தரவில்லை.[15]

டாக்டர் ரெட்டி இவர்களைப்பற்றி விவரம் தருமாறு என்னைக் கேட்டார். (1) **டாக்டர் மொ.அ. துரைஅரங்கசாமி.** இவர் டாக்டர் பட்டம் பெற்றவர். ஓராண்டு பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. கற்பித்ததாக நினைவு. மதுரை தியாகராஜர் கல்லூரியில் இவர் பணியாற்றியபோது அங்கு எம்.ஏ. வகுப்பு நடைபெறவில்லை. சில ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இங்கும் எம்.ஏ. வகுப்பு இல்லை. அப்போதுதான் டாக்டர் பட்டம் பெற்றார். மதுரைப் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றபோது அங்குச் சில ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். வழிகாட்டும் அநுபவம் இல்லை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்ற குறிப்பு விளம்பரத்தில் இல்லை. (2) **டாக்டர் T.E. ஞானமூர்த்தி**; இவர் பூ.சா.கோ. கலைக்கல்லூரியில் (கோவை) பணியாற்றுபவர். இவர் ஓய்வுபெறுவதற்கு இன்னும் ஆறு திங்கள்களே உள்ளன. இவருக்கும் எம்.ஏ. கற்பித்த அநுபவம் ஆறு திங்களே. வழிகாட்டிய அநுபவம் இல்லாதவர். (3) **அ.ச. ஞானசம்பந்தம்;** இவர் பல்லாண்டுகள் பச்சையப்பன் கல்லூரியில் (சென்னை) பணியாற்றியவர். பத்து ஆண்டுகள் எம்.ஏ. வகுப்பு கற்பித்தாரா என்று சொல்ல முடியாது. ஆசிரியப் பணியைத் துறந்து சில ஆண்டுகள் சென்னை வானொலியிலும் சில ஆண்டுகள் "அரசு தமிழ் வெளியீட்டுக் கழகத்தில்" செயலாளராகவும் பணியாற்றியவர்.

---

15 டாக்டர் ஞானமூர்த்தியையும், டாக்டர் ஆறுமுகனாரையும் விண்ணப்பம் அனுப்புமாறும் தூண்டி விட்டதைப் பின்னர் அறிந்தேன். முன்னவர் விண்ணப்பம் அனுப்பினார்; பின்னவர் ஏனோ அனுப்பவில்லை.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டு காலமாகப் பணியாற்றுபவர். டாக்டர் பட்டம் இல்லாதவர். வழிகாட்டிய அநுபவமும் இவருக்கு இல்லை. (4) **டாக்டர் க. அறுமுகம்** : டாக்டர் பட்டம் பெற்றவர். எம்.ஏ. கற்பித்த அநுபவம், வழிகாட்டிய அநுபவம் இல்லாதவர். தில்லி பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவர். ஒருகால் இந்தி எம்.ஏ. மாணவர்கட்குத் தமிழ் கற்பித்த அநுபவம் இருக்கலாம். இவ்வாறு கூறித் துணைவேந்தரிடம் விடை பெற்றேன். அவரும் எனக்கு "நன்றி" தெரிவித்தார். டாக்டர் ரெட்டி விதிவரம்புகளில் நிற்பவர்; நேர்மையானவர்; மறைமுகமாகவோ, வஞ்சகமாகவோ ஒன்றும் செய்யார். உள்ளத்தில் "அழுக்கு" இருந்திருந்தால் இக்கடிதங்களை எனக்குக் காட்டியிரார் என்பது அடியேனின் கருத்து.

**நினைவு - 9** : பேராசிரியர் பதவிக்கும் பிறவற்றிற்கும் மூவரே விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தனர். ஒருவர் டாக்டர் T.E. ஞானமூர்த்தி; மற்றொருவர் G. தாமோதரன் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) மூன்றாவதாக அடியேன். வல்லுநர் குழுவில் டாக்டர் மு.வ.வும் திரு. தெ.பொ.மீயும் ஆகிய இருவரும் இருப்பதாக அறிந்தேன். டாக்டர் T.E. ஞானமூர்த்திக்கு மட்டிலும் பேட்டிக்குரிய அழைப்பு அனுப்பப் பெற்றது. அடியேனுக்குக் கடிதம் வரவில்லை. நியமனத்தில் ஒரு பெரிய சூழ்ச்சி இருப்பதாக எனக்குப் பட்டது. டாக்டர். T.E. ஞானமூர்த்தியைப் பேராசிரியராகவும், திரு. G. தாமோதரனைத் துணைப்பேராசிரியராகவும் அமர்த்தி அடியேனை இருக்கிற நிலையிலேயே (விரிவுரையாளராகவே) விட்டுவைக்க ஒரு சதித்திட்டம் இருப்பதாக ஊகிக்க முடிந்தது.

துணைவேந்தருக்குக் கடிதம் அனுப்பித் தனியே பேச இசைவு வேண்டினேன். இசைவு தரப்பெற்றது. உரையாடல் நடைபெற்றது. பேட்டியில் துணைவேந்தரின் ஆணவத்தின் கொடுமுடியைக் காணமுடிந்தது. அவரும் என்னைப் "**பனங்காட்டு நரி**" என்பதைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். நிர்வாகம் இழைக்கும் அநியாயத்தைப் படிப்படியாக எடுத்துக்காட்டி பேட்டி உரிமை மறுக்கப்பெற்றால் ஐதாரபாத் உயர்நீதி மன்றத்தில் உரிமை மனு (Writ petition) தாக்கல் செய்து நீதி பெறுவேன் என்று சொன்னதும்

ஆணவம்[16] போன இடம் தெரியவில்லை. தொ.பே.யை எடுத்து பதிவாளரிடம் கடிதம் தருமாறு சொல்லவே அவரும் (திரு K.S.S. சுப்பராஜு) நான் வெளியேறுவதற்குமுன் துணைவேந்தருக்கு முன்பதாகவே கடிதத்தை என்னிடம் தந்தது. சதிக்கோட்டையின் கதவு திறக்கப் பெற்றுவிட்டது. "பாதி வெற்றி" ஏழுமலையான் வழங்கினான் என்று நினைந்தவண்ணம் துறைக்குத் திரும்பினேன்.

**நினைவு - 10** : மூன்று நாட்கள் கழித்து பேட்டி நடைபெற்றது. இதில் துணைவேந்தர் டாக்டர் ரெட்டி மூன்று வினாக்களுடன் நிறுத்திக் கொண்டார். திரு. தொ.பொ.மீ. பொருத்தமற்ற வினாமாரிகளைத் தொடுத்து திணறவைக்க நினைத்தார். அவற்றிற்கெல்லாம் தக்க விடையளித்து அவரை மூக்கறுபடுமாறு செய்ய வேண்டி நேரிட்டது.[17] டாக்டர் ஞானமூர்த்திக்கு துணைப்பேராசிரியரின் ஊதியத்தில் மேற்படியில் உள்ள ரூ. 1250/= தருவதாக குறிப்பிட்டும் அவர் பேராசிரியர் பதவிக்குக்கீழ் ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். பல்கலைக்கழகம் அதைத் தருவதாக இல்லை. ஆகவே, என்னைச் சந்தித்துத் தாம் வரப்போவதில்லை என்று கூறியும் எனக்கு வாழ்த்து தெரிவித்தும் விடைபெற்றுக் கொண்டார். திரு. தாமோதரனைத் துணைப்பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் ஆக்க தெ.பொ.மீ. அரும்பாடு பட்டார். ஆனால் டாக்டர் மு.வ. "இஃது இறைவனுக்கே அடுக்காது" என்றும், இவ்வாறு செய்தால் தாம் அதற்கு மறுப்பு தெரிவித்து அதைத் தீர்மானத்தில் பதிவு செய்வதாகவும் கூறவே, அப்போக்கு கைவிடப்பெற்றது. தெ.போ.மீ.யின் உண்மைசொரூபம் குழுவினருக்குப் புலப்பட்டது. அடுத்தநாள் பல்கலைக்கழக அலுவலக உயர் அதிகாரிகள் அனைவரும் பொங்கி எழுந்து தம்முடைய வெறுப்பைப் புலப்படுத்திக் கொண்டதாகத் தகவல் கிடைத்தது. ஏழுமலையான் இறுதிவரையில் துணைநின்று துறைத் தலைவர் பதவி எனக்கே வரும்படி செய்தான். "திக்கற்றவருக்குத் தெய்வம் தானே துணை?";

16 நினைவுக் குமிழிகள் - பகுதி. 4 - குமிழி 208 காண்க.

17 நினைவுக் குமிழிகள் - நான்கு, குமிழி - 209 காண்க.

"வருவதுதானே வரும்" "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என் பொன்மொழிகள் பொய்யாகுமா? என்ன?

**நினைவு - 11 :** ஒருசில நாட்களில் புதிதாகத் தொடங்கப் பெற்ற தமிழ், சட்டம், மானிடஇயல், அரசியல் என்ற நான்கு துறைகட்கும் திறப்பு விழா எடுக்கப்பெற்று மிக்க கோலாகலமாக நடைபெற்றது. ஒரே மேடையில் நான்கு நிகழ்ச்சிகள் நடைபெற்றனவாக நினைவு. நான்கு அமைச்சர்கள் பங்கு கொண்டனர். திரு. விசய பாஸ்கர ரெட்டி, திரு. திம்மாரெட்டி ஆகிய இருவர்தாம் நினைவுக்கு வருகின்றனர். திரு. P. திம்மாரெட்டிதான் துறைகளைத் திறந்து வைத்தார். இதற்குக் கல்வெட்டுச் சான்றும் உள்ளது. டாக்டர் ஜகந்நாதரெட்டி எந்த விழாவாக இருந்தாலும் மிகச் சிறிய விவரங்களிலும் தம் கவனத்தைச் செலுத்தி மிகச் சிறப்புடன் பொலி யச் செய்வார். விழா அக்டோபர் 25 (1970) இல் நடைபெற்றது.

விழா நடைபெற்ற அன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக மகிழ்ச்சிக் கடலில் மிதந்திருப்பர். இஃது அவரவர் இருக்கும் நிலையைப் பொறுத்தது. புதிதாகத் தொடங்கப்பெற்ற நான்கு துறைகளில் தமிழ்த்துறையைத் தவிர மூன்று துறைகளும் **"சுகப்பிரசவத்தில்"** பிறந்தவை. தமிழ்த்துறை ஒன்றுதான், **ஆயுதப் பிரசவம்** போல் அமைந்தது. ஏறக்குறைய பத்தாண்டுகள் (குழந்தை கருவில் வளர்வதற்குப் பத்துத் திங்கள் தான்) சென்னைத் **"தமிழ்ப் பயணமும்"** ஏறக்குறைய இக்காலத்தில் எடுத்த 100 நாட்கள் விடுப்பும், சில ஆயிரம் ரூபாய் சொந்தப்பொறுப்பில் ஏற்ற செலவும், தலைமைச் செயலகத்தில் வட்டமிட்டதும், "கண்மூடி மௌனியாக நிற்கும் ஏழுமலையானின்" திருவுள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். "படமுடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போதும்" என்ற மனநிலை ஏற்பட்டபோது எம்பெருமான் திருவருள் சுரந்தது. ஒருமுறை மானியம் பெறுவதற்குத் தமிழக அரசுக்கு விண்ணப்பம் அனுப்ப மறுத்ததும் (பதிவாளர் K.S.S சுப்பராஜு) அப்போது துணைவேந்தராக இருந்த டாக்டர் V.C. வாமன்ராவ் அனுப்பச் செய்ததும், (பெரும் புலவர் மு.ரா. பெருமாள் முதலியாரும்,

திரு. இராசாக் கண்ணனாரும் தமிழ் வளர்ச்சிப் பிரிவில் துணைச் செயலர் நிலையில் இருந்தவர்கள்) சிறிதும் உதவாது "வளவள" என்று கைவிரிப்புச் செய்ததும்,[18] கல்வித் துறையில் உதவிச் செயலராகப் பணியாற்றிய தமிழ்ப் பற்று மிக்க திரு. கோ. முத்துப்பிள்ளை என்மீது கழிவிரக்கம் கொண்டு உதவ முன்வந்ததும், ஒல்லும் வகையெலாம் உதவியதும், பேரறிஞர் அண்ணா மரணப்படுக்கையில் இருந்தபோது அவருக்குத் தனிச் செயலராக இருந்த திரு சொக்கலிங்கம் IAS உண்மைநிலையை விளக்கியதும், எப்படியும் கிடைக்கும் என்று உறுதி கூறியதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் கருணாநிதி காலத்தில் மானியத்திற்கு ஆணை பிறப்பிக்கப் பெற்றதும் ஒன்றன்பின் ஒன்றாகப், படலம் படலமாக, விழாக் கொட்டகையின் முன்னர் அமர்ந்திருந்த என் மனத்தில் எழுந்தன. விழாக் கொட்டகையில் அமர்ந்து கொண்டு திரு. P. திம்மாரெட்டி துறைகளைத் திறந்து வைத்தபோது கண்கள் குளமாயின! இரண்டு கன்னங்களிலும் நீர்வழியத் தொடங்கியது. அருகிலிருந்த அன்பர்கள் "என்னவாயிற்று? ஏன் அழுகின்றீர்கள்?" என்று வினவ, "ஒன்றுமில்லை; இஃது ஆனந்தக் கண்ணீர்!" என்று மறுமொழி பகர்ந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

மேற்கு முகமாக மேடையை நோக்கி அமர்ந்திருந்தபோது வடபுறமாகப் பார்த்தபோது வேங்கடவெற்பு என் கண்ணில் படுகின்றது. "திருவேங்கடமாமலை, ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே"[15] என்ற நம்மாழ்வார் வாக்கு நினைவிற்கு வருகின்றது. உடனே என் மனம் தேசிகனின் பாசுரத்தில் ஈடுபடுகின்றது.

"கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு;
கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;
திண்ணமிகு வீடென்னத் திகழும் வெற்பு;
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் திகழும் வெற்பு;

18 "நான் இதற்கு உதவப் போவதில்லை" என்று பல இடங்களில் பறை சாற்றியதும் என் காதில் விழத்தான் செய்தது.

19 திருவாய் 3.3 : 8

புண்ணியத்தின் புகலிதெனப் புகழும் வெற்பு;
பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;
வேங்கடவெற்பென விளங்கும் வேத வெற்பே"[20]

நினைவு - 12 : டாக்டர் ஜகந்நாத ரெட்டி மிக நன்றாகப் பேசுபவர். எந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும் பேசவேண்டிய பொருளை நன்கு சிந்தித்து, தேவைப்பட்டால் நூலகத்தில் பொருத்தமான நூல்களைப் பெற்று, அவற்றை நன்றாகப் பயின்று பொருளை நிரல்பட அமைந்துக் கொண்டுதான் பேசுவார். தம் வாழ்க்கையில் பல்வேறு பொறுப்பில் இருந்தபோது பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசிய பேச்சுகளையெல்லாம் (பெரியவை சிறியவை என்று வேறுபாடு கருதாமல்) தொகுத்துப் பாதுகாப்புடன் வைத்திருந்தமையே. அவர்தம் தனித்தன்மையைப் - பொறுப்பைக்-காட்டுகின்றது. இப் பேச்சுகளைத் (52) தொகுத்து Challenges in Higher Education என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார் (1972). இந்த நூல் அவர்தம் கல்விசார்ந்த அக்கறையைக் (Academic interest) காட்டுகின்றது. பல்கலைக் கழக வெளியீடாக வந்த இதனை அவருக்குப் பல்வேறு நிலைகளில் பணியாற்ற வாய்ப்பையும் வசதிகளையும் நல்கிய "வேங்கடத்து அப்பனுக்கு"ப் பக்திப் படையலாக்கியுள்ளார். அந்தப் பெருமானின் திருவுருவப் படம் நூலினை அலங்கரித்து அதற்குப் பொலிவு தருவதுடன் நூலாசிரியருக்குத் திருவருளையும் பொழிந்து கொண்டிருக்கின்றது.

இதனுடைய மதிப்புரை இந்து ஆங்கில நாளிதழில் (29.10.72) வெளிவந்துள்ளது. மதிப்புரை வழங்கியவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரி வேதியியல் பேராசிரியர் S.V. அனந்த கிருஷ்ணன்; சிறந்த கல்வியாளர் என்ற பெரும் புகழ் பெற்றவர். மதிப்புரை "Limitations in Higher Education" என்ற தலைப்பில் வெளிவந்தது. இதனை வெளியிடுவதிலும் திருத்தம்செய்தலிலும் அச்சேறியபொழுது அச்சுப் படிவங்களைச் சரிபார்ப்பதிலும் பொறுப்பேற்றுக் கொண்டவர்கள்

20 தே.பி. 82 (அதிகார சங்கிரகம் - 43)

இரு ஆங்கிலப் பேராசிரியர்கள். இருவரும் பதிப்பிக்கும் அநுபவம் இல்லாதவர்கள். இதனை மதிப்புரை வழங்கியவரே குறிப்பிட்டுள்ளார்! அனைத்தையும் தொகுத்து வெளியிடுவதற்குப் பதிலாக தக்கமுறையில் ஆய்ந்து தகுதியில்லாதவற்றை நீக்கி தகுந்தவற்றை மட்டிலும் வெளியிட்டிருந்தால் நூல் சிறப்பாக அமைந்திருக்கும் என்றும், இலக்கணப் பிழை, வாக்கியப் பிழை மலிந்து காணப் பெறுகின்றன என்றும் சுட்டியுள்ளார். இவற்றைத் தவிர்த்து நோக்கினால் டாக்டர் ரெட்டியின் பொறுப்பிற்கு எடுத்துக்காட்டான நினைவுச்சின்னமாகத் திகழ்கின்றது இந்நூல் எனலாம்.

**நினைவு - 13 :** டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி காலத்தில் தமிழ்த் துறையின் ஆதரவில் "திருக்குறள் கருத்தரங்கு"[21] (1973-74); "சிலப்பதிகாரக் கருத்தரங்கு"[22] (1974-75) என்ற இரண்டு கருத்தரங்குகளை நடத்தினேன். சிலம்புக் கருத்தரங்கிற்கு மாண்புமிகு கல்வி - நிதியமைச்சர் திரு. V.R. நெடுஞ்செழியனை அழைக்க நினைத்தேன். என் கருத்தைத் துணைவேந்தரிடம் அறிவித்தேன். அவர் அதற்கு இணங்கவில்லை. தமிழ்த்துறை தொடங்குவதற்கு முன் தமிழக அரசின் மானியம் வந்த நாள் தொட்டு (செப்டம்பர் 1969) - துறையைத் தொடங்கி வைக்க நாவலரைத்தான் அழைக்க வேண்டும் என்று பல கூட்டங்களில் பறைசாற்றிக் கொண்டிருந்த துணைவேந்தரின் உள் எண்ணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது அவரையும் அறியாமல் அவர்மனம் செயற்படுகின்றது என்பது எனக்குப் புரிந்தது.

இதனை எழுதும்போது எல்.டி. பயின்றபோதும், அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோதும் உளவியல் நூல்களில் என் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கற்றபோது மனநிலைகளைப்பற்றிப் படித்த ஒரு கருத்து நினைவிற்கு வருகின்றது. நீண்ட காலமாக மக்கள் உளத்திலுள்ள நனவுப் பகுதியை மட்டிலுமே "உளம்" என்று கருதிவந்தனர். இன்று "ஃபிராய்டு" என்ற

21. டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு (கட்டுரை - 9) காண்க.

22. நினைவுக்குமிழிகள் - பகுதி - 4 குமிழி 209 காண்க.

உளவியலறிஞர் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக இக்கருத்து முற்றிலும் மாறிவிட்டது. நனவுநிலை (Conscious level), நனவடிநிலை (Sub - Conscious level) நனவிலிநிலை (Unconscious level) என்று உளம் முப்பகுதிகளாகச் செயற்படுவதாகக் கூறுகின்றார். ஃபிராய்டு, இக்கருத்தினை உளவியலறிஞர்கள் அனைவரும் ஒரு மனத்துடன் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த உளநிலைகளை விளக்குவதற்கு வில்லியம் ஜேம்ஸ் (William James) என்ற உளவியலறிஞர் ஓர் அரிய உவமையைக் கையாளுகின்றார். 'வடபெருங்கடலினின்றும் (Arctic ocean) பெரும் பனிக்கட்டி மலைகள் விடுபட்டு அட்லாண்டிக் மாபெரும் கடலில் புகும். இம்மலைகளின் கொடுமுடிகளின் எட்டில் ஒரு பகுதியே புறத்தே புலனாகும். பனிக்கட்டி மலையொன்றினை முழு மனத்துடன் ஒப்புமைப்படுத்திக் கூறும்பொழுது சிறிதளவு தோன்றும் கொடுமுடியை நனவு உள்ளத்தோடு ஒப்புமை கூறலாம். அங்ஙனம் நிலையாகத் தோன்றும் பகுதிக்குக் கீழேயுள்ள சிறு பகுதி சுற்றியுள்ள அலைவீச்சினால் ஓரளவு தோன்றியும் வரும். இதனை நனவடி உளத்துடன் ஒப்புமை கூறலாம். இதற்குக் கீழாக பெருமலைபோல் கிடக்கும் பகுதி தாக்கினால் பெருங்கப்பல்களும் அச்சுவேறு; ஆணிவேறாகச் சிதையக் காண்கின்றோம். இதனை நனவிலி யுளத்திற்கு ஒப்பிடலாம். நனவுளம் முழு உளத்தில் கோடியில் ஒரு பங்கே என்றும் கூறிவிடலாம். புறக்காற்றாலும் பிறவற்றாலும் இந்தப்பனிக்கட்டி மலை தலைகீழாகப் புரள்வதும் உண்டு. அதுபோலச் சில சமயம் நனவிலியுளமும் நனவு உளமாக மாறுவதும் உண்டு. இத்தகைய உளமாற்றம் சிறுகச் சிறுகவும் எழலாம்; திடீர் என்றும் நேரிடலாம். எப்படிப் பனிக்கட்டிமலையில் (Ice-berg) பெரும்பகுதி புறத்தே நீரின் அகத்தே ஆழ்ந்துள்ளதோ, அதே போன்று நனவிலியுளமும் நனவு உள்ளத்திற்கு அடிப்படையாக உள்ளது. புறத்தே தோன்றும் பனிக்கட்டியின் பகுதியும், நீரில் ஆழ்ந்து கிடக்கும் அதன் அடிப்பகுதியும் ஒரே மலையின் இருபகுதிகள் என்பது வெளிப்படை. அங்ஙனமே நனவு உளமும், நனவிலி உளமும் ஒரே உள்ளத்தின் இருபகுதிகளாகும் என்பது கருதத்தக்கது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் டாக்டர் ரெட்டியின் உளத்தைக் காண என் மனம் எண்ணியது. தொடக்கக் காலத்தில் நாவலரை ஆதரித்த அவரது உள்ளம் அவர் இரண்டாவது காலத்துணை வேந்தர் பதவியின் போது நாவலரை ஆதரிக்காததற்குக் காரணம் என்ன? தெலுங்குமொழி பேசுபவராகவும் தெலுங்குமொழி பயின்றவராகவும் உள்ள டாக்டர் ரெட்டி தமிழகத்தில் பிறந்தவர் (திருத்தணி வட்டத்திலுள்ள வீரணல்லூர்); தமிழகத்தில் வளர்ந்தவர்; மருத்துவக் கல்வி சென்னையில் (M.B.B.S., M.D) பயின்றவர். போரில் பணியாற்றிய சலுகையினால் விசாகப் பட்டினம் குண்டூர் மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் வாய்ப்பு பெற்றவர். சில ஆண்டுகள் பணியாற்றித் தம் திறமை, நேர்மை, ஒழுங்கு முறை இவற்றை நிலை நாட்டியவர். புதுச்சேரியில் மைய அரசு ஜவஹர்லால் மருத்துவர் கல்வி ஆராய்ச்சிநிலையம் தொடங்கினபோது இவருடைய திறமை முதலியவற்றுடன் போர்ப்பணி அநுபவமும், கைகொடுத்து உதவியதால் அதன் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்; (திரு. K.N. ராவ் அவர்களின் ஆசியால்). அதன் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் அரும்பாடுபட்டு உழைத்தவர். ஆந்திரத்தில் பணியாற்றியபோது சில அரசியல்வாதிகள், பெரியவர்கள் இவர்களின் நட்பைப் பெற்றிருக்கலாம். இவரது திறமையும் நேர்மையும் அவர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கலாம். இதனால் துணைவேந்தர் பதவி திருப்பதியில் கிடைத்தது. அதனை அற்புதமாக வகித்து அரும்பணி ஆற்றினார். இக்காலத்தில் அவர் தம்மை ஆந்திரர் என்று காட்டிக் கொள்ளும் போக்கில் அரசியல்வாதிகள் பேசும் பாணியில் பேசி வந்ததை என்னால் காண முடிந்தது. கால தேச வர்த்தமானத்தின் காரணமாகப் புதிய துறைகள் நான்கையும் (தமிழ்த்துறை உட்பட) ஆந்திர அமைச்சர் ஒருவர் திறந்து வைத்தார். இக்காலத்தில் சில ஆந்திர அரசியல்வாதிகளின் "விருப்புக் கானத்திற்குச்" சரியாகத் தாளம்போடாது நேர்மையான போக்கில் செயற்பட்டதால் அவர்களது விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம்.

முதலில் துணைவேந்தர் பதவி சிரமம் இல்லாமல் வந்தது. இரண்டாவது. காலப்பகுதி (மூன்றாண்டுகள்) அது கிடைக்க பகீரதப்

பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. திரு பலராம ரெட்டியைப் (ஆட்சிக்குழு உறுப்பினர்) பார்க்கும் போதெல்லாம் "திரு A.C. சுப்பா ரெட்டியைப் (துணை முதல்வர்) பார்த்துப் பேசினீர்களா?" என்று நச்சரித்ததை நான் அறிவேன். தவிர, திரைமறைவில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பிறரும் "கிசுகிசுத்தது" என் காதிற்கும் எட்டியது. இப்போது தெலுங்கர்களை அதிகமாகப் போற்றவில்லை; அவர்கள்மீது அன்பும் இல்லை என்பது அவரது நடவடிக்கைகளால் புலனாயிற்று. அவரது நனவிலி உளத்தில் என்ன எண்ணம் ஓடியது என்பதை டாக்டர் மாத்ருபூதம் (அண்ணாநகர்) என்ற உளவியல் மருத்துவரால்தான் உறுதி செய்ய முடியும். இந்தக் குழப்பநிலையிலிருக்கும்போதுதான் நாவலரை அழைக்க இணங்காதிருந்தார். நானும் பொறுமையாகத் தேதிகளைத் தள்ளி வைத்துக் கொண்டே அவர் படம் எடுத்து ஆடுவதற்கேற்ப மகுடி ஊதி என் கருத்துக்கு இசைவு பெற்றேன். சென்னைக்கும் காவடி எடுத்து நாவலரை இணங்க வைத்தது பெரும்பாடாய்ப் போய்விட்டது. அவரைக் கொண்டு கருத்தரங்கும் தொடங்கப் பெற்று இனிதாய் முடிந்தது.

..... ..... .....

இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். டாக்டர் V.C. குழந்தைசாமியை (அப்போது அவர் தொழில்துறைக் கல்வி இயக்குநர்)[23] துணை வேந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தபோது அவர் "அந்த அறிமுகத்தைச் சுவைக்க வில்லை" என்பது அவர் முகத்தில் தெரிந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? டாக்டர் V.C. குழந்தைசாமி உரை அற்புதமாக அமைந்தது. ஆராய்ச்சிக் கருத்துகள் நிரம்பி வழிந்தன. பேச்சின் பளிச்சிட்ட சொல்வளம் (Diction) வாக்கிய அமைப்பு, ஆங்கிலத்தை மிக எளிதாகக் - லாவகமாகக் - கையாண்ட முறை இவை யாவும்

23 திரு. G. லீலா கிருஷ்ணனால் (S.V. கலைக்கல்லூரி தாவர இயல் பேராசிரியர்) அறிமுகமானவர். கருத்தரங்கில் (இளங்கோ படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தியவர்)

ஆங்கிலப் பேராசிரியர்களே மூக்கில் விரலை வைத்துப் பாராட்டும் முறையில் அமைந்தது. பேச்சு முடிந்து டாக்டர் குழந்தைசாமி இருக்கையில் அமருகையில் துணைவேந்தர் அவர் கையைக் குலுக்கினபோது, அவர் கையையே தனியாகப் பிரித்துவிடுவார் போலிருந்தது; அவ்வளவு வலிவுடன் குலுக்கினார். டாக்டர் குழந்தைசாமியின் உரை தனிச்சிறப்புடன் திகழ்ந்ததை அனைவரும் பாராட்டினர். நான் துணைவேந்தருக்குக் குழந்தைசாமியை அறிமுகம் செய்தபோது சாதாரணமாக மலராது இருந்த அவரது முகம் உரைமுடிந்தபோது மலர்ச்சியுடன் - ஒளியுடன் - ஒளிர்வதைக் கண்டு மகிழ்ந்தேன். நன்றாகப் பேசும் துணைவேந்தரின் மனம் நன்றாகப் பேசின டாக்டர் குழந்தைசாமியின் பேச்சால் ஈர்க்கப்பட்டதில் வியப்பில்லை. பாம்பின் கால் பாம்பு அறியுமன்றோ?"

**நினைவு - 14 : "அம்புலிப் பயணம்"** என்ற நூலை (டிசம்பர் 1973) வெளியிட்டேன். இதனை டாக்டர் D. ஜகந்நாத ரெட்டிக்கு,

**நன்னிரு ளிடையே முளைத்தசெஞ் சுடர்போல்**
**நலமுறத் தோன்றிய சீலன்;**
**ஒள்ளிய அறிவின் நற்பய னாய**
**ஒழுக்கமும் திறமையும் பெற்றோன்;**
**தெள்ளிய உளத்தன்; பல்கலைக் கழக**
**செவ்விய இதயமே போல்வான்;**
**விள்ளுறும் புகழான்; சீர்செக நாத**
**வேந்தனுக் குரியதிந் நூலே**

என்ற அழகிய பாடலால் அன்பு படையலாக்கி மகிழ்ந்தேன். இந்நூல் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையின் ஆதரவில் நடைபெற்ற ஒரு வெளியீட்டு விழாவில் (ஏப்பிரல் - 1974) இதன் முதற்படியை இவரது துணைவியார் திருமதி இலக்குமி - ஜகந்நாத ரெட்டி பெற்றுக் கொண்டார்கள். இந்த விழாவில் டாக்டர் எம். அனந்த சயனம் அய்யங்கார் (முன்னாள் சபாநாயகர், முன்னாள் பீகார் மாநில ஆளுநர்) தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் **M.K.** இராமகிருட்டிணன் (பதிவாளர்) நூலை வெளியிட்டார்.

**நினைவு - 15** : இரண்டாவது முறை டாக்டர் D. சகந்நாத ரெட்டியின் பதவி எளிதாக வரவில்லை; பல்வேறு சாணக்கியங்கள் செய்து பார்த்தார்; பருப்பு வேகவில்லை. இதனால் மனத்தளர்வுற்ற துணைவேந்தர் இலேசான மாரடைப்பு நோயால் தாக்கப்பட்டு ஒரு திங்கள் படுக்கையில்கிடந்தார். நான் சென்று பார்த்து ஆறுதல் கூறி வந்தேன். தெய்வ சங்கற்பத்தினால் மீண்டும் மூன்றாண்டுக் காலப் பதவி வந்தது. விரைவில் உடல்நிலையும் தேறிப் புத்துயிர் பெற்றார்; புத்துணர்ச்சியுடன் இயங்கிச் செயற்பட்டார். ஒவ்வொரு செயலையும் "தவம்" எனக்கருதி பக்தியுடன் செய்துவந்தார்.

உளவியல் துறையில் பல்லாண்டுகள் விரிவுரையாளராகவும், துணைப்பேராசிரியராகவும் பணியாற்றிய டாக்டர் எஸ். நாராயண ராவுக்கு பதவி உயர்வு தராமல் "இழுபறியாக" வைத்திருந்தார் டாக்டர் ரெட்டி. இதனால் டாக்டர் ராவ் மனம் உடைந்து போனார். இதய நோயால் கடுமையாகத் தாக்கப்பெற்று ஒன்றிரண்டு மாதங்கள் படுக்கையாகக் கிடந்தார். துணைவேந்தர் டாக்டர் ரெட்டி இதனை அறிந்தார். உடல் நோயைத் தெரிந்து கொள்ளும் அறிவு படைத்தவர் - இவர் நோய்க் கூறுமருத்துவர் (Pathologist) உளநோய்க் கூறுகளையும் அறிந்திருக்க வேண்டும். வாழ்க்கையில் நல்ல அநுபவம் மிக்க அறிஞர்களும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்ணுறுங்கால் இவற்றின் மூலகாரணத்தை நன்கு அறியமுடியும் போது மருத்துவத்துறை அறிஞருக்கு இதனை, அறியமுடியவில்லை என்று சொல்லுதற்கில்லை. அறிந்து கொண்டார்; இல்லம் சென்று டாக்டர் ராவைப் பார்த்து வந்தார். சில திங்களில் டாக்டர் ராவுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. உள்ளம் திருப்தி அடைந்தது; நோயும் நீங்கி விரைவில் குணமும் அடைந்தார். மனத்திண்மை இல்லாதவர்கள் சிறிய அதிர்ச்சியாலும் மனம் உடைந்து போவர் என்பதற்கு டாக்டர் ரெட்டியும், டாக்டர் ராவும் நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றனர்.

உள்ளத் தூய்மையும் நிர்வாகத் திறமையும் மிக்க டாக்டர் ரெட்டியின் காலத்தில் அதிகமாகத் துன்பப்பட்டவன் அடியேன். இதனை ஏழுமலையான் பார்த்துக்கொண்டுதான் இருந்தான்,

பல்கலைக்கழக வாழ்க்கையையே ஒரு தவவாழ்க்கையாகக் கொண்டு செயற்பட்டதால் இத்தொல்லைகளையெல்லாம் தாங்குவதற்கேற்ற ஆற்றலை நல்கி உய்வித்தான். துன்பப்பட்டது என் நுகர்வினையால் (பிராரர்த்தத்தால்) வந்தது என்ற உண்மையையும் அவனே என்னை உணரச் செய்ததால் என்னிடம் தாக்குப் பிடிக்கும் ஆற்றலும் வளர்வதற்கு அதுவே காரணமாயிற்று. இதனால் பதவி உயர்வு பிரச்சினை என்னை ஒன்றும் செய்யவில்லை.

ஆனால் வேறொரு துன்பத்தை அநுபவிக்க நேர்ந்தது. டாக்டர் மு.வ. திருநாடு அலங்கரித்தார் (டிசம்பர் 10, 1974). என் உடல்நிலை சிறிது கெட்டிருந்தும் 10-ஆம் நாள் நிகழ்ச்சிக்குச் சென்று வந்தேன். உணவு கொள்ள முடியவில்லை; மோர் சோறு, பாயசம், கத்தரிக்காய் கூட்டு மட்டிலும் உண்டேன். கூட்டு சுவையாக இருந்ததால் சற்று அதிகமாகவே அதனை உண்டேன். ஊர் திரும்பியதும் கடுமையான வயிற்றுப்போக்கு நிற்கவில்லை. மு.வ.வைத் தொடர்ந்து வைகுண்டம் சென்றுவிடுவதுபோன்ற நம்பிக்கையும் தோன்றிவிட்டது. (பூச்சி மருந்து அடித்ததால் ஏற்பட்டதன் விளைவு என்பது பின்னர் தெரிந்தது).

தமிழ்த்துறை மாணவர்கள் நன்கு கவனித்துக் கொண்டனர். பல பேராசிரியர்கள் வந்து பார்த்தனர்; அடிக்கடி வந்து சென்றனர். திருமதி இலக்குமி ஜகந்நாத ரெட்டி இருமுறை பழங்களுடன் வந்து பார்த்து துணிவூட்டிச் சென்றார். படுக்கையாகக் கிடந்த டாக்டர் நாராயணராவைப் பார்க்கச் சென்ற டாக்டர் ரெட்டி என்னைப் பார்க்க வரவில்லை. "இவன் ஒழிந்தால் டாக்டர் தாமோதரனுக்குப் போட்டி ஒழியும்; பேராசிரியராக்கி விடலாம்" என்று நினைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. டாக்டர் ரெட்டி வரவேண்டும் என நான் நினைக்கவில்லை. அவரது பாரபட்சத்தைக் காட்டவே இதனை எடுத்துக் காட்டினேன். எல்லாவற்றையும் இறைவனுக்குவிட்டு விட்ட என்னைப் பார்க்க யார் வந்தால் என்ன? வாராது போனால் என்ன?

இந்த நிகழ்ச்சிக்குச் சற்று முன்னேரோ பின்னரோ டாக்டர் ரெட்டியின் 61-ஆம் பிறந்த ஆண்டு தொடங்கியது. இதனையொட்டி

திருமலையில், இறைவனுக்குக் கலியாண உற்சவமாகக் கொண்டாடினார். திருமதி இலக்குமி ஜகந்நாத ரெட்டி பிரசாதம் (இலட்டு, திருமால் வடை) அனுப்பி வைத்தார்கள். நான் துணைவேந்தர் இல்லம் சென்று அவரை வணங்கி வந்தேன்.

**நினைவு - 16 :** பல்வேறு முறைகளில் பல்கலைக்கழக வளர்ச்சியில் பெரும் பணியாற்றிய துணைவேந்தர் டாக்டர் ரெட்டி ஆசிரியர்களின் நியமனத்தில் காட்டிய கிறுக்குத்தனத்தால் - தான்றோன்றித்தனத்தால் - அவரது புகழ் கோபுரம் தரை மட்டமாகச் சரிந்து விழுந்தது. இது பல்லோருக்கும் வருந்தத்தக்க செய்தியாக அமைந்தது. தமிழ்த்துறை, உளவியல்துறை ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் முன்னர்க் குறிப்பிடப் பெற்றன.

**(1) இயற்பியல் துறை :** (அ) இத்துறையின் பேராசிரியரின் பதவி தனியாகப் பெரிய எழுத்துகளில் இரண்டு பத்திகளைச் சேர்த்த இடத்தில் விளம்பரப் படுத்தப் பெற்றது.[24] இது நியாயமன்று என்பது வெள்ளிடை மலை. துறையிலுள்ள டாக்டர் P. ஜெயராம ரெட்டி, டாக்டர் S.V.J. இலட்சுமணன் ஆகிய இருவர் மட்டிலுமே விண்ணப்பித்திருந்தனர். பேட்டி நடைபெற்ற மறுநாளே ஆட்சிக்குழுக் கூட்டம் நடைபெற ஏற்பாடு. டாக்டர் இலட்சுமணன் ஐதராபாத் உயர்நீதி மன்றத்தில் ரிட் வழக்கு கொடுத்தார் ஆட்சிக் குழுவின் நிகழ்ச்சி நிரலின் முதற்பொருள் இயற்பியல் பேராசிரியர் நியமனம், கூட்டத்தில் இந்தப் பொருள் முடிவு செய்யப் பெற்றதும் டாக்டர் P. ஜெயராம ரெட்டி நியமிக்கப் பெற்றதாக ஆணை தட்டச்சு செய்யப்பெற்று பதிவாளர் கையெழுத்தாகி ஜெயராம ரெட்டியிடம் சேர்ப்பிக்கப் பெற்று, அவரும் பணியில் சேர்ந்து விட்டார். எந்தப் பல்கலைக்கழகத்திலும் இப்படி அசுர வேகத்தில் நியமனம் நடைபெற்றிராது. உலகம் கேட்டிராத முறை இது; ஆணவத்தின் கொடுமுடியில் நடைபெற்ற செயல் இது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற வழக்காகி விட்டது. பதவி தகுதியுள்ளவருக்குத்தான்

24 பல துறைகளில் பதவிகள் காலியாக இருந்தன. அவற்றை விளம்பரம் செய்யாமல் இதற்கு மட்டிலும் என்ன அவசரம்?

வழங்கப்பெற்றது. மற்றொருவரும் தகுதியுடையவரே. மரபுப்படி பதற்றமில்லாமல் இயல்பாக நடைபெற வேண்டியது இது. அரசியல் வாதிகள் கூட அசுரவேகத்தில் இத்தகைய நீதிக்குப் புறம்பான செயலில் இறங்கியிருக்க மாட்டார்கள் என்பது பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முதிய பேராசிரியர்களின் கருத்து. பல்கலைக்கழக நிர்வாகத்தில் மக்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலைமையை அடாத பழியை ஏற்படுத்தி விட்டார் துணைவேந்தர். இந்த அதிர்ச்சி தரும் நடவடிக்கையில் காரியம் வரம்பு மீறி போய்விட்டது என்று கண்டரிட் விண்ணப்பம் போட்ட டாக்டர் இலட்சுமணன் ரிட் மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டது சோகநாடகக் (Melodrama)களை தட்டும்படி செய்துவிட்டது. பல்கலைக்கழக வளாகத்திலேயே இலட்சுமணன் கோழையாகக் காட்சி அளித்தார்.

(ஆ) இத்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய டாக்டர் M. இராதாகிருட்டிணன் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். இவர் துணைப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். தனிச் சிறப்புக்கூறு (Specialization) பற்றி ஏதோ ஐயத்தை எழுப்பிக் கொண்டு (துறைத் தலைவர் பீம்சேனாச்சாரின் கைங்கரியம் இது) இவருக்கு பேட்டியே மறுக்கப்பெற்றது. ஆனால் ஒன்றிரண்டு ஆண்டுக்குள் சென்னைப் பல்கலைக்கழகக் கோவைமையத்தில் இவர் விரிவுரையாளர் பதவியிலிருந்து நேராக பேராசிரியர் பதவியில் நியமனம் பெற்றார்; பேராசிரியர் ஊதியத் திட்டத்திலும் இரண்டு உயர்வுப் படிகளை (Increments) பெற்றது எல்லோரையும் வியக்க வைத்தது. தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு காலத்தில் இது நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(2) தத்துவத்துறை : இத்துறைக்குப் பேராசிரியர் பதவிக்கு ஏற்பட்ட நியமனக் குழுவில் உளவியல் பேராசிரியர் ஒருவர் உறுப்பினராக அமர்ந்துவிட்டார். இது தவறாக நிகழ்ந்துவிட்டது. பேட்டியும் நிகழ்ந்து விட்டது. இத்துறையில் துணைப் பேராசிரியராக இருந்த டாக்டர் (திருமதி) சரசுவதி சென்ன கேசவன் என்பாரும் ஒரு விண்ணப்பதாரர். குழுவில் உளவியல் பேராசிரியரைக் கண்ட

அம்மையார் இதனை எதிர்த்துப் பல்கலைக்கழகத்திற்கு எழுதினார். தவற்றினை உணர்ந்தது பல்கலைக்கழகம். மீண்டும் ஒரு குழு அமைத்துப் புதிதாகப் பேட்டியும் ஏற்படுத்தியது. தவறுதலைச் சுட்டிக்காட்டிய அம்மையாருக்கும் இப்பதவி கிடைத்தது. டாக்டர் சகந்நாத ரெட்டி தவறுதலுக்கு வருந்தியிருக்க வேண்டும்.

(3) **வரலாற்றுத் துறை** : இத்துறையில் பணியாற்றிய டாக்டர் V.M. ரெட்டிக்கு ஒன்பதரை யாண்டுகள்தாம் எம்.ஏ.க்குக் கற்பித்த அநுபவம் இருந்தது. வல்லுநர் குழு இவரைப் பேராசிரியராகத் தேர்ந்தெடுத்தது. ஆனால் ஆறு திங்கள் கழித்துதான் (அதாவது பத்தாண்டுகள் அனுபவம் பெற்ற பிறகுதான்) இவருக்குப் பேராசிரியர் பதவிக்கு ஆணை அனுப்பப் பெற வேண்டும் என்பது குழுவின் குறிப்பு. ஆனால் ஆட்சிக்குழு இத்தீர்மானத்தைச் செல்லும்படியாக்க வில்லை. திரும்பவும் விளம்பரம் செய்து இப்பதவி நிரப்பப் பெற வேண்டும் என்ற குறிப்பையும் தந்தது. டாக்டர் ஜகந்நாத ரெட்டி இவருக்குப் பேட்டியே தந்திருக்கக் கூடாது. என் நியமனத்தில் பேட்டிக்குக் கடிதம் அனுப்பாமல் அல்லவா தொல்லை கொடுத்தார்? திரும்பவும் விளம்பரம் செய்யப்பெற்றபோது திரு. V.M. ரெட்டி விண்ணப்பித்துப் பதவியையும் பெற்றார்.

(4) **இந்தித் துறை** : இந்தத் துறையில் விரிவுரையாளர் நியமனத்திற்குத் தில்லிப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் குழுவில் இடம்பெற்றிருந்தார். பொருத்தமில்லாத ஒருவருக்கு நியமனம் தரவேண்டுமென்று டாக்டர் ரெட்டி வற்புறுத்தினார். இது அமைச்சர் ஒருவரின் பரிந்துரை என்றும் குறிப்பிட்டார். உறுப்பினர் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. தீர்மானத்தில் மறுப்புக் குறிப்பு வைப்பதாகக் கூறவே, ஒருவரையும் குழு நியமிக்கவில்லை. மீண்டும் விளம்பரம் செய்து தில்லிப் பேராசிரியரைக் குழுவில் இல்லாமல் செய்து டாக்டர் ரெட்டி நினைத்தவருக்கே பதவி வழங்கினார். இதுவும் வல்லான் வகுத்த வாய்க்காலாயிற்று.

(5) **வணிகத்துறை** : இத்துறையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தவர் டாக்டர் ஒ.ஆர். கிருட்டிணசாமி என்பவர்.

இவருக்குப் பத்தாண்டுகட்கு மேல் எம்.ஏ. கற்பித்த அநுபவம் இருந்தது; சில ஆண்டுகள் கல்லூரி முதல்வராகவும் இருந்தவர். பேராசிரியர் பதவிக்கு வந்த இவரை மடக்கி இரண்டாண்டுகள் பல்கலைக்கழக அநுபவமாவது இருக்கவேண்டும் என்று கூறித் துணைப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் நியமனம் செய்தார் துணைவேந்தர். அவரும் இரண்டாண்டுகள் நிறைவு செய்வதற்கு முன்னர்ப் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் "டீன்" (Dean) ஆகவும் நியமனம் பெற்று வெளியேறிவிட்டார். புள்ளியியல் துறையையும் இவர் விட்டு வைக்கவில்லை. இதில் துன்பப்பட்டவர் டாக்டர் M.P. சாஸ்திரி என்பார்.

(6) **விலங்கியல் துறை** : இத்துறையில் இவர் மேற்கொண்ட முறை அடாதது. இத்துறையில் நல்ல அநுபவம் பெற்ற டாக்டர் **K.S.** சுவாமிக்கும் (துணைப் பேராசிரியர்) பதவி உயர்வு தரவில்லை. ஆனால் அவரை அப்படியே வைத்திருந்து பிறகு பதவி உயர்வு தந்திருக்கலாம். ஆனால் அவருக்கு மேல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஓய்வு பெற்ற டாக்டர் கிருஷ்ணன் என்பவரைப் பேராசிரியராகக் (இரண்டாண்டு ஒப்பந்தத்தில்) கொணர்ந்தது துறையிலுள்ளார் அனைவருக்குமே வயிற்றெரிச்சலை விளைவிப்பதாக இருந்தது. இந்த எதிர்ப்புச் சூழ்நிலையில் கிருஷ்ணனால் என்ன சாதித்திருக்க முடியும்? உளவியல் துறையில் டாக்டர் நாராயணராவை துறைத்தலைவராக வைத்திருந்தது போலவே டாக்டர் சுவாமியையும் வைத்திருந்திருக்கலாம்.[25] இப்படி டாக்டர் ரெட்டியின் தனிமுரண்பாடு (Idiosyncrsy) பல்வேறு விதமாகச் செயற்பட்டு ஆசிரியர்களின் வெறுப்புக்குள்ளானார்.

---

25 டாக்டர் சுவாமி இன்று இல்லை ஐந்தாண்டுகட்கு முன்னரே (1988) தற்கொலை செய்து கொண்டதாக செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தேன். இங்ஙனமே பல்லாண்டுகட்கு முன்னர் விலங்கியல் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றிய டாக்டர் பம்பாதிராவ் வேறு பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கு டாக்டர் சுவாமியைப் போலவே தற்கொலை செய்து கொண்டதாக அறிகின்றேன்.

நினைவு - 17 : டாக்டர் ரெட்டியை ஓர் இதய மருத்துவர் என்று சொல்லலாம். கல்வி உலகிற்கு ஓர் இதயம் போன்றிருக்கும் பல்கலைக்கழகத்தின் தூய்மையைக் காத்தவர். அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் கட்டடத்தின் உட்புறச் சூழ்நிலையையும் பேணிக் காத்தவர். சிலசமயம் அவர் ஏறவும் இறங்கவும் பயன்படுத்தப்படும் மின்-ஏணியைப் (Electric lift) பயன்படுத்தாமல் படிக்கட்டுகளில் கால்நடையாகவே ஏறுவார். தாம் செல்லும் வழியில் (கட்டடத்திற்குள்) ஒரு சிறு காகிதத் துண்டு கிடந்தாலும் அதைக் குனிந்து எடுத்து அதை ஒரு மூலையில் வைக்கப் பெற்றுள்ள குப்பைத்தொட்டியில் போடுவார். பலருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக மெதுவாகவே இதைச் செய்வார்; நல்லெண்ணத்தோடுதான் இதைச் செய்வார்; பிறரும் இவ்வாறு செய்யவேண்டும் என்பதற்காகவே செய்து காட்டுவார். இதைச் சில எழுத்தர்கள், கடைசிநிலை ஊழியர்களில் யாரோ ஒருவர் துணைவேந்தர் செய்யும் பாவனையில் செய்து காட்ட, பிறர் இதைக் கண்டு நகைப்பார். இச்செயல் நாடகபாணியில் நடைபெறுவதால் நகைப்பிற்கு இடமாகிச் சிரிப்பை விளைவிக்கும். இச்செயல் ஒரு போலி நடிப்பாகத் (Mimicry) தோன்றும்.

இவரையும் இவர்காலத்தில் பதிவாளராக இருந்த திரு. M.K. இராமகிருட்டிணனையும்[26] சில நகைச்சுவைப் பேராசிரியர்கள் டாக்குக்கஸாட்-சாங்கோபான்சாவாக உருவகப்படுத்திப் பேசுவதுண்டு. துணைவேந்தர் தெலுங்கர் (இல்லை, தமிழர்), பதிவாளர் ஒரு மலையாளி (கேரளத்தைச் சேர்ந்தவர்). வட்டரங்குகளில் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களை அடக்கியாள்பவர் பெரும்பாலும் மலையாளிகளாகவே இருப்பர். இக்காட்சியை நினைந்தவண்ணம் சிலர் துணைவேந்தரைச் சிங்கமாகவும், பதிவாளரை அதை நெறிப்படுத்தும் மலையாளியாகவும் உருவகப்படுத்திப் பேசுவதும் உண்டு. பொதுவாக இத்தகைய கேலிப்பேச்சில் உண்மையும் இருக்கும். ஆனால் எவரும் இருவர் உள்ளத்தையும் துன்புறுத்தும்

26 இவர் துணைவேந்தரிடம் தனிச் சலுகைப் பெற்றவர். ஊதியத்துடன் பல்கலைச் செலவில் மூன்று மாதமோ ஆறு மாதமோ இங்கிலாந்து சென்று நிர்வாகப் பயிற்சி பெற்று வந்ததாக நினைவு.

நோக்கில் செய்வதில்லை. இவர்கள் காலத்தில் நடைபெற்ற நிர்வாகம் போல் இவர்கட்குப் பின்னர் இன்றளவும் ஒரு நிர்வாகம் அமையவில்லை. இப்பொழுது ஒழுங்கு முறை உண்டா? என்பதே ஒரு கேள்விக்குறியாகி விட்டது.

நினைவு - 18 : பெரிய பதவியிலிருப்பவர்கள், ஆணவத்தால் தவறான முடிவு எடுக்கும்பொழுது குழப்பமும் கொந்தளிப்பும் எழும். துன்பப்படுபவர்கள் போர்க்கொடி எழுப்புவார்கள். இன்று கல்விக் கூடங்களில் ஏற்படும் குழப்பத்திற்கு உயர்பதவியில் இருப்பவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே காரணமாகும். மாணவர்கள் மன முதிர்ச்சியின்மையால் சில செயல்களைப் புரிந்தாலும் அவர்களிடம் பரிவுடன் பேசி அவர்களைத் திருத்தலாம்; அவர்களை ஐயக்கண் கொண்டு பார்த்தல் ஆகாது. அவர்களை அணுகுவதில் தந்தை, தனயன் பாசம் வேண்டும். ஒரு சமயம் தேர்தல்காலத்தில் (பெரும்பாலானவர்கள் தேர்வு பிரசாரத்திற்கும், தேர்வு வேலைக்கும் போயிருந்தமையால்) மாணவர்கள் தேர்வுகளை ஒரு மாதம் தள்ளி வைக்கும்படிப் பல்கலைக்கழகத்திற்கு வேண்டுகோள் விடுத்தார்கள். துணைவேந்தர் டாக்டர் ரெட்டி பரிவுடன்தான் செயற்பட்டார். ஆட்சிக்குழு கூட்டத்தில் வைத்து தேர்வை மூன்று வாரம் தள்ளிவைக்க அனுமதி பெற்றார். கூட்டம் முடிந்து துணைவேந்தர் அறைக்குத் திரும்பியதும் பத்துப்பன்னிரண்டு மாணவர்கள் துணைவேந்தரைப் பார்த்து முடிவு தெரிந்து கொள்ளக் காத்திருந்தனர். அவரையும் பார்த்தனர். "நான் ஆட்சிக் குழுவினரைச் சரிப்படுத்தி உங்கள் கோரிக்கையை நிறைவேறச் செய்தேன். நீங்கள் கவலைப்பட வேண்டா. அறைக்குத் திரும்பி நன்றாக படியுங்கள். மாணவர்கட்குத் தானே பல்கலைக்கழகம் உள்ளது? என்னால் இயன்றவரை உங்கட்கு வேண்டிய நன்மைகளைச் செய்வேன்" என்று அன்பாகப் பேசி ஆறுதல் கூறி அனுப்பியிருக்கலாம் அப்படிச் செய்யவில்லை.

காவல்துறை அதிகாரிபோல் செயற்பட்டார். சீறினார்; சினந்தார். கண்ணோட்டம் சிறிதுமின்றி நடந்து கொண்டார். "தன்னைத்தான்

காக்கின் சினங்காக்க; காவாக்கால்; தன்னையே கொல்லும் சினம்"[27] என்று வள்ளுவர் வாக்கை அறியாது செயற்பட்டார். சினம் பலிக்குமிடத்தில் காத்துக் கொள்பவரே சினம் காப்பவர். இஃது அருளுடையவர் செயல். பாரதியாரும்,

**சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற்சுட்டுத்**
**செத்திடுவார் ஒப்பாவார்; சினங்கொள் வார்தாம்**
**மனங்கொண்டு தம்கழுத்தைத் தாமே வெட்ட**
**வாள்கொண்டு கிழித்திடுவார் மானுவாராம்**[28]

என்று கூறியுள்ளார். சினம் கொள்ளும்போது குருதியும் கொதிக்கும்; இதைக்கூட மருத்துவ நிபுணராகிய டாக்டர் ரெட்டி அறியவில்லையே. கூட்டத்தைச் சமாளிப்பதற்கு உளவியல் உண்மை தெரிந்திருக்க வேண்டும். பொறுமையுடன் பேசினால் படமெடுத்தாடும் நாகப்பாம்பு மகுடிக்குமுன் பணிவதுபோல் சீறியெழும் மாணவர்கள் பணிந்து விடுவார்கள். ஆனால் டாக்டர் ரெட்டி என்ன செய்தார்? "நீங்கள் உங்கள் தாடி வளர்ந்துநரை காணும் வரையில் பேராடினாலும் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது; பணிய வைக்க முடியாது; வெளியே நடங்கள்" என்றார். மாணவர்கள் கீழே ஓடி வந்தார்கள். வாயிற்படியில் நின்ற காரை நொறுக்கி நொங்க வைத்தார்கள். பெட்ரோலைத் திறந்து விட்டுக் காரைத் தீக்கரையாக்க நினைத்தார்கள். ஒருவர் கையிலும் தீப்பெட்டி இல்லை. அதற்குள் பணியாளர்களில் சிலர் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். இதற்குள் தேர்வுகள் தள்ளி வைக்கப்பெற்ற செய்தியும் பரவியது; கொந்தளிப்பும் அடங்கியது.

கட்டில்கள் வேண்டுமென்று மாணாக்கர்கள் வேலை நிறுத்தம் தொடங்க நினைத்தபோது டாக்டர் V.C. வாமன்ராவ் (இவருக்கு முன்னிருந்த துணைவேந்தர்) சமாளித்ததை நேரில் கண்டேன். டாக்டர் ஜகந்நாத ரெட்டி முடிவு எடுத்த பிறகும் அதைச் சொல்லாமல் சீறி எழுந்ததையும் கண்டேன். கடுமையாக உழைத்தால் மட்டும்

27. குறள். - 305
28 பா.க. சுயசரிதை (பாரதி அறுபத்தாறு - 8)

போதாது; மனிதருக்கு இங்கிதம் வேண்டும். ஒருவரது ஆணவமலம் (டாக்டர் ரெட்டியிடம் இது நிறைய உண்டு) செயற்படத் தொடங்கினால் அறிவு செயற்படுவதை அது மறைத்து விடும் என்ற சித்தாந்த உண்மையை நினைத்துக் கொண்டேன்.

டாக்டர் ரெட்டித் தம்மைத் துணைவேந்தர் என்று 24 மணிநேரமும் மார்பு நெறித்துக் கொண்டிருப்பவர். ஒரு சமயம் அவர் துணைவியாரிடம் "தாத்தா, பேரன், பேத்திமாரிடம் அன்புடன் கொஞ்சுவாரா?" என்று வினவினேன். அவர்கள், "நீங்க ஒண்ணு. அவர் உம்மா மூஞ்சுடன் விரைப்பாக இருப்பதால் பிள்ளைகள் அவரை நெருங்குவதில்லை" என்றார்கள். "ஆணவமலத்தின் திருவிளையாடல் இது" என்று சொன்னேன்.

பிறிதொரு சமயம் நான் ஒரு சொந்த விஷயமாகப் புதுச்சேரி முதல்வர் (பதவியில் இல்லை) திரு V. வேங்கடசுப்பா ரெட்டியாரைப் பார்க்க வேண்டியிருந்தது. அவருக்கு நான் அறிமுகம் இல்லை. "டாக்டர் ஜகந்நாத ரெட்டி புதுச்சேரியில் இருந்தவராயிற்றே. அவரிடம் ஓர் அறிமுகக் கடிதம் (பரிந்துரை அன்று) பெற்றுப் போனால் பயனுடையதாக இருக்கும்" என்று கருதி ஓர் அறிமுகக் கடிதம் கேட்டேன். அவர் மார்பு நெறித்த நிலையில் "நீங்கள் ஒரு துணைவேந்தரிடம் அறிமுகக் கடிதம் கேட்கிறீர்களா?" என்றார். "ஆம். டாக்டர் ஜகந்நாத ரெட்டியிடம், பரிந்துரைக் கடிதம் அன்று; அறிமுகக் கடிதம்" என்றேன். "துணைவேந்தர் தாரார்" என்றார். "நான் தங்கள்கீழ்ப் பணியாற்றி வருவதால் தருவீர்கள் என்று வந்தேன். போகட்டும்; தங்களைவிட மிக உயர்ந்தவரிடம் பெற்றுக் கொள்வேன். மறுத்தமைக்கு நன்றி" என்று சொல்லி விடைபெற்றேன். "இஃதெல்லாம் ஆணவமலத்தின் வெளிப்பாடு" என்று நினைத்துக் கொண்டேன்.

**நினைவு - 19 :** "சட்டப்படி நடப்பவர்" என்று பெயர் வாங்கின டாக்டர் ரெட்டி சமயோசிதப்படி நடந்து கொள்ளாத பிறகு அவர் புகழ் இறங்கு முகமாயிற்று. அழியாத பழிகளைத் தேடிக் கொண்டார். பல்கலைக்கழக வாழ்க்கையின் இறுதிக்காலத்தில்

அவரை யாரும மதிப்பதில்லை[29] விடைபெறு விழாவுக்காக இவரை எவரும் அணுகினதாகத் தெரியவில்லை. என்ன செய்வது? இவர் நிலை இப்படி? முதல் துணைவேந்தர் கோவிந்த ராஜுலு நாயுடு அவர்கட்கு சிறந்ததோர் விழா எடுத்து, நினைவுச் சின்னம் நல்கி விடை கொடுத்தனர் பல்கலைகழக ஆசிரியர்கள். இரண்டாம் துணைவேந்தர் டாக்டர் V.C. வாமன்ராவ் பதவியைத் துறக்க வேண்டிய நாளில் ஐதராபாத்திலிருந்தார். தொ.பே. மூலம் தம் பொறுப்பைக் கழற்றிக் கொண்டார். ஆசிரியர்கள் விடைபெறு விழாவிற்கு வருமாறு வேண்டினார்கள். அவர் நன்றியுடன் இயலாமையைத் தெரிவித்துக் கொண்டுவிட்டார். பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் பாடுபட்ட துணைவேந்தர் டாக்டர் ரெட்டிக்கு வழியனுப்பாத செயலுக்கு எவரும் வருந்தாமலிரார்.

**நினைவு - 20 :** மனத்தூய்மைக்குப் பெயர்போன டாக்டர் ரெட்டியின் செயல் (பதவி விலகுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் மேற்கொண்டது) அசுரத் தன்மையுடையது. இறையருள்தான் இச்செயலைக் குலைத்து செயலரையும் செயலுக்கு உட்படுத்தப் பெற்றவர்களையும் காத்தது - கண்ணன் பஞ்ச பாண்டவர்களை ஒரு நெருக்கடியான நிலையில் காத்தது போல். அவசர காலநிலை அமுலில் இருந்த சமயம். தத்துவத்துறை துணைப் பேராசிரியர் டாக்டர் ஹெர்பர்ட், மானிட இயல் துறைத் துணைப் பேராசிரியர் முனிரத்னம் ரெட்டி, இந்தித்துறைப் பேராசிரியர் துறைத்தலைவர் டாக்டர் S.T. நாசிம்மாசாரியார்,[30] அடியேன்[31] ஆகிய நால்வரையும் தற்காலிகப் பதவி நீக்கம் செய்வதற்குப் பரிந்துரைக்குமாறு

29 இக்காரணத்தால்தான் அவர் ஆர்வத்துடன் நிறுவிய கலையரங்கத்திற்கு "ஜகந்நாத ரெட்டி கலையரங்கம்" என்ற பெயர் சூட்ட மறுத்துவிட்டது பல்கலைக்கழக நிர்வாகம் என்று கருதவேண்டியுள்ளது.

30 இவர்கள் மூவரும் உள்ளூர் அரசியலில் (Local Politics) சம்பந்தப்பட்டிருக்கலாம்.

31 "நான் உண்டு, என் வேலையுண்டு" என்று இருப்பவன் என்னை ஏன் சேர்க்கார் என்பதை ஊகிக்க முடியவில்லை

துணைவேந்தர் முதல்வரைக் கேட்க (அப்போது முதல்வராக இருந்தவர் ஆங்கிலப் பேராசிரியர் M.V. இராமசர்மா) அவரும் அவ்வாறே பரிந்துரைத்தாராம். அங்ஙனமே தேர்வு-ஆணைய அதிகாரி M. குடும்பராவ் என்பாரையும் தற்காலிகப் பதவி நீக்கத்திற்கு குறிவைத்தார் துணைவேந்தர். இச்செய்தி எப்படியோ வெளிப்பட்டுக் கல்வி அமைச்சர் M.V. கிருஷ்ணராவ் காதிற்கு எட்ட அவர் அரசியல் சார்பாகவுள்ள ஆட்சிக் குழுவினர்களின் காதைக் கடித்து அனுப்பினார். திரு குடும்பராவ் M.V. கிருஷ்ணராவின் உறவினர்; மிகவும் வேண்டியவர். இதனால் அவர் காக்கப்பெற்றார். இவர் காரணமாக அனைவரும் காக்கப்பெற்றனர். "நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது போலாயிற்று நிலைமை.

ஆட்சிக்குழு கூட்டத்தில் நடைபெற்றது என்ன? அரசு சார்பாக வந்த ஓர் உறுப்பினர்; "பதவியிலிருந்து விலகிப்போகும் துணைவேந்தருக்கு அதுவும் அவர் கலந்து கொள்ளும் இறுதிக் கூட்டத்தில், இத்தகைய தீங்கு விளைவிக்கும் செயல் எதற்கு? புதிய துணைவேந்தர் இந்த விஷயத்தைக் கவனித்துக் கொள்வார். இந்தக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலிலுள்ள எந்தப் பொருளைப்பற்றியும் தீர்மானிக்க வேண்டா. ஆறு ஆண்டுகளாகப் பல்கலைக்கழகத்தை நன்முறையில் நடத்திய துணைவேந்தருக்கு நன்றி செலுத்தி சிற்றுண்டி விருந்துடன் கூட்டத்தை முடித்துக் கொள்வோம்" என்று கூறியதால் கூட்டம் நிறைவு பெற்றதாம். திருமதி இந்திரா காந்தி நாட்டின் ஒழுங்குமுறைக்காகக் கொண்டுவந்த அவசரகால நிலைமையைப் பல்வேறு துறைகளில் மேல்மட்டத்தில் பணியாற்றியவர்கள் இத்திட்டத்தையே குலைத்து அந்த அம்மையாருக்கு அழியாப் பழியைத் தேடித்தந்தனர். சர்க்காரியா கமிஷனும் தோன்றியது. நாட்டின் செல்வம் சர்க்காரிய கமிஷனால் வீணாகக் கரைந்தது. ஏதோ திருப்பதியில் பணியாற்றிய காரணத்தால் டாக்டர் ஜகந்நாத ரெட்டியை ஏழுமலையான் தடுத்து நிறுத்தி அவரைக் காத்தான். அவசர நிலையில் கயவர்களின் கைங்கரியத்திற்குப் பலியாகிச் சொல்லொணாத் துயரத்தை